நிதித்துறை, சென்னை-9 / செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, சென்னை-9.
நிதி(வரவு-செலவு. I)துறை, சென்னை-9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
மாண்புமிகு முதலமைச்சரின் தனிச் செயலர், சென்னை-9
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், நிதியமைச்சர் அலுவலகம், சென்னை-9
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், வருவாய்த்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு கல்வியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், கல்வியமைச்சர் அலுவலகம், சென்னை-9
நிதித்துறை செயலரின் தனிச் செயலர், சென்னை-9
சட்டத்துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை-9
தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை-9
உதிரிகள்

ஆணைப்படி/அனுப்பப்படுகிறது

பிரிவு அலுவலர்
.95

STY &

der the auspices of
Seva

006533

EIVED from

of Rupees

-113-

14 ஜூன் 1995

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

[illegible] - பேரறிஞர் அண்ணாவின் நூல்கள் - எழுத்து வடிவங்கள் - அனைத்தும் நாட்டுடைமையாக்குதல் - பேரறிஞர் அண்ணாவின் துணைவியார் [illegible] ராணி அண்ணாதுரை அவர்களுக்கு குடும்ப நலப் பாதுகாப்புக்காக பரிவுத்தொகை [illegible] செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

- -

No. 363186 Dt. 24/3/95

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டு (த.வ1-1)த் துறை

அரசாணை (நிலை) எண். 128

நாள்: 2.6.1995
திருவள்ளுவராண்டு 2026
யுவ - வைகாசி 19

படிக்க:-

பக். 5 — 1. அரசாணை (நிலை) எண். 190 தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை நாள்: 15.9.1994

பக். 7 — 2. அரசாணை (நிலை) எண். 228 தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை நாள்: 28.10.1994

பக். 11, 43. — 3. தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித எண். அ2/11819/94 நாள்: 14.2.94 மற்றும் 17.2.95.

....

ஆணை:-

பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் விழாவையொட்டி அண்ணாவின் அனைத்து படைப்புகள், எழுத்து வடிவங்கள் குறித்த பதிப்புரிமைகள் தனியாரிடம் மட்டும் அமைந்திருப்பதை இலக்கிய பொது நலன் கருதி நாட்டு மக்களுக்கு உரிமையாக்கும் நந்நோக்குடன் அண்ணாவின் இலக்கியப் படைப்புகள், எழுத்து வடிவங்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி, பார்வை 1-இல் கண்ட அரசாணையில் அரசு ஆணையிட்டுள்ளது. அண்ணாவின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டாலும், இதற்குரிய பரிவுத் தொகையை காலஞ்சென்ற அண்ணாவின் குடும்பத்திற்கு உரிய காலத்தில் வழங்க வேண்டி, இதனை ஆராயும் பொருட்டு தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில் வல்லுநர் குழுவை அமைத்து பார்வை 2-இல் கண்ட அரசாணையில் அரசு ஆணையிட்டுள்ளது.

2. வல்லுநர் குழுவின் பரிந்துரையின்பேரில் பேரறிஞர் அண்ணாவின் நூல்கள், எழுத்து வடிவங்கள் ஆகிய அனைத்து படைப்புகள் நாட்டுடைமையாக்கப்படுவதன் மூலம் பேரறிஞர் அண்ணாவின் துணைவியார் திருமதி. ராணி அண்ணாதுரை அவர்களுக்குப் பரிவுத் தொகையாக ரூ. 75 இலட்சம் (ரூபாய் எழுபத்தைந்து இலட்சம் மட்டும்) அவர்களின் குடும்ப நலப் பாதுகாப்புக்குப் பயன்படும் வகையில் அரசு ஒப்பளிப்பு செய்து இதன் மூலம் ஆணையிடுகிறது.

3. பேரறிஞர் அண்ணாவின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டதன் மூலம், நாட்டுடைமையாக்கப்பட்ட நாள் முதல் அவர்தம் படைப்புகளின் பதிப்புரிமைகள் அனைத்தும் அரசையே சாரும். இதுகாறும் வெளிவராத பேரறிஞர் அண்ணாவின் நூல்களைப் புதிதாக வெளியிட முதல்நிலையில் அரசின் முன்இசைவைப் பதிப்பாளர்கள் பெற வேண்டும்.

4. இதற்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

> "2202. பொதுக்கல்வி - 05. மொழிவளர்ச்சி - 800 ஏனைய செ... - எட்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் - தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியன - 09. உத... மானியங்கள் - 3. ஏனைய வெகுமதிகள் (த.தொ.கு.2202 05 800 JE 0988)

5. பத்தி 2-ல் அனுமதிக்கப்பட்டுள்ள தொகையைப் பெற்று அதனை பேரறிஞர் அண்ணாவின் தலைவியார் திருமதி. இராணி அண்ணாத்துரைக்கு காசோலை மூலமாக வழங்குமாறு தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. பத்தி 2-இல் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினம் புதிய பணிகள் குறித்த செலவினமாகும். சட்டப்பேரவையில் இதற்கான ஒப்புதல் விரைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதல் கிடைக்கும்வரை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெற்று இச்செலவு செய்யப்படும். இது குறித்த ஆணை, நிதி(வரவு-செலவு. I) துறையால் பிறப்பிக்கப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் அனுமதிக்கும்பொருட்டு அரசு ஆணையின் நகலை (இரண்டு) இணைத்து வரையறுக்கப்பட்ட படிவத்தில் நிதி (வரவு-செலவு. I)துறைக்கு விண்ணப்பிக்குமாறு தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை, நிதித்துறை அலுவல் சார்பற்ற எண். 43335/கல்வி-I/95-1, நாள்: 25.5.1995இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா.பா.இளங்கோவன்,
அரசு செயலர்

பெறுநர்:
திருமதி. இராணி அண்ணாத்துரை, எண்.7, அவ்வையூ சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை-108
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை-79.
நகல்:-
நிதித்துறை, சென்னை-9 / செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, சென்னை-9.
நிதி (வரவு-செலவு. I) துறை, சென்னை-9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
மாண்புமிகு முதலமைச்சரின் தனிச் செயலர், சென்னை-9
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், நிதியமைச்சர் அலுவலகம், சென்னை-9
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், வருவாய்த்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு கல்வியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், கல்வியமைச்சர் அலுவலகம், சென்னை-9
நிதித்துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை-9
சட்டத்துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை-9
தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை-9
உதிரிகள்

ஆணைப்படி/அனுப்பப்படுகிறது

தமிழ்நாடு அரசு

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை – தமிழ் வளர்ச்சி – காலஞ்சென்ற பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் பாடல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கல் மற்றும் அவரது மரபுரிமையாளர்களுக்கு ஈட்டுத்தொகை வழங்குவது குறித்து – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டு (தவ1-1)த் துறை

அரசாணை (நிலை) எண்.186

நாள் 14.7.95.
திருவள்ளுவர் ஆண்டு 2026
யுவ ஆடி 30

008256

படிக்கப்பட்டது:

1) தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.ஆ2/9990/93 நாள் 11.11.93.
2) திருமதி கௌரவம்மாளின் 9.11.93-ம் நாளிட்ட விண்ணப்பம்.

– * –

ஆணை:

தமது எளிமையான கருத்தாழமிக்க பாடல்களால் அழியாப் புகழ்பெற்ற காலஞ்சென்ற கவிஞர் பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் அவர்கள் இயற்றிய பாடல்கள், படைப்புகள் மற்றும் எழுத்து வடிவங்கள் அனைத்தையும் கலை, இலக்கியம் மற்றும் சமுதாயப் பொது நலன் கருதி நாட்டுடைமையாக்க அரசு முடிவு செய்து ஆணையிடுகிறது.

2. பட்டுக்கோட்டை கலியாணசுந்தரத்தின் பாடல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டதன் மூலம், நாட்டுடைமையாக்கப்பட்ட நாள் முதல் அவர் தம் படைப்புகளின் பதிப்புரிமைகள் அனைத்தும் அரசையே சாரும். இதனால் வெளியார் கலியாணசுந்தரத்தின் பாடல்களைப் புதிதாக வெளியிட முன்னிலையில் அரசின் முன்னிசைவைப் பதிப்பாளர்கள் பெற வேண்டும்.

3. திரு. பட்டுக்கோட்டை கலியாணசுந்தரத்தின் அனைத்து எழுத்துப் படைப்புகளையும் நாட்டுடைமையாக்குவதன் பொருட்டு பதிப்புரிமை ஈட்டுத் தொகையாக அன்னாரது மரபுரிமையாளரான அவரது மனைவியார் திருமதி கௌரவம்மாள் மற்றும் அன்னாரது மகன் திரு பிரபாகரவேல் ஆகியோருக்கு ரூ.10 லட்சம் (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) வழங்க முடிவு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் குறிப்பிடப்பட்ட ஈட்டுத் தொகையை திரு. பட்டுக்கோட்டை கலியாணசுந்தரத்தின் மரபுரிமையருக்கு வழங்குவதற்கான நிதி ஒப்பளிப்பு ஆணைகள் தனியே பிறப்பிக்கப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா. [illegible]
அரசு செயலாளர்

பெறுநர்
திரு க.கௌரவம்மாள், க/பெ.காலஞ்சென்ற பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம், செங்கப்படுத்தான்காடு அஞ்சல், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்-6[illegible]
இயக்குநர், தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறை, சென்னை-108.
மாநில கணக்காயர் தலைவர், சென்னை-18.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை-79.

நகல்:
நிதித்துறை, சென்னை-9.
செய்தி மற்றும் சுற்றுலாத்துறை, சென்னை-9.
நிதி (வரவு-செலவு-1)த்துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
முதலமைச்சரின் தனிச் செயலர், சென்னை-9.
நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
கல்வியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை-9.

-3-

009812

<u>சுருக்கம்</u>

தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை - தமிழ் வளர்ச்சி - காலஞ்சென்ற பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கல் மற்றும் அவரது மரபுரிமையர்களுக்கு ஈட்டுத் தொகை வழங்குவது குறித்து - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டு (தவ1-1)த் துறை

அரசாணை (நிலை) எண்.218

நாள் 25.8.1995.
திருவள்ளுவராண்டு 2026
யுவ ஆவணி 9.

படிக்க.

அரசாணை (நிலை) எண்.186, தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை நாள் 14.7.1995.

<u>ஆணை.</u>

பார்வையில் கண்ட அரசாணையில் காலஞ்சென்ற கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் இயற்றிய பாடல்கள், படைப்புகள் மற்றும் எழுத்து வடிவங்கள் அனைத்தையும், இலக்கியம் மற்றும் சமுதாயப் பொதுநலன் கருதி நாட்டுடைமையாக்கி அரசு ஆணையிட்டுள்ளது.

2. திரு பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் அனைத்து எழுத்துப் படைப்புகளும் நாட்டுடைமையாக்கப்பட்டதன் பொருட்டு அன்னாரது மரபுரிமையர்களான அவரது மனைவியார் திருமதி கௌரவம்மாள் மற்றும் அவரது மகன் திரு க.குமாரவேலு ஆகியவர்களுக்கு பதிப்புரிமை ஈட்டுத்தொகையாக தலா ரூ.5/- லட்சம் வீதம் ரூ.10/- லட்சம் (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) அவர்களின் குடும்ப நலப்பாதுகாப்புக்கு பயன்படும் வகையில் அரசு ஒப்பளிப்பு செய்து இதன் மூலம் ஆணையிடுகிறது.

3. இதற்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும்.-

"2202. பொதுக்கல்வி - 05. மொழி வளர்ச்சி - 800. ஏனைய செலவு - எட்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II. மாநிலத் திட்டம் - JE. தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியன - 09. உதவி மானியங்கள் 8. ஏனைய வெகுமதிகள்-(த.தொ கு.2202 05 800 JE 0988).

4. பத்தி 2ல் அனுமதிக்கப்பட்டுள்ள தொகையைப் பெற்று அதனைக் காலஞ்சென்ற பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் மரபுரிமையர்களான அவரது மனைவியார் திருமதி கௌரவம்மாள் மற்றும் அவரது மகன் திரு க.குமாரவேலு ஆகியோர்களுக்கு காசோலை மூலமாக வழங்குமாறு தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. 1995-96 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு (Revised Estimate)/இறுதி மாற்ற விவர அறிக்கையில் (Final Modified Apropriation) நிதியொதுக்கீட்டை எதிர்நோக்கி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சரிக்கட்டப்பட வேண்டிய பட்டிகள் எவையேனும் நிலுவையில் இருப்பின் அவற்றைப் பொருட்படுத்தாமல் இச் செலவினத்திற்குரிய பட்டியை உடன் அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை-79 கேட்டுக்கொள்ளப்படுகிறார். இச்செலவினத்திற்காகும் கூடுதல் நிதியொதுக்கீட்டினை 1995-96 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/இறுதி மாற்ற விவர அறிக்கையில் பெற்றுக்கொள்ளத்தக்க நடவடிக்கையினைத் தமிழ் வளர்ச்சி இயக்குநர் விரைந்து மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

......2.

/ 2 /

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.72566/கல்வி(2)/95 நாள் 23.8.95இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி
அரசு செயலாளர்.

பெறுநர்
திரு க. கௌரவம்மாள்,
க/பெ. காலஞ்சென்ற பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்,
செங்கப்படுத்தான்காடு அஞ்சல், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சை மாவட்டம்-6
திரு க. குமாரவேலு, (காலஞ்சென்ற) பட்டுக்கோட்டை கலியாண சுந்தரத்தின் ம
செங்கப்படுத்தான்காடு அஞ்சல், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்
614 613.
இயக்குநர், (பொறுப்பு) தமிழ் வளர்ச்சி இயக்ககம், குறளகம், சென்னை-108.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை-79.
நகல்:
நிதித்துறை, சென்னை-9.
செய்தி (மற்றும்) சுற்றுலாத்துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சரிடம் தனிச் செயலர், சென்னை-9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு கல்வியமைச்சரின் முதநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித்துறை, செயலரின் தனிச் செயலர், சென்னை-9.
தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

சதிமோ/28.8.95.

பிரிவு அலுவலர்.
28.8.95

சுருக்கம்.

தமிழ் வளர்ச்சி – மறைந்த மூத்த தமிழறிஞர் தேவநேயப் பாவாணரின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்குதல் – தேவநேயப் பாவாணரின் மரபுரிமையருக்குக் காப்புத் தொகை ரூ 20 இலட்சம் ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை

அரசாணை (நிலை) எண். 167   நாள்: 23.8.1996

9293   படிக்க:-

1. திரு. தே. மணிமன்றவாணன் (மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் மகன்) மனு நாள்: 21.6.96.

2. தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித எண். இ2/6906/96 நாள்: 22.7.96.

ஆணை:

மொழி ஞாயிறு எனத் தமிழ் நெஞ்சங்களால் புகழப்பட்டவரும், தனித் தமிழ் இயக்கத் தலை நாயகரும், அரசின் அகரமுதலித் தயாரிப்பைத் தொடங்கிட வழி நின்றவருமான மூத்த பெருந்தமிழ்ப் பெருமகனார் மறைந்த தேவநேயப் பாவாணர் அவர்களின் அரிய நூல்களை அரசுடைமையாக்கவும், அவரது குடும்பத்திற்குக் காப்பு நிதி வழங்கவும் ரூ 20 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

2. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க மறைந்த மூத்த தமிழறிஞர் தேவநேயப் பாவாணரின் மகன் திரு. தே. மணிமன்றவாணன் அவர்கள் அரசுக்குச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தினை அடிப்படையாகக்கொண்டு தமிழ் வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை பெறப்பட்டது.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ள குறிப்புரையின் அடிப்படையில் திரு. தேவநேயப்பாவாணர் அவர்களால் எழுதப்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டம் நேசமணி பதிப்பகம் மற்றும் சென்னையிலுள்ள திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த கழகப் பதிப்பகம் ஆகியவற்றின் மூலம் வெளியிடப்பட்டுள்ள அனைத்து நூல்களையும் திரு. மணிமன்றவாணன் அவர்களிடமிருந்து பெற்று, அனைத்தையும் நாட்டுடைமையாக்கி அதற்கீடாகக் காப்புத் தொகையாக ரூ 20 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

4. மறைந்த தமிழறிஞர் தேவநேயப்பாவாணரின் அனைத்து நூல்களையும் நாட்டுடைமையாக்கப்பட்டதன் பொருட்டு அதற்கீடாக காப்பு நிதியாக வழங்கப்படும் தொகை ரூ 20 இலட்சத்தை சமபங்காகப் பிரித்து (அதாவது ஆறு பங்காக) ஒரு பங்குத் தொகையினை பாவாணர் அவர்களின் முதல் மனைவியின் மரபுரிமையரான திரு. மேசயர்தாசு மற்றும் அவரது உடன்பிறப்புகளுக்கும், எஞ்சிய ஐந்து பங்கு தொகையினை இரண்டாவது மனைவியின் மரபுரிமையரான திரு. நச்சினார்க்கினியநம்பி, (மரணமடைந்ததால் அன்னாருடைய வாரிசுகள் மகன், மகள் உள்ளனர்) திரு. செல்வராசு, திரு. அடியார்க்கு நல்லான், திருமதி. மங்கையர்க்கரசி மற்றும் திரு. மணிமன்றவாணன் ஆகியோர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென அரசு ஆணையிடுகிறது.

தொ.2.

5. மறைந்த முத்த தமிழறிஞர் தேவநேயப் பாவாணரின் அனைத்து நூல்களும் நாட்டுடைமையாக்கப்பட்டதன் மூலம், நாட்டுடைமையாக்கப்பட்டு இவ்வாணை வெளியிடப்படும் நாளிலிருந்து அனைத்து நூல்களும் அரசுடையே சாரும். இதுகாறும் வெளிவராத தேவநேயப்பாவாணரின் நூல்களைப் புதிதாக வெளியிட முதலில் அரசின் முன்னிசைவைப் பதிப்பாளர்கள் பெற வேண்டும்.

6. இதற்கான செலவினம் கீழ்க்காணும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 பொதுக்கல்வி- 05 மொழி வளர்ச்சி-800
ஏனையச் செலவு- எட்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்-11
மாநிலத் திட்டம் ஜெஜு-தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள்,
பரிசுகள் முதலியன-09 உதவி மானியங்கள் -8 ஏனைய
பெருமதிகள் (த.தொ.கு.2202 05 800 ஜெஜு 0988)

7. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையைப் பெற்று அதனை மேலே பத்தி 4-ல் குறிப்பிடப்பட்ட மறைந்த முத்த தமிழறிஞர் தேவநேயப்பாவாணர் அவர்களின் மரபுரிமையாளர்களுக்குக் காசோலை மூலமாக வழங்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. 1996-97 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/ இறுதித் திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி இயக்குநரால் சரிக்கட்டப்பட வேண்டிய பட்டியல் எவையேனும் நிலுவையிலிருப்பின் அவற்றைப் பொருட்படுத்தாமல் இச்செலவினத்திற்குரிய பட்டியலை உடன் அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை-79 கேட்டுக்கொள்ளப்படுகிறார். இச்செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கீட்டினை 1996-97-ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/ மாற்றியமைக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் பெற்றுக்கொள்ளத் தக்க நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ளுமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.409/கசெ/96, நாள்:22.8.96-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

வெ. பழனிச்சாமி,
அரசின் செயலாளர்

பெறுநர்
திரு. தே. மணிமன்றவாணன்,
767-அ, பரமசாமி முதலியார் சாலை,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை-600078
சம்பந்தப்பட்ட நபர்கள்.
(மணிமன்றவாணன் மூலமாக)
தமிழ் வளர்ச்சி இயக்குநர் (பொ.)
குறளகம், சென்னை-108
மாநில கணக்காய்வுத் தலைவர்,
சென்னை-18/35
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு),
சென்னை-79

நகல்:
நிதித்துறை, சென்னை-9
செய்தி மற்றும் சுற்றுலாத்துறை,
சென்னை-9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை-9
கல்வியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை-9
நிதிச் செயலாளரின் தனிச் செயலர்,
சென்னை-9
தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறைச் செயலாளரின்
தனிச் செயலாளர், சென்னை-9
உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//
பா. சிவா
பிரிவு அலுவலர்

நகல்:

9

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – மறைந்த, தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படும் தமிழறிஞர் மறைமலையடிகள் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குதல் – மறைமலையடிகளாரின் மரபுரிமையருக்கு காப்புத் தொகை ரூ.20இலட்சமும் மற்றும் கூடுதல் செலவினம் ரூ.65,250/–க்கு ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை – வெளியிடப்படுகிறது:

தமிழ் வளர்ச்சி–பண்பாட்டுத் (தவ1–1) துறை

அரசாணை (நிலை) எண்.180

நாள்: 8.7.1997
ஆனி 24, ஈஸ்வர,
திருவள்ளுவர் ஆண்டு 2028.

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் நேர்முகக் கடித எண்.:
ஆ2/6143/97, நாள் 13.3.97 மற்றும் 9.4.97.

....

ஆணை:

1997–98ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலாவாக தமிழ் வானில்
ஒளிவிட்டவரும் நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம்
குற்றமே எனச் சீறியெழுந்த செந்நாட்புலவருமான
செந்தமிழ் வித்தகர்–இணையான ஏந்தல் தமிழறிஞர்
மறைமலையடிகளார் அவர்கள் தமிழுக்கு அளித்துள்ள
படைப்புகள் அனைத்தையும், அரசுடைமையாக்கவும்,
அவரது குடும்பத்தினருக்குக் காப்புநிதி வழங்கவும்,
ரூபாய் இருபது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்"

2. மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க, தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படும் தமிழறிஞர் மறைமலையடிகள் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குவது தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை பெறப்பட்டது.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்து மறைமலையடிகளாரின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும், அதற்கு ஈடாக அடிகளார் குடும்பத்திற்கு காப்புநிதியாக ரூ.20இலட்சத்தை இணைப்பில் கண்டுள்ளவாறு (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) அன்னாரின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்களுக்கு சமபங்காகப் பிரித்துப் பகிர்ந்தளிக்க வேண்டுமென அரசு ஆணையிடுகிறது.

4. மேலும், அடிகளாரின் விருப்ப ஓப்பாவணத்தின்படி (Will) "அம்பிகாபதி–அமராவதி", 'மனிதவசியம்', "அறிவுரைக்கொத்து", 'திருக்குறள் ஆராய்ச்சி' ஆகிய நூல்களின் உரிமை கனகராயர் அவர்களிடம் உள்ளதாலும், இவர் அடிகளாரிடம் பல ஆண்டுகள் தொண்டு செய்துள்ளதாலும் இவர் இயற்கை எய்தியபின் அன்னாரின் மக்கள் திருவாளர்கள் 1) க.சந்திரசேகரன், 2) க.சண்முகம் மற்றும் 3) க.கண்ணப்பன் ஆகியோர்களிடம் உள்ள அனைத்து நூல்களையும் பெற்று அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும் அதற்கீடாக ரூ.10,000/– வீதம்

ரூ.30,000/-(ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) காப்புத் தொகையாக வழங்கவும், இக்காப்பீட்டுத் தொகையினை பெறவரும் அடிகளாரின் மரபுரிமை-யாளர்களுக்கு போக்குவரத்து செலவினமாக ரூ.3,600/-(ரூபாய் மூவாயிரத்து அறுநூறு மட்டும்) மற்றும் மரபுரிமையாளர்களுக்கு சிறப்பு செய்தல் செலவினமாக ரூ.31,650/- (ரூபாய் முப்பத்தோராயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்) ஆக மொத்தம் ரூ.65,250/-க்கு ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

5. அடிகளார் நூல்கள் அனைத்தையும் அதற்கீடாக அடிகளார் குடும்பத்திற்கு காப்புநிதி ரூ.20இலட்சம் மற்றும் திரு.கனகராயர் மக்கள் திரு.க.சந்திரசேகரன், க.சண்முகம் மற்றும் க.கண்ட்டன் ஆகியோர்களுக்கு வழங்கும் தொகை ரூ.30,000/-மும் சேர்த்து ரூ.20,30,000/- கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்.

"2202. பொதுக்கல்வி - 05. மொழி வளர்ச்சி -
800. ஏனைய செலவு - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II. மாநிலத் திட்டம் - ஜேஜே. தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 09. உதவி மானியங்கள் - 08. ஏனைய மானியங்கள்".
(த.தொ.கு.எண்.2202 05 800 ஜேஜே.0988).

6. போக்குவரத்துச் செலவு/பயணப்படிகளால் ஏற்படக்கூடிய செலவினம் ரூ.3600/- கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202. பொதுக்கல்வி - 05. மொழி வளர்ச்சி - 001. நெறிப்படுத்தலும் நிருவாகமும் - I. திட்டத்தில் சேராதது - ஏஏ. தமிழ் வளர்ச்சி இயக்ககம் - 60. அலுவல் சாராற்ற உறுப்பினர்களுக்கு பயணப்படி/நாள்படி".
(த.தொ.கு.எண்.2202 05 001 ஏஏ 6009)

7. மரபுரிமையாளர்களுக்குப் பொன்னாடை, பேழைகள், சால்வைகள் மற்றும் இதர சிறப்பு செய்தல் செலவினங்களுக்கு ஏற்படக்கூடிய செலவுத்தொகை ரூ.31,650/-ஐ கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202. பொதுக்கல்வி - 05. மொழி வளர்ச்சி - 001. நெறிப்படுத்தலும் நிருவாகமும் - I. திட்டத்தில் சேராதது - ஏஏ. தமிழ் வளர்ச்சி இயக்ககம் - 05. அலுவலகச் செலவுகள் - 02. ஏனைய சில்லரைச் செலவுகள்".
(த.தொ.கு.எண்.2202 05 001 ஏஏ 0523)

8. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகையைப் பெற்று மறைமலையடிகளாரின் மரபுரிமையாளர்களுக்கு காசோலை மூலம் வழங்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. 1997-98ஆம் ஆண்டு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சரிகட்டப்படவேண்டிய பட்டியல் எவையேனும் நிலுவையில் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல், இச்செலவினத்திற்குரிய பட்டியலை உடனே அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79 கேட்டுக்கொள்ளப்படுகிறார். இச்செலவினத்திற்கு ஆகும் கூடுதல் நிதி ஒதுக்கீட்டினை 1997-98ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீட்டில் உரிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பிவைக்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

10. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்.191/இ.செ.(எல்எஸ்ஆர்/97) நாள் 4.7.97இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வை.பழனிச்சாமி,
அரசு செயலாளர்.

பெறுநர்:

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108.
மரபுரிமையர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் (இயக்குநர் மூலமாக).
மாநிலக் கணக்காயவுத் தலைவர், சென்னை-18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79.
செய்தி (மற்றும்) சுற்றுலாத் துறை, சென்னை-9.
முதலமைச்சரின் தனிச்செயலர், சென்னை-9.
கல்வியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
தமிழ் ஆட்சிமொழி-பண்பாட்டுத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலாளர், நிதித்துறை, சென்னை-9.
செயலாளர், தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(ஒம்.) ....,
பிரிவு அலுவலர்.

// உண்மை நகல் //

கண்காணிப்பாளர் 23.7.97

தஅ/23/7.

23/7.

(2)

10

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - மறைந்த தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படும் தமிழறிஞர் மறைமலையடிகளாரின் நூல்களை நாட்டுடைமையாக்குதல் - மறைமலையடிகளாரின் மரபுரிமையினர்க்கு மட்டும் பங்கு பரிவுத் தொகை கூடுதலாக ரூ.10 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை - வெளியிடப்படுகிறது.

- -

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் (தவ1-1) துறை

அரசாணை (நிலை) எண்:218.

நாள்: 26-8-1997.
ஆவணி 10, ஈஸ்வர,
திருவள்ளுவர் ஆண்டு 2028.

படிக்க:

1) அரசாணை (நிலை) எண்:180, தமிழ் வளர்ச்சி -பண்பாட்டுத் துறை, நாள்:8.7.1997

2) தமிழ் வளர்ச்சி இயக்குநரின் நேர்முகக் கடிதம் எண்:அ2/6143/97, நாள்:6.8.97

***

ஆணை:

பார்வையில் கண்டுள்ள அரசாணையில் மறைமலையடிகளாரின் நூல்களை நாட்டுடைமையாக்கவும் அதற்கு ஈடாக அடிகளார் குடும்பத்திற்கு காப்பு நிதியாக ரூ.20 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) அதன் இணைப்பில் கண்டுள்ளவாறு அன்னாரின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்களுக்கு சமபங்காக பிரித்து பகிர்ந்தளிக்க வேண்டுமென அரசு ஆணையிட்டது.

2. தமிழ் வளர்ச்சி இயக்குநர் தம்முடைய 6.8.97 நாளிட்ட கடிதத்தில் சென்னை கலைவாணர் அரங்கில் 4.8.97 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு முதலவர் அவர்களால் மறைமலையடிகளார் அவர்களின் மரபுரிமையினருக்கு பங்கு பரிவுத் தொகையும், திரு.[illegible] மக்களுக்கு உரிய காப்புத் தொகையும் வழங்கப்பட்டது என்றும் மேலும் விழாவில் மறைமலையடிகளார் மரபுரிமையினருக்குக் கூடுதலாக ரூ.10 இலட்சம் வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது என்றும் அக்கூடுதல் தொகை அடிகளார் மரபுரிமையினருக்கு கூடுதல் பரிவுத் தொகையாக ரூ.10 இலட்சம் இணைப்பில் உள்ளவாறு ஒப்பளிப்பு செய்து ஆணையிடுமாறு அரசை வேண்டியுள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவை அரசு ஏற்றுக்கொண்டு மறைமலையடிகளாரின் மரபுரிமையினருக்கு கூடுதல் பரிவுத் தொகையாக ரூ.10 இலட்சத்திற்கு இணைப்பில் கண்டுள்ளவாறு ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. கூடுதல் பரிவுத் தொகை அடிகளாரின் மரபுரிமையினர்களுக்கு மட்டும் வழங்கப்பட வேண்டுமென்று அரசு அறிவுறுத்துகிறது.

4. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்கள் கீழ்க்கண்டவாறு கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்:

"2202. பொதுக் கல்வி - 05. மொழி வளர்ச்சி - 800, ஏனைய செலவு - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் -II. மாநிலத் திட்டம் - JE. தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியன தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 09. உதவி மானியங்கள் - 08. ஏனைய மானியங்கள்"

(த.தொ.கு.எண்:2202 05 800 JE 0988)

..2/-

6. 1997-98ஆம் ஆண்டு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டினை எதிர்நோக்கி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சரிகட்டப்படும் பட்டியல் எவையேனும் நிலுவையில் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல் இச்செலவினத்திற் பட்டியலை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79 கேட் கொள்ளப்படுகிறார். தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பு தொகுதி-I, பிரிவுக்கூறு 99-இன்கீழ் முன்பணமாகப் பெறவும், பின்வர் உள்ளபடியான செலவுச் சீட்டுகளின் பட முன்பணத்தினைச் சரிகட்டவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்: 3928/FS/P/97, நாள்: 22.8.97-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வை. பழனிச்சாமி,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>:

✓ தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108.
மரபுரிமையர்கள் (இயக்குநர் மூலமாக)
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79.
செய்தி (மற்றும்) சுற்றுலாத் துறை, சென்னை-9.
முதலமைச்சரின் தனிச் செயலர், சென்னை-9.
கல்வியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
தமிழ் ஆட்சிமொழி-பண்பாட்டுத் துறை (மற்றும்) இந்துசமய அறநிலையத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலாளர், நிதித் துறை, சென்னை-9.
செயலாளர், தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(கையொப்பம்) 27
பிரிவு அலுவலர்.
26/8/97

எம்.வி.26/8.

அரசாணை (நிலை) எண்:218, தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் (தவ1-1) துறை, நாள்:26-8-1997.

இணைப்பு

மறைமலை அடிகளார் நூல்கள் நாட்டுடைமையாக்கம்-கூடுதல் பரிவுத் தொகை
ரூ.10 இலட்சம் - மரபுரிமையர்க்குப் பங்கீடு-விவரப் பட்டியல்

மனைவி பெயர்	மகள்/மகன் தொ. எண்.	மகள்/மகன் பெயர்	உரிய பங்குத் தொகை	பெயரன்/பெயர்த்தி தொ. எண்.	பெயரன்/பெயர்த்தி பெயர்	வழங்கத் தக்க ஈவுத் தொகை
1.	2.	3.	4.	5.	6.	7.
			ரூ.			ரூ.
திருமதி.சவுந்தரவல்லி (முதல் மனைவி)	1.	திருமதி.சிந்தாமணி (மறைவு) (இவர் தம் மகள் திருமதி.ஞானாம்பாள் ஆவார். இவர் இயற்கை எய்தினார். இவர் அடிகளாரின் மகன் திரு.திருநாவுக்கரசு அவர்களின் மனைவி ஆவார்)	90,909.00	1.	திரு தி.ஆலங்காடன்	12,987.00
				2.	திரு தி.திருவுடையான்	12,987.00
				3.	திரு தி.தாயுமானவன்	12,987.00
				4.	திரு தி.மகாதேவன்	12,987.00
				5.	திரு தி.சீனிவாசராகவன்	12,987.00
				6.	திருமதி பத.பரவைநாச்சியார்	12,987.00
				7.	திருமதி சு.சங்கிலி நாச்சியார்	12,987.00
	2.	திருமதி.நீலாம்பிகையார் (மறைவு)	90,910.00 (90,909 1)	1.	திருமதி.சுந்தரத்தம்மை 15,151.50(அ)	15,152.00
				2.	திருமதி.சிவசங்கரி(மறைவு) 15,151.50(அ)	15,152.00
				3.	திரு.[illegible]வேலாயுதம் ([illegible]) திருமதி.முத்தம்மாள் (மறைவு) (அ) திரு.பால்வண்ணன் (மகன்) 7,575.50(அ)	7,576.00
					(ஆ) செல்வி.பூங்கோதை (மகள்) 7,575.50(அ)	7,576.00
				4.	திருமதி.பிச்சம்மாள் 15,151.50(அ)	15,151.00

..2/-

4137

1.	2.	3.	4.	5.	6.	7.
	6.திரு.சுந்தரமூர்த்தி(மறைவு)		90,909.00	1.திரு தி.முருகவேள்	22,727.25(அ)	22,728.00
				2.திரு.மருதவாணன் (மறைவு) திருமதி.தேன்மொழி(மனைவி)	22,727.25(அ)	22,727.00
				3.திரு.மனவழகன்	22,727.25(அ)	22,727.00
				4.திருமதி.புனிதவதி	22,727.25(அ)	22,727.00
	7.திருமதி.திரிபுரசுந்தரி		90,909.00			90,909.00
திருமதி.பொன்னம்மாள் (இரண்டாவது மனைவி-மறைவு)	1.திரு.அம்பலவாணன் (மறைவு) திருமதி.சரசுவதிவாணன் (மனைவி)		90,909.00			90,909.00
	2.திருமதி சோ.கலாவதி		90,909.00			90,909.00
திருமதி.கன்னம்மாள் (மூன்றாவது மனைவி) (மறைவு)	1.திரு.பச்சையப்பன்		90,909.00			90,909.00
	2.திருமதி.திரிபுரசொக்கம்மாள்		90,909.00			90,909.00
					மொத்தம் ரூ.	10,00,000.00

(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)

வை.பழனிச்சாமி,
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர். 27-8-97

26/8/97

1.	2. 3.	4.	5. 6.	7.
	6.திரு.சுந்தரமூர்த்தி(மறைவு)	90,909.00	1.திரு தி.முருகவேள் 22,727.25(அ)	22,728.00
			2.திரு.மருதவாணன் (மறைவு) திருமதி.தேன்மொழி(மனைவி) 22,727.25(அ)	22,727.00
			3.திரு.மணவழகன் 22,727.25(அ)	22,727.00
			4.திருமதி.புனிதவதி 22,727.25(அ)	22,727.00
	7.திருமதி.திரிபுரசுந்தரி	90,909.00		90,909.00
திருமதி.பொன்னம்மாள் (இரண்டாவது மனைவி-மறைவு)	1.திரு.அம்பலவாணன் (மறைவு) திருமதி.சரசுவதிவாணன் (மனைவி)	90,909.00		90,909.00
	2.திருமதி சோ.கலாவதி	90,909.00		90,909.00
திருமதி.கண்ணம்மாள் (மூன்றாவது மனைவி) (மறைவு)	1.திரு.பச்சையப்பன்	90,909.00		90,909.00
	2.திருமதி.திரிபுரசொக்கம்மாள்	90,909.00		90,909.00
			மொத்தம் ரூ.	10,00,000.00

(ரூபாய் பத்து லெட்சம் மட்டும்)

வை.பழனிச்சாமி,
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

[signature] 27-8-97
பிரிவு அலுவலர்.

26/8/97

சுருக்கம்

...வளர்ச்சி – தமிழ்த் தென்றல், செந்தமிழ்ச் செம்மல், தொழிலாளர் தலைவர் ...வி.க., அவர்களின் நூல்களை நாட்டுடமையாக்குதல் – மரபுரிமையாளர்களுக்கு ...புத் தொகையளித்தல் – அரசாணை – வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி–பண்பாடு (மற்றும்) அறநிலையத் (தவ1–1) துறை

...சாணை (நிலை) எண்: 117. நாள்: 13–5–1998.

திருவள்ளுவர் ஆண்டு 2029,
வெகுதான்ய, சித்திரை 30.

05342

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் நேர்முகக் கடித
எண்.ஆ2/3703/98, நாள்: 24.4.98

***

...ணை:

1998–99ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் ...ர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

> "கடந்த ஆண்டுகளில் தமிழ் பேரறிஞர்களின் நூல்களை அரசுடமையாக்கி அவர்தம் குடும்பத்தாருக்கு உரிய நிதிகள் வழங்கியது போலவே இந்த ஆண்டும் தமிழ்த் தென்றல், செந்தமிழ்ச் செம்மல், தொழிலாளர் தலைவர் திரு வி.க. அவர்களுடைய நூல்களை அரசுடமையாக்கி அவரது வழித்தோன்றல்களுக்கு இருபது இலட்சம் ரூபாய் காப்புநிதியாக வழங்கப்படும்"

...வறிவிப்பின் அடிப்படையில் விரிவானதோர் கருத்துருவை அரசுக்கு அனுப்புமாறு தமிழ் ...ர்ச்சி இயக்குநரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. மறைந்த தமிழறிஞர் தமிழ்த் ...ன்றல், செந்தமிழ்ச் செம்மல், தொழிலாளர் தலைவர் திரு.வி.கலியாணச் ...ந்தரனார் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடமையாக்குவது தொடர்பாக அவரது ...ம்பத்தாருடன் தொடர்புகொண்டு விவரங்கள் சேகரிக்கப்பட்டன என்றும் மேலும், ...வ சித்தாந்த நூற் பதிப்புக் கழக ஆட்சியாளர் திரு.முத்துசாமி அவர்கள் ...ரங்களைத் தந்துதவினார் என்றும் தெரிவித்து, அவரது படைப்புகள், மரபுரிமையர் ...றிய விவரங்களை தமிழ் வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு சமர்ப்பித்துள்ளார்.

2. தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களால் எழுதப்பட்ட அனைத்து ...ல்களையும் அன்னாரின் மரபுரிமையர்களிடமிருந்து பெற்று அனைத்தையும் ...ட்டுடமையாக்கி அதற்கு ஈடாக காப்புத் தொகையாக ரூ.20 இலட்சம் (ரூபாய் ...பது இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கலாம் எனவும் இத்தொகையினை ...பங்காகப் பிரித்து தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களின் இரண்டு குடும்பங்களின் ...புரிமையர்களுக்கு பகிர்ந்தளிக்கலாம் என தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். ...லும், காப்புநிதித் தொகையை பெறவரும் திரு.வி.க.–வின் மரபுரிமையாளர்களின் ...பாக்குவரத்து செலவினம் மற்றும் அவர்களுக்கு சிறப்பு செய்தல், இசைவளிப்பு ஆவணம் ...யாரித்தல் செலவினம் தொடர்பாக ரூ.16,250/–க்கும் (ரூபாய் பதினாறாயிரத்து ...நூற்று ஐம்பது மட்டும்) ஒப்பளிப்பு கோரியுள்ளார். தமிழ் வளர்ச்சி இயக்குநரின் ...ருத்துருவை அரசு ஆய்வு செய்தது.

3. தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களின் நூல்களின் பதிப்புரிமை ...ம்புகார், பாரி நிலையம் மற்றும் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் ...ழகத்தாரிடம் மரபுரிமையாளர்களால் வழங்கப்பட்டுள்ளது. பதிப்புரிமை பெற்றுள்ள ...ாரி நிலையத்திற்கு ரூ.1 இலட்சமும், பதிப்பகத்தார் என்ற அளவில் பூம்புகார் ...லையத்திற்கு ரூபாய் நாற்பதாயிரம். மேலும் பதிப்புரிமை பெற்றுள்ள

..2/–

தென்னிந்திய சைவ சித்தாந்த பதிப்பு கழகத்திற்கு ரூ.10,000/- அளிக்கக் கருதலா என்றும், இரண்டு குடும்பங்களுக்கும் வழங்க உள்ள தலா ரூ.10 இலட்சத்தில் மேற்படி தொகை போக, மீதத்தை வாரிசுதாரர்களுக்கு சமமாக பகிர்ந்தளிக்கலாம் என்றும் அரசு முடிவு செய்தது. அதனடிப்படையில் திரு.வி.க.-வின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும், அதற்கு ஈடாக தமிழ்த் தென்றல் திரு.வி.க.-வின் குடும்பத்த நூல்களின் பதிப்புரிமை பெற்ற பூம்புகார், பாரி மற்றும் தென்னிந்திய சைவ சித்தா நூற் பதிப்புக் கழகத்திற்கும் இணைப்பில் கண்டுள்ளவாறு (ரூபாய் இருபது இலட்சம் ம பிரித்து பகிர்ந்தளிக்க வேண்டுமென அரசு ஆணையிடுகிறது.

4. இக்காப்பீட்டுத் தொகையை பெறவரும் திரு.வி.க.-வின் மரபுரிமையாளர்களின் போக்குவரத்து செலவினம் மற்றும் அவர்களுக்கு சிறப்பு செய்த இசைவளிப்பு ஆவணம் தயாரித்தல் தொடர்பான செலவினம் ரூ.16,250/-க்கும் ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. தமிழ்த் தென்றல் திரு.வி.க. நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும் அதற்கு ஈடாக அவரது குடும்பத்திற்கு காப்புநிதியாக வழங்கப்படும் ரூ.20 இலட்சம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்:

"2202. பொதுக் கல்வி - 05. மொழி வளர்ச்சி -
800. ஏனைய செலவு - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II. மாநிலத் திட்டம் - JE. தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 09. உதவி மானியங்கள் -
08. ஏனைய மானியங்கள்"
(த.தொ.கு.எண்:2202. 05 800 JE. 0988).

6. போக்குவரத்துச் செலவு/பயணப்படிகளால் ஏற்படக்கூடிய செலவினம் ரூ.1000/- கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்படவேண்டும்:

"2202. பொதுக் கல்வி - 05. மொழி வளர்ச்சி -
001. நெறிப்படுத்தலும் நிருவாகமும் - I. திட்டத்தில் சேராதது - AA. தமிழ் வளர்ச்சி இயக்ககம் -
60. அலுவல் சார்பற்ற உறுப்பினர்களுக்கு பயணப்படி/ நாள்படி".

(த.தொ.கு.எண்:2202 05.001 AA 6009)

7. மரபுரிமையர்களுக்கு சிறப்பு செய்தல் மற்றும் இசைவு ஆவணம் தயாரித்தல் செலவினங்களுக்கு ஏற்படக்கூடிய செலவுத் தொகை ரூ.16,250/-ஐ கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்:

"2202. பொதுக் கல்வி - 05. மொழி வளர்ச்சி -
001. நெறிப்படுத்தலும், நிருவாகமும் - I. திட்டத்தில் சேராதது - AA. தமிழ் வளர்ச்சி இயக்ககம் - 05. அலுவலகச் செலவுகள் - 02. ஏனைய சில்லரைச் செலவுகள்"

(த.தொ.கு.எண்:2202 05 001 AA 0523)

8. மேலே பத்தி.3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகையைப் பெற்று தமிழ்த் தென்றல் திரு.வி.க.-வின் மரபுரிமையாளர்களுக்கும் மற்றும் பதிப்பகத்தார்களுக்கும் காசோலைமூலம் வழங்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சரிகட்டப்பட வேண்டிய

..3/-

பட்டியல் எவையேனும் நிலுவையில் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல், இச்செலவினத்திற்குரிய பட்டியலை உடனே அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79 கேட்டுக்கொள்ளப்படுகிறார். இச்செலவினத்திற்கு ஆகும் கூடுதல் நிதி ஒதுக்கீட்டினை 1998-99ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீட்டில் உரிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பிவைக்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

10. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்:1872/DS/B/98, நாள்: 11.5.98-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.ரா.சீனிவாசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்:

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108.
மரபுரிமையர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள்.
(தமிழ் வளர்ச்சி இயக்குநர் மூலமாக)
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79.
செய்தி (மற்றும்) சுற்றுலாத் துறை, சென்னை-9.
முதலமைச்சரின் தனிச் செயலர், சென்னை-9.
கல்வியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு, இந்துசமயம்
(மற்றும்) அறநிலையத் துறை அமைச்சரின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலாளர், நிதித்துறை, சென்னை-9.
செயலாளர், தமிழ் வளர்ச்சி-பண்பாடு (மற்றும்)
அறநிலையத் துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

காஸ்.வி.13/5.

(signature)
பிரிவு அலுவலர்.
14/5/98

மே.கொ.த.க.எண் 852/3703/98 நாள்: 5.98

நகல் அனுப்பப்படுகிறது

பெறுநர்

உரியவர்களுக்கு

நகல்

தா.வா.கிருஷ்ணன்

(signature)

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – விழா – திரு வி.க., கல்கி நூல்கள் நாட்டுடமையாக்கல் – குடும்ப நலநிதி வழங்குதல் – விழா செலவினம் – ஆணை – வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் (தவ1-1) துறை

அரசாணை (நிலை) எண்: 107. நாள்: 11-5-1998.

திருவள்ளுவர் ஆண்டு 2029,
வெகுதான்ய, சித்திரை 28

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித எண்: ஈ3/
4470/98, நாள்: 24.4.98

***

ஆணை:

கடந்த ஆண்டுகளில் தமிழ் பேரறிஞர்களின் நூல்களை அரசுடைமையாக்கி அவர்தம் குடும்பத்தாருக்கு உரிய நிதிகள் வழங்கியது போலவே இந்த ஆண்டும் தமிழ்த்தென்றல், செந்தமிழ்ச் செம்மல், தொழிலாளர் தலைவர் திரு வி.க. அவர்களுடைய நூல்களை அரசுடைமையாக்கி, அவரது வழித்தோன்றல்களுக்கு இருபது இலட்சம் ரூபாய் காப்பு நிதியாக வழங்கப்பெறவுள்ளது என்றும் அதேபோன்று தமிழர் வரலாறு, பண்பாடு, கலை-வீரம் பற்றிய புதிய இலக்கியம் பல படைத்த பேராசிரியர் கல்கி அவர்களின் நூற்றாண்டு விழா தொடக்கத்தையொட்டி அவரது நூல்களை அரசுடைமையாக்கி இருபது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் சிறந்த எழுத்தாளராகவும் திரைப்பட வசனகர்த்தாவாகவும் விளங்கிய மறைந்த தணிகாசலம் என்கிற இளங்கோவன் அவர்களுடைய குடும்ப நல நிதியாக இரண்டு இலட்சம் ரூபாய் அரசால் வழங்கப்பெறவுள்ளது என்றும் எனவே, இம்மூன்று நிகழ்ச்சிகளையும் ஒன்றாக சேர்த்து சென்னை இராசாசி மண்டபத்தில் அரசு விழாவாக தமிழ் வளர்ச்சி துறையின் சார்பில் நடத்துமாறு மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்துசமயம் (மற்றும்) அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார் என்றும் இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள் என்றும் விழாச் செலவினத்திற்கு ரூ.75,000/- (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் மேற்படி செயற்குறிப்பினை அரசு ஆய்வு செய்தது. தமிழ்த்தென்றல் திரு வி.க., பேராசிரியர் கல்கி ஆகியோரது நூல்கள் நாட்டுடமையாக்கல் குடும்ப நல நிதி வழங்கும் விழா சம்பந்தமான விழாச் செலவினமா ரூ.45,000/- (ரூபாய் நாற்பத்தைந்தாயிரம் மட்டும்) அரசு ஒப்பளிப்பு செய்து ஆவ வழங்குகிறது.

3. மேலே பத்தி இரண்டில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்:

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி
-800. ஏனையச் செலவு – I. திட்டத்தில் சேராதது
– AF. இலக்கியப் பணிகள் – 08. விளம்பரமும்,
பிரச்சாரமும்"

(த.தொ.கு.2202 05 800 AF 0805)

..2/-

4. மேலே பத்தி 2-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத் தொகையினை தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பு தொகுதி 1-இன் பிரிவுக்கூறு 99-இன்கீழ் முன்பணமாகப் பெறவும், விழா முடிந்தவுடன் உள்ளபடியான செலவுச் சீட்டுகளின் அடிப்படையில் அம்முன்பணத்தை சரிகட்டவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. இப்பொருள் தொடர்பான விழாச் செலவுக்குரிய நிதி ஒதுக்கீடு இன்மையால் இத்தொடர்பில் வேண்டப்பெறும் கூடுதல் நிதியை 1998-99ஆம் ஆண்டிற்கான திருத்திய/இறுதித் திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப் பெறுவதை எதிர்நோக்கி டியை அனுமதிக்குமாறு வடக்கு சம்பள கணக்கு அலுவலருக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்:32425/கல்வி-2/98, நாள்:11.5.98-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.ரா.சீனிவாசன்,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>:

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-79 (வடக்கு).

<u>நகல்</u>:

நிதித்துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

ந.வி.11/5 .

4 மே 1998 1415 13 9

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

பேராசிரியர் கல்கி அவர்களின் நூற்றாண்டு விழா தொடக்கத்தையொட்டி அவரது நூல்களை நாட்டுடைமையாக்குதல் - மரபுரிமையாளர்களுக்கு காப்புத் தொகை வழங்கி அரசு ஆணை - வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் (தவ1-1) துறை

அரசாணை (நிலை) எண்.118

நாள்: 13.5.98
திருவள்ளுவராண்டு 2029/
வெகுதான்ய/சித்திரை-30.

05343

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் நேர்முகக் கடித
எண்.ஆ2/3904/98, நாள் 24.4.98.

ஆணை:

1998-99ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:

"தமிழர் வரலாறு-பண்பாடு-கலை-வீரம் பற்றிய "புதின இலக்கியம்" பல படைத்த பேராசிரியர் கல்கி அவர்களின் நூற்றாண்டு விழா தொடக்கத்தையொட்டி அவரது நூல்களை அரசுடமையாக்கி இருபது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்"

2. மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க, பேராசிரியர் கல்கி ஆர் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குவது தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை பெறப்பட்டது.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்து பேராசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும், அதற்கு ஈடாக அவரது குடும்பத்திற்கு காப்புநிதியாக ரூ.20 இலட்சத்தை (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) அன்னாரின் மரபுரிமையாளர்களுக்கு சமபங்காக பிரித்து வாரிசு சான்றிதழின் அடிப்படையில் பகிர்ந்து அளிக்க வேண்டுமென அரசு ஆணையிடுகிறது.

4. பத்தி 3-இல் காணும் செலவினம் ரூ.20,00,000/- கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202. பொதுக்கல்வி-05. மொழி வளர்ச்சி-
800, ஏனைய செலவு-ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்-11. மாநிலத் திட்டம்-JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை-09. உதவி மானியங்கள்-08. ஏனைய மானியங்கள்"
(த.தொ.கு.எண்.2202 05 800 JE 0988)

5. போக்குவரத்துச் செலவு/பயணப்படிகளால் ஏற்படக்கூடிய செலவினம் ரூ.100/-கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 பொதுக்கல்வி-05. மொழி வளர்ச்சி-
001. நெறிப்படுத்தலும் நிருவாகமும்-1. திட்டத்தில் சேராதது- AA தமிழ் வளர்ச்சி இயக்ககம்-60. அலுவல் சார்பற்ற உறுப்பினர்களுக்கு பயணப்படி/நாள்படி"
(த.தொ.கு.எண்.2202 05 001AA 6009)

..2

6. மரபுரிமையருக்கான சிறப்புசெய்தல், இசைவு ஆவணம் தயாரித்தல் மற்றும் இதர செலவினங்களுக்கு ஏற்படக்கூடிய செலவுத்தொகை ரூ.2,000/-ஐ கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்.

"2202. பொதுக்கல்வி-05. மொழி வளர்ச்சி-
001. நெறிப்படுத்தலும் நிருவாகமும்-1.
திட்டத்தில் சேராதது-AA தமிழ் வளர்ச்சி
இயக்ககம்-05. அலுவலகச் செலவுகள்-02.
ஏனைய சில்லரைச் செலவுகள்"
(த.தொ.கு.எண்.2202 05 001 AA 0523)

7. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகையைப் பெற்று மரபுரிமையாளர்களுக்கு காசோலை மூலம் வழங்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சரிகட்டப்பட வேண்டிய பட்டியல் எவையேனும் நிலுவையில் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல், இச்செலவினத்திற்குரிய பட்டியலை உடனே அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை-79 கேட்டுக்கொள்ளப்படுகிறார். இச்செலவினத்திற்கு ஆகும் கூடுதல் நிதி ஒதுக்கீட்டினை 1998-99ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீட்டில் உரிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பிவைக்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. இவ்வாணை, நிதித்துறை அ.சா.எண்.1877/எப்எஸ்/பி/98, நாள் 6.5.98-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.ரா.சீனிவாசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108
மரபுரிமையாளர்களுக்கு (இயக்குநர் மூலமாக)
மாநிலக் கணக்காயவுத் தலைவர்,
சென்னை-18/35
சம்பளக் கணக்கு அலுவலர் (வ), சென்னை-79.
செய்தி மற்றும் சுற்றுலாத்துறை, சென்னை-9
கல்வியமைச்சரின் முதுநிலைநேர்முக உதவியாளர்,
சென்னை-9.
முதலமைச்சரின் தனிச்செயலர், சென்னை-9
செயலாளர், நிதித்துறை, சென்னை-9
செயலாளர்,
தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை,
சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(கையொப்பம்) பிரிவு அலுவலர் 14/5/98

ரேவெ/

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - மறைமலையடிகளாரின் மரபுரிமையர்களில் ஒருவரான திரு.வைரமுத்து அவர்கட்கு காப்புத்தொகை ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை - வெளியிடப்படுகிறது.

- -

தமிழ் வளர்ச்சி-பண்பாடு (மற்றும்) அறநிலையத் (தவ1-1) துறை

அரசாணை (வாலாயம்) எண்:137. நாள்: 24-7-1998.

திருவள்ளுவராண்டு 2029,
வெகுதானிய, ஆடி 8.

படிக்க:

1) அரசாணை (நிலை) எண்:180, தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை, நாள்:8.7.97
2) அரசாணை (நிலை) எண்:218, தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை, நாள்:26.8.97
3) தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்:ஆ2/6143/97, நாள்: 30.6.98

*****

ஆணை:

பார்வை 1 மற்றும் 2-இல் உள்ள அரசாணைகளில் முறையே ரூ.20 + 10ஆக மொத்தம் ரூ.30 இலட்சம் மறைமலையடிகளின் நூல்களை நாட்டுடைமையாக்கப்பட்டதால் அவ்வாரின் மரபுரிமையாளர்களுக்கு ஒப்பளிப்பு வழங்க அரசால் ஆணையிடப்பட்டது. மறைமலையடிகளின் மரபுரிமையாளர்களில் ஒருவரான திரு.வைரமுத்து அவர்களின் முகவரி சரியாக கிடைக்கப்பெறாத நிலையில் அரசாணைகளின்படி அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டத் தொகை ரூ.30303/- + ரூ.15,151/- ஆகமொத்தம் ரூ.45,454/-ஐ அவருக்கு வழங்காமல் அரசு செலுத்துச் சீட்டின்மூலம் கருவூலத்தில் செலுத்தப்பட்டதை மீண்டும் பெற்று திரு.வைரமுத்துவுக்கு வழங்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் உரிய ஆணையை வழங்க அரசுக்கு கருத்துரைத்துள்ளார்.

2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துரையை ஏற்று, பார்வை 1 மற்றும் 2-இன்படி திரு.வைரமுத்துவுக்கு வழங்கவேண்டிய பரிவுத்தொகை ரூ.45,454/-(ரூபாய் நாற்பத்தைந்தாயிரத்து நானூற்று ஐம்பத்திநான்கு மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேற்கண்ட தொகையினைப் பெற்று அவ்வாருக்கு வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

3. திரு.வைரமுத்துவுக்கு வழங்கப்பட வேண்டிய பங்குத் தொகையை கொடுப்பதற்குமுன் அவருக்கு ஒப்பளிக்கப்பட்டத் தொகையை அரசு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிசெய்துகொள்ளுமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்.

4. பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்:

"2202. பொதுக் கல்வி - 05. மொழி வளர்ச்சி
-800. ஏனைய செலவு - ஒன்பதாம் ஐந்தாண்டுத்
திட்டப் பணிகள் -II. மாநிலத் திட்டம் - JE. தமிழ்
வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை-
தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை -
09. உதவி மானியங்கள் - 08. ஏனைய மானியங்கள்"

(த.தொ.கு.எண்:2202 05 800 JE 0988)

..2/-

5. பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்டத் தொகை 1998-99ஆம் ஆண்டிற்
திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கம் செய்யப்படும். அதற்கான
கருத்துருவை தமிழ் வளர்ச்சி இயக்குநர் தக்க நேரத்தில் அனுப்புமாறு கேட்டுக்
படுகிறார். மேற்படி நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி, தமிழ் வ
இயக்குநரால் சரிகட்டப்படவேண்டிய பட்டியல் எவையேனும் நிலுவையில் இருப்பின்
அவற்றைப் பொருட்படுத்தாமல் இப்பட்டியலை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு
அலுவலர் (வடக்கு), சென்னை கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்:280/த.செ(ஆர்.பி)/9
நாள்:2[illegible].7.98-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.ரா.சீனிவாசன்
அரசு செயலாளர்

பெறுநர்:
தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108.
திரு.வைரமுத்து, மரபுரிமையாளர் (மறைமலையடிகள்)
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-35.

நகல்:
செயலாளர், நிதித்துறை, சென்னை-9.
செயலாளரின் தனிச் செயலர்,
தமிழ் வளர்ச்சி-பண்பாடு (மற்றும்) அறநிலையத் துறை,
சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

எம்.வி.24/7.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – தேசிய எழுத்தாளர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குதல் – குடும்பத்தினருக்கு ஈட்டுத் தொகை ஒப்படைப்பு வழங்கி அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் (தவ1-1) துறை

அரசாணை (3டி) எண். 4 — நாள்: 12.8.1998

திருவள்ளுவர் ஆண்டு 2029
வெகுதான்ய, ஆடி 27.

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித எண். ஆ2/5995/98
நாள் 27.7.98.

ஆணை:

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 28.5.98 அன்று சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள்:–

"சுதந்திரதின பொன்விழா ஆண்டு என்பதை உத்தேசித்து மறைந்த தேசிய எழுத்தாளர்கள் கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை, பா.ஜீவானந்தம், நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம், மூதறிஞர் இராஜாஜி, வ. சிதம்பரனார், சுத்தானந்த பாரதி, அகிலன், ஏ.எஸ்.கே.அய்யங்கார், வா.ரா, கா.மு.ஷெரீப், நாவலர் சோமசுந்தர பாரதியார், பரலி சு.நெல்லையப்பர், வ.வே.சு.ஐயர், காரைக்குடி சா.கணேசன், எஸ்.டி.எஸ்.யோகி ஆகியோரை கௌரவிக்கும் வகையில் அவர்கள் எழுதிய நூல்களையெல்லாம் அரசுடமையாக்க அரசு உத்தேசித்துள்ளது."

2. மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க மேற்படி தேசிய எழுத்தாளர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குவது தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை பெறப்பட்டது.

3. பார்வையில் குறிப்பிட்டுள்ள தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு மிகவும் கவனமாக பரிசீலனை செய்து மூதறிஞர் இராஜாஜி மற்றும் அகிலன் ஆகியோரது நூல்களை நாட்டுடைமையாக்க அவர்களது குடும்பத்தினர் விருப்பம் தெரிவிக்கவில்லையாதலால் அந்த இரு நூலாசிரியர்களின் நூல்களைத் தவிர எஞ்சிய தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும் அதற்கு ஈடாக ஈட்டுத்தொகை அவர்களது குடும்பத்திற்கு வழங்கவும் அரசு கருதியுள்ளது.

4. கீழ்க்கண்ட தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும் அதற்கு ஈடாக அவர்களது குடும்பத்திற்கு தலா ரூ.5 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வீதம் மொத்தம்

ரூ.10 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஈட்டுத்தொகை வழங்க ஒப்பளிப்புச் செய்து அரசு ஆணையிடுகிறது.

ஆசிரியர்	குடும்பத்தாருக்கு ஈட்டுத்தொகை
1. திரு. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை	ரூ.5 இலட்சம்
2. திரு. ப. ஜீவானந்தம்	ரூ.5 இலட்சம்

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகை கீழ்க்கா கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2202. பொதுக்கல்வி - 05. மொழி வளர்ச்சி -
> 800. ஏனைய செலவுகள் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - 11 மாநிலத் திட்டம் - ஜே இ
> தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை
> தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை -
> 09. உதவி மானியங்கள் - 08. ஏனைய மானியங்கள்."

(த.தொ.கு.எண். 2202 05 800 ஜேஇ988)

6. மேலே பத்தி 4இல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகையைப் பெற்ற சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களின் குடும்பத்தினருக்கு 1998 ஆகஸ்டு 15 கொடியே விழாவில் கோட்டை கொத்தளத்திலேயே காசோலையாக வழங்க தக்க நடவடிக் எடுக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதி திருத்திய/மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சரிகட்டப்பட வேண்டிய பட்டியல் எவையேனும் நிலுவையில் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல் இச்செலவினத் பட்டியலை உடனே அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1 கேட்டுக் கொள்ளப்படுகிறார். இச்செலவினத்திற்கு ஆகும் கூடுதல் நி ஒதுக்கீட்டினை 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதித் திருத்திய மதிப்பீட்டில் உரி செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பிவைக்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்

8. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண். 470/எஸ்எஸ்/98 நாள் 11.8.98இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.ரா. சீனிவாசன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:
தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108
தேசிய எழுத்தாளர்களின் குடும்பத்தினர்கள் (தமிழ் வளர்ச்சி இயக்குநர் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/35.
செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, சென்னை-9.
முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை-9.
தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை
அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
கல்வியமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலாளரின் நேர்முக உதவியாளர், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலை
துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

தமிழ்நாடு அரசு
சுருக்கம்

தமிழ் வளர்ச்சி — தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கல் — குடும்பத்தினருக்கு ஈட்டுத் தொகை ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

- -

தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் (தவ1-1) துறை

அரசாணை (3டி) எண்:5 நாள்:12.8.1998.

தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித எண்:ஆ2/5995/98,
நாள்:27.7.98.

******

ஆணை:-

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 28.5.98 அன்று சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள்:-

> "சுதந்திர தின பொன்விழா ஆண்டு என்பதை உத்தேசித்து மறைந்த தேசிய எழுத்தாளர்கள் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, பா. சிவானந்தம், நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம், மூதறிஞர் இராஜாஜி, வ.உ.சிதம்பரனார், சுத்தானந்த பாரதி, அகிலன், ஏ.எஸ்.கே.அய்யங்கார், வ.ரா., கா.மு.ஷெரீப், நாவலர் சோமசுந்தர பாரதியார், பரலி, சு.நெல்லையப்பர், வ.வே.சு.ஐயர், காரைக்குடி சா.கணேசன், எஸ்.ஏடி.எஸ்.யோகி ஆகியோரை கௌரவிக்கும் வகையில் அவர்கள் எழுதிய நூல்களையெல்லாம் அரசுடைமையாக்க அரசு உத்தேசித்துள்ளது".

2. மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க மேற்படி தேசிய எழுத்தாளர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குவது தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை பெறப்பட்டது.

3. பார்வையில் குறிப்பிட்டுள்ள தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு மிகவும் கவனமாக பரிசீலனை செய்து மூதறிஞர் இராஜாஜி மற்றும் அகிலன் ஆகியோரது நூல்களை நாட்டுடைமையாக்க அவர்களது குடும்பத்தினர் விருப்பம் தெரிவிக்கவில்லையாதலால் அந்த இரு நூலாசிரியர்களின் நூல்களைத் தவிர எஞ்சிய தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும் அதற்கு ஈடாக ஈட்டுத் தொகை அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கவும் அரசு கருதியுள்ளது.

4. கீழ்க்கண்ட தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும் அதற்கு ஈடாக அவர்களது குடும்பத்தினருக்கு தலா ரூ.5 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வீதம் மொத்தம் ரூ.10 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஈட்டுத் தொகை வழங்க ஒப்பளிப்புச் செய்து அரசு ஆணையிடுகிறது.

நூலாசிரியர்	குடும்பத்தாருக்கு ஈட்டுத் தொகை
1. நாமக்கல் கவிஞர் திரு.வெ.இராமலிங்கம்	ரூ.5 இலட்சம்
2. திரு.வ.உ.சிதம்பரனார்	ரூ.5 இலட்சம்

/தபிபா/

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:

"2202. பொதுக் கல்வி - 05. மொழி வளர்ச்சி-800. ஏனைய செலவுகள் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - 11 மாநிலத் திட்டம்ஜேஇதமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பிலுள்ளவை - 09. உதவி மானியங்கள் - 08. ஏனைய மானியங்கள்".

(த.தொ.கு.எண்:2202 05 800 ஜேஇ 0988)

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகையைப் பெற்ற சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களின் குடும்பத்தினருக்கு 1998 ஆகஸ்டு 15 கொடியேற்ற விழாவில் கோட்டை கொத்தளத்திலேயே காசோலையாக வழங்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான நிதியொதுக்கம் 2006–2007–ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். அத்தகைய நிதி கிடைக்கும் வகையில் அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று வழங்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேற்படி தொகைக்கான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படும்போது, அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், அவைகளை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை – 600 001 கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான நிதி ஒதுக்கீட்டை 2006–2007 –ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் சேர்க்க தேவையான கருத்துருவினை உரிய நேரத்தில் நிதித் துறைக்கு அனுப்புமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகையை தமிழ் நாடு நிதி விதி தொகுப்பு I-இன் பிரிவுக்கூறு 99-ன் கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும், உரிய பற்றுச் சீட்டுக்களின் அடிப்படையில் முன்பணத்தொகைக்கான பட்டியலை சரிகட்டவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 55868/Edn- II/ 2006 நாள் 12.09.2006 – ன் இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 538– யுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கற்பூரசுந்தரபாண்டியன்,
சிறப்பு ஆணையர் (ம) அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
நகல்:
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
நிதி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,சென்னை–9.
நிதி (கல்வி–II/வ.செ.பொ–II)துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

13/9/2006
பிரிவு அலுவலர்
13/9/06

26

34–47

தமிழ்நாடு அரசு
சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – 14 தமிழ் சான்றோர்களின் அனைத்து படைப்புகளும், நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித்(தவ1–2) துறை

அரசாணை (நிலை) எண்.79

நாள்:2.03.2007.
திருவள்ளுவராண்டு–2038
விய – மாசி 18

படிக்க:

1. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் ந.க.எண். 4024/தமிழ்–1, 2005, நாள்.27.07.2005.
2. அரசாணை(நிலை) எண்.261, தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் (தவ1–2) துறை, நாள் 14.11.2005.
3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் ந.க.எண். 2867/தமிழ்–1, 2006, நாள்.13.02.2007.

*****

ஆணை

தமிழுக்கு பெருந்தொண்டாற்றிச் சிறப்பு மிக்க நூல்களைப் படைத்துள்ள தமிழ்ச் சான்றோர்களின் நினைவைப் போற்றும் வகையிலும் அவர்களின் படைப்புகள் பெருமளவில் மக்களைச் சென்றடையும் நோக்கிலும் மேலே மூன்றில் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்ட செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலித்து ஏற்று, மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் திருவாளர்கள்

1. மாயூரம் வேதநாயகம் பிள்ளை ,
2. சக்தி வை. கோவிந்தன்,
3. தெ.பொ மீனாட்சி சுந்தரனார் மற்றும்
4. த.நா.குமாரசாமி

ஆகிய தமிழறிஞர்களின் இலக்கிய படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகையாக அவர்களது மரபுரிமையர்களுக்கு தலா ரூ.5.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.20.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டது. இந்த பரிவு தொகையினை அரசு மீள ஆய்வு செய்து மேற்படி நான்கு தமிழறிஞர்களின் இலக்கிய படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கியதால் பரிவுத் தொகையாக ஏற்கனவே அவர்களது மரபுரிமையாளர்களுக்கு ஒப்பளிப்பு செய்திட ஆணையிடப்பட்ட தலா ரூ.5,00,000/–க்கு பதிலாக தலா ரூ.6,00,000/– வீதம் மொத்தம் ரூ.24,00,000/– இலட்சம் (ரூபாய் இருபத்து நான்கு இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து வழங்க ஆணையிடப்படுகிறது.

2. மேலும் தமிழுக்கு பெரும் தொண்டாற்றிய திருவாளர்கள் கா. சு. பிள்ளை புலவர் குலாம் காதிறு நாவலர் , தி.வை.சதாசிவப் பண்டாரத்தார், டாக்டர் சி.இலக்குவனார், மகாவித்வான் தண்டபாணி தேசிகர், தி.ஜ.ரங்கநாதன், (தி.ஜ.ர) நாரணதுரைக்கண்ணன், டாக்டர் மா.இ. ராசமாணிக்கனார், டாக்டர் வ.சுப.மாணிக்கம், புலவர் கா.கோவிந்தன் ஆகிய 10 தமிழ் சான்றோர்களின் நூல்கள் எழுத்துப்படிகள் அச்சில் உள்ள நூல்கள் மற்றும் அவர்கள் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகையாக ஒவ்வொருவரின் குடும்பத்தாருக்கும் தலா ரூ.6,00,000/- வீதம் (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) 10 பேருக்கு மொத்தம் ரூ.60,00,000/- (ரூபாய் அறுபது இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 1 - மற்றும் 2-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.84,00,000/- (ரூபாய் எண்பத்து நான்கு இலட்சம் மட்டும்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202-பொதுக் கல்வி-05. மொழி வளர்ச்சி-800 ஏனைய செலவு - II மாநிலத் திட்டம் - JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள் பரிசுகள் முதலியவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 09 உதவி மானியங்கள் - 03 குறிப்பிட்டத் திட்டங்களுக்கான மானியங்கள்"
(த.தொ.கு. 2202 05 800 JE 0933)

4. பரிவுத் தொகையை பெறவரும் மரபுமையாளர்கள்/குடும்பத்தினருக்கு சிறப்பு செய்யும் பொருட்டு பொன்னாடை, காசோலை, பேழை, போக்குவரத்து பயணச் செலவு ,மதிய உணவு ,சிற்றுண்டி மற்றும் இதர சில்லறைச் செலவினங்களுக்காக, ஒவ்வொரு நூலாசிரியருக்கும் ரூ.5,000 /- (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) வீதம் மொத்தம் 14 பேருக்கு ரூ.70,000/- (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி நான்கில் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202-பொதுக் கல்வி-05. மொழி வளர்ச்சி-800 ஏனைய செலவு - II மாநிலத் திட்டம் - JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 05 அலுவலகச் செலவுகள் - 02 ஏனைய சில்லறைச் செலவுகள்"
(த.தொ.கு. 2202 05 800 JE 0522)

6. மேலே பத்தி 1, 2, (ம) 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான நிதியொதுக்கம் 2006-2007-ஆம் ஆண்டுக்கான இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். அத்தகைய நிதி கிடைக்கும் வகையில் அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று வழங்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேற்படி தொகைக்கான பட்டியல்களை உரிய அலுவலரால் சமர்ப்பிக்கப்படும்போது , அவை

ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் அவற்றை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை 600 001 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினங்கள் 2006–2007 இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும்.

7. மேலே பத்தி 1 மற்றும் 4–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான நிதி ஒதுக்கீட்டை 2006–2007 –ஆம் ஆண்டின் இறுதி திருத்திய நிதி ஒதுக்கத்தில் சேர்க்கத் தேவையான கருத்துருவினை உரிய நேரத்தில் நிதித்துறைக்கு அனுப்புமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 1,2,(ம) 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பு 1–இன் பிரிவுக் கூறு 99–இன் கீழ் முன்பணமாக பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச் சீட்டுகளின் அடிப்படையில் முன்பணத் தொகைக்கான பட்டியலை சரிக்கட்டவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

9. வருவாய் துறையினரின் மரபுரிமையர் சான்றின்படி உரிய மரபுரியர்களுக்குத் தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

10. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.12628/கல்வி – II/2007, நாள். 1.03.2007 –இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1684 – உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

து.இராசேந்திரன்,
அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
14 நூலாசிரியர்களின் குடும்பத்தினர்கள் (தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர், (வடக்கு) சென்னை –1
மாநிலகணக்காய்வு தலைவர், சென்னை – 18/35.
நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
நிதி (கல்வி II / வ.செ.பொ II)துறை, சென்னை–9.
இ.கோ/உ.திரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3.3.2007
(ச.வின்செண்ட் தினகர் ஞானஒளிவு)
அரசு சார்புச் செயலாளர்

3.3.07

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – 2007–2008ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் செய்யப்பட்ட அறிவிப்பு – 20 தமிழ்ச் சான்றோர்களின் அனைத்து படைப்புகளும் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை வழங்குதல் – ஆணை வெளிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை

அரசாணை (நிலை) எண். 170

நாள் 21.05.2007
(திருவள்ளுவராண்டு 2038,
சர்வஜித் – வைகாசி–7)

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.261, தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, நாள் 14.11.2005.
2. அரசாணை (நிலை) எண்.79, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, நாள் 2.3.2007.

படிக்க:

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.ந.க.எண்.4020/தமிழ்1/2007, நாள் 18.5.2007.

*****

ஆணை:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 23.3.2007 அன்று 2007–2008ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர்கள் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு அவர்தம் மரபுரிமையாளர்களுக்கு பரிவுத்தொகை வழங்கப்படுவதுடன் தமிழ்ச் சான்றோர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

2. மேற்கண்ட அறிவிப்பைத் தொடர்ந்து இப்பொருண்மை தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரிடமிருந்து விரிவான அறிக்கை பெறப்பட்டது.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, இவ்வரசாணையின் இணைப்பில் காணும் 20 தமிழ்ச் சான்றோர்களின் இலக்கிய படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகையாக ஒவ்வொருவரின் மரபுரிமையாளர்களுக்கும் இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு வழங்கும் பொருட்டு, ரூ.1,80,00,000/–க்கு (ரூபாய் ஒரு கோடியே எண்பது இலட்சங்கள் மட்டும்) ஒப்பளிப்புச் செய்து அரசு ஆணையிடுகிறது.

...2

4. மேலே பத்தி 3இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.1,80,00,000/– (ரூபாய் ஒரு கோடியே எண்பது இலட்சங்கள் மட்டும்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக்கல்வி–05. மொழி வளர்ச்சி–800. ஏனைய செலவுகள்–II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநர் பொறுப்பில் உள்ளவை – 09. உதவி மானியங்கள் – 03. குறிப்பிட்டத் திட்டங்களுக்கான மானியங்கள்
(த.தொ.கு.2202 05 800 JE 0933)

5. பரிவுத் தொகையைப் பெறவரும் மரபுரிமையர்கள் குடும்பத்தினர் சென்னை வந்து செல்லும் போக்குவரத்துச் செலவு மற்றும் ஏனைய செலவினத்துக்காக ஒவ்வொரு நூலாசிரியரின் மரபுரிமையருக்கும் ரூ.5,000/– (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) வீதம் மொத்தம் 20 பேருக்கு ரூ.1.00 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்:-

"2202. பொதுக்கல்வி –05. மொழி வளர்ச்சி–800. ஏனைய செலவுகள் –II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநர் பொறுப்பில் உள்ளவை –05. அலுவலகச் செலவுகள் –02. ஏனைய சில்லறைச் செலவுகள்."
(த.தொ.கு.2202 05 800 JE 0522)

7. மேலே பத்தி 4இல் காணப்படும் கணக்குத் தலைப்பில் 2007–2008 வரவு செலவு திட்டத்தில் ரூ.1,00,00,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் நூல்கள் நாட்டுடைமையாக்கி பரிவுத்தொகை வழங்க ரூ.98,00,000/– ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே நூல்கள் நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகை வழங்குவதற்கு ரூ.82,00,000/– கூடுதலாக நிதியொதுக்கம் செய்யப்படுகிறது. இக்கூடுதல் செலவினம் "புது துணைப் பணி" குறித்த செலவினமாகும். பேரவையின் ஒப்புதல் உரிய காலத்தில் பெறப்படும். பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன்மூலம் மேற்கொள்ளப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் கோரி உரிய படிவத்தில் நிதி (வரவு–செலவு பொது–I) பிரிவிற்கு விண்ணப்பிக்கும்படி தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 5இல் ஒப்புவிக்கப்பட்ட தொகைக்கான நிதியொதுக்கம் 2007–2008ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். அத்தகைய நிதி ஒதுக்கத்தை எதிர்நோக்கி அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று வழங்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேற்படி தொகைக்கான பட்டியல்கள் உரிய அலுவலரால் சமர்ப்பிக்கப்படும்போது, அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் அவற்றை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–600 001 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி 5இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான நிதி ஒதுக்கீட்டை 2007–2008ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் சேர்க்கத் தேவையான கருத்துருவினை உரிய நேரத்தில் நிதித்துறைக்கு அனுப்புமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

10. மேலே பத்தி 3 மற்றும் 5இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99இன்கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

11. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

12. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.148/கூசெ(ஜி.வி)/2007, நாள் 21.5.2007–இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.147 (நூற்று நாற்பத்தேழு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

து. இராசேந்திரன்
அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
நகல்:
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
நிதி (த.வ.,அ.நி.(ம)செ/வ.செ.பொ I/வ.செ.பொ II) துறை, சென்னை–9.
இ.கோ/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

21.5.07

இணைப்பு

அரசாணை (நிலை) எண். 170, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, நாள் 21.05.2007

வ.எண்	தமிழ் சான்றோர்களின் பெயர் திருவாளர்கள்	ஒப்பளிக்கப்பட்ட பரிவுத் தொகை
1	ம.சிங்காரவேலர்	ரூ.15.00இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)
2.	தவத்திரு குன்றக்குடி அடிகளார்	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
3.	கி.ஆ.பெ.விசுவநாதம்	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
4.	கி.வா.ஜகந்நாதன்	ரூ.15.00 இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)
5.	அ.ச.ஞானசம்பந்தன்	ரூ.15.00 இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)
6.	திருக்குறளார் வீ.முனுசாமி	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
7.	கவிஞர் சுரதா	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
8.	சாவி	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
9.	மாவெண்கோ (எ) வீ.கோ.சண்முகம்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
10.	தீபம் நா.பார்த்தசாரதி	ரூ.15.00 இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)
11.	எஸ்.எஸ்.தென்னரசு	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)

12.	கவிஞர் வாணிதாசன்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
13.	கவிஞர் கருணானந்தம்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
14.	அவ்வை துரைசாமி பிள்ளை	ரூ.15.00 இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)
15.	ஜலகண்டபுரம் ப.கண்ணன்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
16.	டி.கே.சீனிவாசன்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
17.	சி.பி.சிற்றரசு	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
18.	ஏ.வி.பி. ஆசைத்தம்பி	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
19.	இராம. அரங்கண்ணல்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
20.	மருதகாசி	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)

து.இராசேந்திரன்
அரசுச் செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்

21.11.13

<u>சுருக்கம்</u>

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – 2007–2008ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் செய்யப்பட்ட அறிவிப்பு – 20 தமிழ்ச் சான்றோர்களின் அனைத்து படைப்புகளும் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை வழங்குதல் – ஆணை வெளிடப்படுகிறது.

<u>தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை</u>

<u>அரசாணை (நிலை) எண். 170</u>

<u>நாள் 21.05.2007</u>
(திருவள்ளுவராண்டு 2038,
சர்வஜித் – வைகாசி–7)

<u>படிக்கப்பட்டவை:</u>

1. அரசாணை (நிலை) எண்.261, தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, நாள் 14.11.2005.
2. அரசாணை (நிலை) எண்.79, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, நாள் 2.3.2007.

<u>படிக்க:</u>

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.ந.க.எண்.4020/தமிழ் I/2007, நாள் 18.5.2007.

*****

<u>ஆணை:-</u>

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 23.3.2007 அன்று 2007–2008ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர்கள் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு அவர்தம் மரபுரிமையாளர்களுக்கு பரிவுத்தொகை வழங்கப்படுவதுடன் தமிழ்ச் சான்றோர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

2. மேற்கண்ட அறிவிப்பைத் தொடர்ந்து இப்பொருண்மை தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரிடமிருந்து விரிவான அறிக்கை பெறப்பட்டது.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, இவ்வரசாணையின் இணைப்பில் காணும் 20 தமிழ்ச் சான்றோர்களின் இலக்கிய படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகையாக ஒவ்வொருவரின் மரபுரிமையாளர்களுக்கும் இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு வழங்கும் பொருட்டு, ரூ.1,80,00,000/–க்கு (ரூபாய் ஒரு கோடியே எண்பது இலட்சங்கள் மட்டும்) ஒப்பளிப்புச் செய்து அரசு ஆணையிடுகிறது.

...2

4. மேலே பத்தி 3இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.1,80,00,000/– (ரூபாய் ஒரு கோடியே எண்பது இலட்சங்கள் மட்டும்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக்கல்வி–05. மொழி வளர்ச்சி–800. ஏனைய செலவுகள்–II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநர் பொறுப்பில் உள்ளவை – 09. உதவி மானியங்கள் – 03. குறிப்பிட்டத் திட்டங்களுக்கான மானியங்கள்
(த.தொ.கு.2202 05 800 JE 0933)

5. பரிவுத் தொகையைப் பெறவரும் மரபுரிமையர்கள் குடும்பத்தினர் சென்னை வந்து செல்லும் போக்குவரத்துச் செலவு மற்றும் ஏனைய செலவினத்துக்காக ஒவ்வொரு நூலாசிரியரின் மரபுரிமையருக்கும் ரூ.5,000/– (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) வீதம் மொத்தம் 20 பேருக்கு ரூ.1.00 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்:-

"2202. பொதுக்கல்வி –05. மொழி வளர்ச்சி–800. ஏனைய செலவுகள் –II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநர் பொறுப்பில் உள்ளவை –05. அலுவலகச் செலவுகள் –02. ஏனைய சில்லறைச் செலவுகள்."
(த.தொ.கு.2202 05 800 JE 0522)

7. மேலே பத்தி 4இல் காணப்படும் கணக்குத் தலைப்பில் 2007–2008 வரவு செலவு திட்டத்தில் ரூ.1,00,00,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் நூல்கள் நாட்டுடைமையாக்கி பரிவுத்தொகை வழங்க ரூ.98,00,000/– ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே நூல்கள் நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகை வழங்குவதற்கு ரூ.82,00,000/– கூடுதலாக நிதியொதுக்கம் செய்யப்படுகிறது. இக்கூடுதல் செலவினம் "புது துணைப் பணி" குறித்த செலவினமாகும். பேரவையின் ஒப்புதல் உரிய காலத்தில் பெறப்படும். பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன்மூலம் மேற்கொள்ளப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் கோரி உரிய படிவத்தில் நிதி (வரவு–செலவு பொது–I) பிரிவிற்கு விண்ணப்பிக்கும்படி தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 5இல் ஒப்புவிக்கப்பட்ட தொகைக்கான நிதியொதுக்கம் 2007–2008ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். அத்தகைய நிதி ஒதுக்கத்தை எதிர்நோக்கி அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று வழங்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேற்படி தொகைக்கான பட்டியல்கள் உரிய அலுவலரால் சமர்ப்பிக்கப்படும்போது, அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் அவற்றை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–600 001 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி 5இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான நிதி ஒதுக்கீட்டை 2007–2008ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் சேர்க்கத் தேவையான கருத்துருவினை உரிய நேரத்தில் நிதித்துறைக்கு அனுப்புமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

10. மேலே பத்தி 3 மற்றும் 5இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99இன்கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

11. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

12. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.148/கூசெ(ஜி.வி)/2007, நாள் 21.5.2007–இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.147 (நூற்று நாற்பத்தேழு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

து. இராசேந்திரன்
அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
நகல்:
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
நிதி (த.வ.,அ.நி.(ம)செ/வ.செ.பொ I/வ.செ.பொ II) துறை, சென்னை–9.
இ.கோ/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

21.5.07

இணைப்பு

அரசாணை (நிலை) எண். 170, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, நாள் 21.05.2007

வ.எண்	தமிழ் சான்றோர்களின் பெயர் திருவாளர்கள்	ஒப்பளிக்கப்பட்ட பரிவுத் தொகை
1	ம.சிங்காரவேலர்	ரூ.15.00இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)
2.	தவத்திரு குன்றக்குடி அடிகளார்	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
3.	கி.ஆ.பெ.விசுவநாதம்	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
4.	கி.வா.ஜகந்நாதன்	ரூ.15.00 இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)
5.	அ.ச.ஞானசம்பந்தன்	ரூ.15.00 இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)
6.	திருக்குறளார் வீ.முனுசாமி	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
7.	கவிஞர் சுரதா	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
8.	சாவி	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
9.	மாவெண்கோ (எ) வீ.கோ.சண்முகம்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
10.	தீபம் நா.பார்த்தசாரதி	ரூ.15.00 இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)
11.	எஸ்.எஸ்.தென்னரசு	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)

12.	கவிஞர் வாணிதாசன்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
13.	கவிஞர் கருணானந்தம்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
14.	அவ்வை துரைசாமி பிள்ளை	ரூ.15.00 இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)
15.	ஜலகண்டபுரம் ப.கண்ணன்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
16.	டி.கே.சீனிவாசன்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
17.	சி.பி.சிற்றரசு	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
18.	ஏ.வி.பி. ஆசைத்தம்பி	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
19.	இராம. அரங்கண்ணல்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
20.	மருதகாசி	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)

து.இராசேந்திரன்
அரசுச் செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்

21.5.07

*05706

<u>சுருக்கம்</u>

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – 2008–09–ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு – 27 தமிழ்ச் சான்றோர்களின் அனைத்து படைப்புகளும் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது

தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ1–1) துறை

அரசாணை (நிலை) எண்.167

நாள் 22.5.2008
திருவள்ளுவராண்டு 2039
வைகாசி 9

1. அரசு நேர்முக கடித எண்.11423/தவ1–1/2008–1, நாள் 28.3.2008
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.3233/தமிழ்1/2008, நாள் 9.4.2008

========

<u>ஆணை</u>

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 20.3.2008அன்று 2008–09–ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்த ஆண்டு 1. கவிஞர் பெரியசாமித் தூரன், 2. பேராசிரியர் க.வெள்ளைவாரணனார், 3. பண்டிதர் க.அயோத்திதாசர், 4. திரு.ஆபிரகாம் பண்டிதர், 5. திரு.சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர், 6. டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை, 7. மகாவித்வான் ரா.ராகவையங்கார், 8. திரு.உடுமலை நாராயணகவி, 9. திரு. கு.மு. அண்ணல் தங்கோ, 10. திரு.அவ்வை தி.க.சண்முகம், 11. திரு.விந்தன், 12. திரு.வா.ச.ராமாமிர்தம், 13. திரு.வல்லிக்கண்ணன், 14. திரு.நா.வானமாமலை, 15. கவிஞர். புதுவைச் சிவம், 16. திரு.அ.இராகவன், 17. திரு.தொ.மு.சி.ரகுநாதன், 18. திரு.சக்திதாசன் சுப்ரமணியன், 19. டாக்டர் ந.சஞ்சீவி, 20. திரு.முல்லை முத்தையா, 21. கவிஞர் எஸ்.டி.சுந்தரம், 22. கவிஞர் மீரா, 23. பேராசிரியர் ஆ.கார்மேகக் கோனார், 24. புலவர் முகமது நயினார் மரைக்காயர், 25. திரு.சுசமுத்திரம், 26. திரு.கோவை இளஞ்சேரன், 27. பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் ஆகிய தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்கள் உருவாக்கிய நூல்களின் எண்ணிக்கை அவை

சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கம், அவற்றின் பெருமை மதிப்பீடுகியவற்றின் அடிப்படையில் அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கப்படும்.

2. மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, இப்பொருண்மை தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரிடமிருந்து விரிவான அறிக்கை பெறப்பட்டது.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, இவ்வரசாணையின் இணைப்பில் காணும் 27 தமிழ்ச் சான்றோர்களின் இலக்கியப் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி பரிவுத்தொகையாக ஒவ்வொருவரின் மரபுரிமையர்களுக்கும் இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கும் பொருட்டு ரூ.1,65,00,000/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தைந்து இலட்சங்கள் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.1,65,00,000/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தைந்து இலட்சங்கள் மட்டும்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2202. பொதுக்கல்வி – 05. மொழி வளர்ச்சி–800. ஏனைய செலவுகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள். பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநர் பொறுப்பில் உள்ளவை – 09. உதவி மானியங்கள் – 03. குறிப்பிட்டத் திட்டங்களுக்கான உதவித்தொகை
> (த.தொ.கு.2202 05 800 JE 0933)

5. பரிவுத் தொகையைப் பெறவரும் மரபுரிமையர்களின் குடும்பத்தினர் சென்னை வந்து செல்லும் போக்குவரத்துச் செலவு மற்றும் ஏனைய செலவினத்துக்காக ஒவ்வொரு தமிழறிஞரின் மரபுரிமையருக்கும் ரூ.5,000/– (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) வீதம் மொத்தம் 27 பேருக்கு ரூ.1.35 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்:-

> "2202. பொதுக்கல்வி –05. மொழி வளர்ச்சி–800. ஏனைய செலவுகள் –II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநர் பொறுப்பில் உள்ளவை –05. அலுவலகச் செலவுகள் –02. ஏனைய சில்லறைச் செலவுகள்."
> (த.தொ.கு.2202 05 800 JE 0522)

7. மேலே பத்தி 3 மற்றும் 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள கூடுதல் நிதியொதுக்கம் 2008–09–ம் ஆண்டுக்கான திருத்த / இறுதி திருத்த மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். மேற்காணும் செலவினத்திற்கான கருத்துருவை நிதித் (கூ.ஒ.(ம)நு.பா) துறைக்கு தக்க தருணத்தில் அனுப்பி வைக்குமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 3 மற்றும் 5–இல் ஒப்புவிக்கப்பட்ட தொகைக்கான பட்டியல்கள் உரிய அலுவலரால் சமர்ப்பிக்கப்படும்போது, அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் அவற்றை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–600001 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி 3 மற்றும் 5இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன்கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

10. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

11. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்ற்ற குறிப்பு எண்.30329/CF&CP/2008–1, நாள் 21.5.2008–இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதிப் பொதுக்கப் பேரேடு எண்.137 (நூற்று முப்பத்து ஏழு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ.இறையன்பு
அரசுச் செயலாளர் (கூ.பொ)

<u>பெறுநர்</u>
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
27 தமிழறிஞர்களின் குடும்பத்தினர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
<u>நகல்</u>
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
நிதி (கு.வ.அறி (ம) செ./ வ.செ.பொ I / வ.செ.பொ II)துறை, சென்னை–9.
இ.கோ/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர். 23/5/08

<u>இணைப்பு</u>

<u>அரசாணை (நிலை) எண்.167, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்
மற்றும் செய்தித் (தவ1–1) துறை, நாள் 22.5.2008</u>

வ. எண்	தமிழ் சான்றோர்களின் பெயர் திருவாளர்கள்	ஒப்பளிக்கப்பட்ட பரிவுத் தொகை
1	கவிஞர் பெரியசாமித் தூரன்	ரூ.10.00இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
2.	பேராசிரியர் க.வெள்ளைவாரணனார்	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
3.	பண்டிதர் க.அயோத்திதாசர்	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
4.	திரு.ஆபிரகாம் பண்டிதர்	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
5.	திரு.சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர்	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
6.	டாக்டர் ரா.பி.சேதுபபிள்ளை	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
7.	மகாவித்வான் ரா.ராகவையங்கார்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
8.	திரு.உடுமலை நாராயணகவி	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
9.	திரு.கு.மு.அண்ணல் தங்கோ	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
10.	திரு.அவ்வை தி.க.சண்முகம்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
11.	திரு.விந்தன்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
12	திரு.லா.ச.ராமாமிர்தம்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
13	திரு.வல்லிக்கண்ணன்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
14	திரு.நா.வானமாமலை	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)

15	கவிஞர்.புதுவைச் சிவம்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
16	திரு.அ.இராகவன்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
17	திரு.தொ.மு.சி.ரகுநாதன்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
18	திரு.சக்திதாசன் சுப்ரமணியன்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
19	டாக்டர் ந.சஞ்சீவி	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
20	திரு.முல்லை முத்தையா	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
21	கவிஞர் எஸ்.டி.சுந்தரம்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
22	கவிஞர் மீரா	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
23	பேராசிரியர் ஆ.கார்மேகக் கோனார்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
24	புலவர் முகமது நயினார் மரைக்காயர்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
25	திரு.சு.சமுத்திரம்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
26	திரு.கோவை இளஞ்சேரன்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
27	பேராசிரியர் ந.சுப்புரெட்டியார்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)

வெ.இறையன்பு
அரசுச் செயலாளர் (கூ.பொ)

/ உண்மை நகல் /

சு.புதல்வன்
பிரிவு அலுவலர். 23/5/08

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – 2009–10–ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு – 21 தமிழ்ச் சான்றோர்களின் அனைத்து படைப்புகளும் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (தவ.1–1) துறை

அரசாணை (நிலை) எண்.119 நாள்: 02.06.2009
திருவள்ளுவராண்டு 2040
வைகாசி 19

படிக்க:

1. அரசு நேர்முக கடித எண்.5130/தவ1–1/2009–1, நாள் 19.02.2009
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.1007/தமிழ்1/2009, நாள் 27.02.2009 மற்றும் 05.05.2009

ஆணை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2009–10–ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

இந்த ஆண்டு 1. குழந்தைக்கவிஞர் அழ.வள்ளியப்பா, 2. கவியரசு கண்ணதாசன், 3. பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, 4. பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார், 5. மு.இராகவையங்கார், 6. பம்மல் சம்பந்தனார், 7. அ.சிதம்பரநாதன் செட்டியார், 8. மு.சு.பூரணலிங்கம்பிள்ளை, 9. தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான், 10. பாலூர் கண்ணப்பமுதலியார், 11. இராய. சொக்கலிங்கனார், 12. டாக்டர் மு. வரதராசனார், 13. முனைவர் ச. அகத்தியலிங்கம், 14. பாவலர் நாரா. நாச்சியப்பன், 15. புலியூர்க்கேசிகன், 16. எழுத்தாளர் சாண்டில்யன், 17. எழுத்தாளர் வை.மு.கோதைநாயகி, 18. சின்னஅண்ணாமலை 19. பூவை எஸ். ஆறுமுகம், 20. என்.வி.கலைமணி, 21. கவிஞர் முருகுசுந்தரம், 22. புலவர் த. கோவேந்தன், 23. எழுத்தாளர் சுந்தர ராமசாமி, 24. திருக்குறள்மணி அ.க. நவநீத கிருட்டிணன், 25. இலட்சுமி, 26. வடுவூர் துரைசாமி ஐயங்கார், 27. ஜமதக்னி மற்றும் 28. ஜெ. ஆர். ரங்கராஜு ஆகிய தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்கள் உருவாக்கிய நூல்களின் எண்ணிக்கை அவை சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கம், அவற்றின் பெருமை ஆகியவற்றின் அடிப்படையில் அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கப்படும்.

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்த தேவையான செயற்குறிப்புகளை அனுப்புமாறு மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டார். மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் பின்வரும் தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படுவதற்கு அவர்களின் மரபுரிமையர்கள் இசைவு அளிக்கும் நிலை இல்லை எனச் செய்தி / ஊடகம் வாயிலாக ஏற்கனவே தெரிவித்துள்ளனர் என்றும், தற்போது கடிதம் வாயிலாகவும் இயக்ககத்திற்குத் தெரிவித்துள்ளனர் என்றும்

(i). கவியரசு கண்ணதாசன்
(ii). டாக்டர் மு.வரதராசனார்
(iii). எழுத்தாளர் சாண்டில்யன்
(iv). எழுத்தாளர் சுந்தர ராமசாமி
(v). திருமதி. இலட்சுமி

திரு. ஜெ.ஆர்.ரங்கராஜு அவர்களின் மரபுரிமையர் விவரம் பல்வேறு வகையில் முயற்சி செய்தும் இதுவரை தெரியவரவில்லை என்றும், தொடர்ந்து விவரம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும், திரு.ஜமதக்னி அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்குவதற்கு அவர்தம் மரபுரிமையரான திருமதி.ஜமதக்னி சாந்தி அவர்கள், 'சில நூல்களை அளிப்பதில் இடையூறுகள் இருப்பதால் அந்நூல்கள் தொடர்பாக தனது ஒப்புதலை பின்னர் அறிவிக்கிறேன்' என அவர் 27.02.2009–ஆம் நாளிட்ட அவரது கடிதத்தில் தெரிவித்துள்ளார் என்றும், இதன் பின்னர் 24.04.2009 அன்று திருமதி.ஜமதக்னி சாந்தி அவர்களிடம் இசைவளிப்பது தொடர்பான கருத்து கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், அவரிடமிருந்து உரிய மறுமொழி வரப்பெற்றதும் அரசுக்குத் தனியே கருத்துரு அனுப்பி வைக்கப்பெறும் என்றும் தெரிவித்துள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, இவ்வரசாணையின் இணைப்பில் காணும் 21 தமிழ்ச் சான்றோர்களின் இலக்கியப் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி ஒப்புதல் அளித்த மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகையாக ஒவ்வொருவரின் மரபுரிமையர்களுக்கும் இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கும் பொருட்டு ரூ.81,00,000/– (ரூபாய் எண்பத்தொரு இலட்சங்கள் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.81,00,000/– (ரூபாய் எண்பத்தொரு இலட்சங்கள் மட்டும்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவி தொகை – 03. குறிப்பிட்டத் திட்டங்களுக்கான உதவித்தொகை (த.தொ.கு. 2202 05 800 JE 0933)

5. பரிவுத் தொகையைப் பெறவரும் மரபுரிமையர்களின் குடும்பத்தினர் சென்னை வந்து செல்லும் போக்குவரத்துச் செலவு மற்றும் ஏனைய செலவினத்துக்காக ஒவ்வொரு தமிழறிஞரின் மரபுரிமையருக்கும் ரூ.5,000/– (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) வீதம் மொத்தம் 21 பேருக்கு ரூ.1,05,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்) ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்:-

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை –05. அலுவலகச் செலவுகள் – 02. ஏனைய சில்லறைச் செலவுகள்."
(த.தொ.கு.2202 05 800 JE 0522)

7. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள 2009–10–ம் ஆண்டுக்கான வரவு – செலவு மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள 2009-2010-ஆம் ஆண்டிற்கான திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான தொகையினை 2009-2010-ஆம் ஆண்டு திருத்த / இறுதி திருத்த மதிப்பீட்டில் சேர்ப்பதற்கான கருத்துருவை தவறாது உரிய நேரத்தில் நிதி (த.வ. அநி (ம்) செ) துறைக்கு அனுப்பும்படி தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. மேலே பத்தி 3 மற்றும் 5–இல் ஒப்புவிக்கப்பட்ட தொகைக்கான பட்டியல்கள் உரிய அலுவலரால் சமர்ப்பிக்கப்படும்போது, அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் அவற்றை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–600001 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

10. மேலே பத்தி 3 மற்றும் 5–இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன்கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

11. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

12. கவியரசு கண்ணதாசன், டாக்டர் மு.வரதராசனார், எழுத்தாளர் சாண்டில்யன், இலட்சுமி மற்றும் எழுத்தாளர் சுந்தர ராமசாமி ஆகியோர்களின் நூல்களை

நாட்டுடைமையாக்க மற்ற மரபுரிமையர்களின் கருத்தறிந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் மேற்படி எழுத்தாளர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படுவது தற்போது நிறுத்தி வைக்கப்படுகிறது.

13. ஜெ.ஆர்.ரங்கராஜு அவர்களின் மரபுரிமையர் விவரம் இதுவரை தெரியவில்லை என்பதால் அதனை அறிந்து தனியே பரிசீலித்து அவரது நூல்கள் நாட்டுடைமை குறித்து ஆணை வெளியிடப்படும். திரு.ஜமதக்னி அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்க அவர்தம் மரபுரிமையர் இசைவளித்து சில நூல்களை நாட்டுடைமைக்கு அளிப்பதில் இடர்ப்பாடுகள் உள்ளது எனத் தெரிவித்துள்ளதால் மரபுரிமையர்களிடமிருந்து உரிய விவரம் பெற்றுத் தனியே பரிசீலித்து அவரது நூல்கள் நாட்டுடைமை குறித்து ஆணை வெளியிடப்படும்

14. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.100/துசெ(பூமர்)/2009, நாள் 02.06.2009–இல் பெற்ற இசைவுடன் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.182 (நூற்று எண்பத்து இரண்டு) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. முத்துசாமி,
அரசுச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
21 தமிழறிஞர்களின் குடும்பத்தினர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
<u>நகல்</u>
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (த.வ.அறி (ம) செ./ வ.செ.பொ I / வ.செ.பொ II)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
2/6/09

இணைப்பு

அரசாணை (நிலை) எண்.119, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ1–1) துறை, நாள் 02.06.2009

வ. எண்	தமிழ் சான்றோர்களின் பெயர் திருவாளர்கள்	ஒப்பளிக்கப்பட்ட பரிவுத் தொகை
(1)	(2)	(3)
	திருவாளர்கள்	
1.	குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
2.	பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை	ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)
3.	பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
4.	பம்மல் சம்பந்தனார்	ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)
5.	அ. சிதம்பரநாதன் செட்டியார்	ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)
6.	மு.சு. பூரணலிங்கம் பிள்ளை	ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)
7.	தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்	ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)
8.	பாலூர் கண்ணப்ப முதலியார்	ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)
9.	இராய. சொக்கலிங்கனார்	ரூ.5.00இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
10.	முனைவர் ச. அகத்தியலிங்கம்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
11.	பாவலர் நாரா. நாச்சியப்பன்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
12.	புலியூர்க் கேசிகன்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
13.	வை.மு. கோதைநாயகி	ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)
14.	சின்ன அண்ணாமலை	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)

15.	பூவை.எஸ். ஆறுமுகம்	ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)
16.	என்.வி. கலைமணி	ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)
17.	கவிஞர் முருகு சுந்தரம்	ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)
18.	புலவர் த. கோவேந்தன்	ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)
19.	திருக்குறள்மணி அ.க. நவநீத கிருட்டிணன்	ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)
20.	வடுவூர் துரைசாமி ஐயங்கார்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
21.	பேராசிரியர் மு.இராகவையங்கார்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)

(ஆளுநரின் ஆணைப்படி)

க. முத்துசாமி,
அரசுச் செயலாளர்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 2/6/09

<u>தமிழ்நாடு அரசு</u>

ரூ. 3.00 இலட்சம்

<u>சுருக்கம்</u>

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – 2009–10–ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு – பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்களின் நூல்களை நாட்டுடமையாக்கி அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

<u>தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ 1–1) துறை</u>

அரசாணை (நிலை) எண்.213

நாள்: 11.06.2010
திருவள்ளுவராண்டு 2041
வைகாசி 28

<u>படிக்கப்பட்டது:</u>

1. அரசாணை (நிலை) எண்.119, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (த.வ.1–1)த் துறை, நாள் 2.6.2009

<u>படிக்க:</u>

2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.1007/தமிழ்1/ 2009, நாள் 03.05.2010

========

<u>ஆணை</u>

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2009–10–ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துரு பெற்று 21 தமிழ்ச் சான்றோர்களின் இலக்கிய படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி ஒப்புதல் அளித்த மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை ஒப்பளித்து மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதத்தில், ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட 21 தமிழறிஞர்களில், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்களின் மரபுரிமையர்கள் உரிய சான்றாவணங்கள் அப்போது அளிக்கப்படாததால் பரிவுத் தொகை ரூ.3.00 இலட்சம் வழங்கப்படவில்லை என்றும், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களின் மரபுரிமையர்கள் தொடர்பான அறிக்கை தற்போது திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டுள்ளது என்றும், அவர் அளித்துள்ள விவர அறிக்கையின் அடிப்படையில், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்களின் மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை ரூ.3.00 இலட்சம் மட்டும் பகிர்ந்தளிக்கப்படலாம் என்று தெரிவித்துள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்களின் இலக்கியப் படைப்புகள் அனைத்தையும்

நாட்டுடைமையாக்கி ஒப்புதல் அளித்த மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகையாக ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவி தொகை – 03. குறிப்பிட்டத் திட்டங்களுக்கான உதவித் தொகை"
(த.தொ.கு. 2202 05 800 JE 0933)

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2010-2011-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், பத்தில் 3–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2010-2011-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (த.வ. அநி (ம) செ) துறைக்கு அனுப்பும்படி தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.ங

6. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன்கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

7. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.27666/நிதி (தவ.அநி (ம) செ)/ 2010, நாள் 8.6.2010–இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.251 (இருநூற்று ஐம்பத்து ஒன்று) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. முத்துசாமி,
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
இயக்குநர்,
தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் மரபுரிமையர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.

நகல்

முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (த.வ.அநி (ம) செ./ வ.செ.பொ I / வ.செ.பொ II)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

ரூ. 2.00 இலட்சம்.

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – 2009–10–ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு – பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்களின் நூல்களை நாட்டுடமையாக்கி அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்கப்பட்டது – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ 1–1) துறை

அரசாணை (நிலை) எண்.345

நாள் 26.08.2010
திருவள்ளுவராண்டு 2041
ஆவணி 10

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண்.119, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (த.வ.1–1)த் துறை, நாள் 2.6.2009
2. அரசாணை (நிலை) எண்.213, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (த.வ.1–1)த் துறை, நாள் 11.6.2009

படிக்க:-

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.1007/தமிழ்1/ 2009, நாள் 03.05.2010

=======

ஆணை:

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்களின் இலக்கியப் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி ஒப்புதல் அளித்த மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகையாக ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது.

2. மூன்றாவதாகப் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில், அனுப்பப்பட்டுள்ள தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவை ஏற்று, பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்களின் மரபுரிமையர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள பரிவுத் தொகை ரூ.3.00 இலட்சத்துடன் கூடுதலாக ரூ.2.00 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) அவர்களின் மரபுரிமையர்களுக்கு வழங்கவும், அதற்கான கூடுதல் செலவினத்திற்கு நிதி ஒப்பளித்தும் அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09 உதவி தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"
(து.தொ.கு. 2202 05 800 JE 0933)

4. மேலும், பரிவுத் தொகை பெறவரும் மரபுரிமையர்கள் / குடும்பத்தாருக்குச் சிறப்பு செய்யும் பொருட்டுக் காசோலை உறை, சென்னை வந்து செல்லப் போக்குவரத்துக் கட்டணமாக ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) மற்றும் சிற்றுண்டி, மதிய உணவு, மற்றும் பிற சில்லறைச் செலவினங்களை மேற்கொள்ள ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) என மொத்தம் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்:-

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800 ஏனைய செலவுகள் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநர் பொறுப்பில் உள்ளவை – 05. அலுவலகச் செலவுகள் – 2. ஏனைய சில்லறைச் செலவுகள்"
(த.தொ.கு. 2202 05 800 JE 0522)

6. மேலே பத்தி 2 மற்றும் 4–இல் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் செலவினத்தினை மேற்கொள்ள, தேவைபான கூடுதல் நிதி ஒதுக்கம் 2010–2011–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதிபொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 2 மற்றும் 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை–8 அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும் பத்தி 2 மற்றும் 4–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்காக உரிய கருத்துருவை 2010–2011–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (த.வ. அநி (ம) செ) துறைக்கு அனுப்பும்படி இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அறிவுறுத்தப்படுகிறார்.

7. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன்கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

8. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 47457/நிதி (தவ.அநி(ம)செ) / 2010, நாள் 02.06.2009–இல் பெற்ற இசைவுடன் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.775 (எழுநூற்று எழுபத்து ஐந்து)–உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. முத்துசாமி,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் மரபுரிமையர்கள் (தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.

<u>நகல்</u>
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (த.வ.அநி (ம) செ./ வ.செ.பொ I / வ.செ.பொ II)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(க. அன்னை)
அரசு சார்புச் செயலாளர்.

29

<u>தமிழ்நாடு அரசு</u>

<u>சுருக்கம்</u>

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – எழுத்தாளர் திருமதி.ராஜம் கிருஷ்ணன் படைப்புகளை நாட்டுடைமையாக்கல் அவருக்கு பரிவுத் தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (தவ.1–1) துறை

அரசாணை (நிலை) எண்.120

நாள்: 02.06.2009
திருவள்ளுவராண்டு 2040
வைகாசி 19

<u>படிக்க:</u>

1. திருமதி இராஜம் கிருஷ்ணன் மனுக்கள் நாள் 28.02.2009
2. அரசு நேர்முகக் கடித எண்:8180/தவ1–1/ 2009–1, நாள்: 23.3.2009
3. தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித எண்.3039/தமிழ்1/2009, நாள் 23.03.2009

<u>ஆணை:-</u>

திருமதி. ராஜம்கிருஷ்ணன் முதலாவதாகப் படிக்கப்பட்ட மனுவில் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழில் தொடர்ந்து படைப்பிலக்கியத்தில் நிறைவான பங்களிப்பு செய்துள்ளதாகவும், இவற்றில் பெரும்பாலானவை பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை கள ஆய்வின் அடிப்படையில் ஆய்வு செய்து எழுதப்பட்டவை என்றும், இப்படைப்புகளுக்காக அவருக்கு சாகித்ய அகாடமி விருது, தமிழக அரசு விருது போன்ற பல விருதுகள் கிடைத்துள்ளன என்றும், தற்போது மருத்துவ வசதிக்காக இராமச்சந்திரா மருத்துவமனையில் இலவசப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், அவருக்கு வாரிசுரிமை இல்லாததால் அவருக்கு வாழும் காலத்திலேயே அவரது படைப்புகளை நாட்டுடைமையாக்கும்படியும், மருத்துவமனையிலிருந்து சிகிச்சை முடிந்த பிறகு அவருக்கு குடியிருக்க வீடு இல்லாததால் அவர் வாழும் காலம் வரையிலும், அவருக்கென குடியிருக்க வீடு வழங்கும்படியும் கேட்டிருந்தார். இதுகுறித்து தமிழ் வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை கோரப்பட்டது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் எழுத்தாளர் திருமதி.ராஜம்கிருஷ்ணன் அவர்கள் 5.11.1925இல் முசிறியில் பிறந்தவர் என்றும், தற்போது 84 வயதாகும் இவர் 50 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழில் தொடர்ந்து படைப்புகளைப் படைத்து வருகிறார் என்றும், தமிழ் இலக்கிய உலகிற்கு – குறிப்பாகத் தற்காலத் தமிழ் இலக்கிய உலகிற்கு அவரது படைப்புகள் மிகப் பெரிய கொடையாகத் திகழ்கின்றன என்றும், பெண்ணுரிமைக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வரும் அவர், தமது படைப்புகளில் அதனை அழுத்தம் திருத்தமாக எழுதி நிலைநாட்டி வருபவர் என்றும், சிறந்த எழுத்தாளராகத் திகழும் அவர் குழந்தை இலக்கிய வல்லுநரும், நல்ல மொழிபெயர்ப்பாளரும் ஆவார் என்றும், புதினங்கள், சிறுகதை,

சிறுவர் கதை, பெண்ணியக் கட்டுரைகள், வாழ்க்கை வரலாறு, கட்டுரைகள் என 70க்கும் மேற்பட்ட படைப்புகளைப் படைத்துத் தமிழ் மொழிக்கு வளம் சேர்த்துள்ள பெருமாட்டி அவர் என்றும், அவர் பாதிக்கப்பட்ட – அடித்தட்டு மக்களின் வாழ்க்கையை நேரடி ஆய்வு செய்து அதனைத் தம் படைப்புகளில் பளிச்செனக் காட்டி, சமூக விழிப்புணர்வு ஏற்படவும், நலிந்தோர்க்கு நல் வாய்ப்புகள் அமையவும் தம் படைப்புகளால் அடித்தளமிட்டவர் அவர் என்றும், அவர்தம் படைப்புகளுள் ‘வேருக்கு நீர்’, ‘பெண் குரல்’, ‘கரிப்பு மணிகள்’, ‘வளைக்கரம்’ முதலியன சாகித்திய அகாதமி பரிசு உள்ளிட்ட பற்பல பரிசுகளைப் பெற்றுள்ளன என்றும், அவருக்குத் தமிழ்நாடு அரசு 1991ஆம் ஆண்டில் திரு.வி.க. விருது (விருதுத் தொகை ரூ.10,000/–) வழங்கியுள்ளது. என்றும், தமிழுக்குத் தமது படைப்புகளால் வளமூட்டியுள்ள எழுத்தாளர் திருமதி.ராஜம்கிருஷ்ணன் அவர்கள் தம் கணவர் மறைவுக்குப்பின் வாரிசுகள் இன்றியும் வசதிகளை இழந்தும் ஆதரவின்றியும் அல்லலுற்று வருகிறார் என்றும், ஒரு கட்டண இல்லத்தில் தங்கியிருந்த அவர் தற்போது உடல் நலமின்மையால் சென்னை, போரூர் இராமச்சந்திரா மருத்துவமனையில் உள்ள இலவசப் பிரிவில் தங்கிச் சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், தமது படைப்புகளால் தமிழுக்கு வளம் சேர்த்து, 84ஆம் வயதில் பொருளாதாரமின்றியும் ஆதரிப்பாரின்றியும் அல்லலுறும் எழுத்தாளர் திருமதி.ராஜம்கிருஷ்ணன் அவர்களின் கோரிக்கை முழுமையாக ஏற்கப்படலாம் என்றும், இவ்வகையில், தமிழறிஞர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கிப் பரிவுத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் எழுத்தாளர் திருமதி.ராஜம்கிருஷ்ணன் அவர்களின் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி அவருக்குப் பரிவுத் தொகை வழங்கும் வகையில் ஆணை வெளியிடப்படலாம் என்றும், பொதுவாக, மறைந்த தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்றும், எனினும், 1984ஆம் ஆண்டில் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களின் நூல்களுள் ‘விடுதலைப் போரில் தமிழகம்’ எனும் ஒரு நூல் மட்டும் ம.பொ.சி. அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே நாட்டுடைமையாக்கப்பட்டு அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிவுத் தொகை வழங்கப்பட்ட முன் நிகழ்வு உள்ளது என்றும், இவ்வகையில் எழுத்தாளர் திருமதி. ராஜம்கிருஷ்ணன் அவர்களின் தமிழ்ப் பணியையும், அவர் ஆதரவின்றி அல்லலுறும் நிலையையும் தனி நேர்வாகக் கருதிப் பார்த்து அவர்தம் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கிப் பரிவுத் தொகை வழங்கலாம் என தமிழ் வளர்ச்சி இயக்குநர் பரிந்துரைத்திருந்தார்.

4. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து எழுத்தாளர் திருமதி.ராஜம்கிருஷ்ணண் அவர்களின் தமிழ்ப் பணியினையும், அவர் ஆதரவின்றி அல்லலுறும் நிலையையும் தனி நேர்வாகக் கருதிப் பார்த்து தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை ஏற்று, தமிழறிஞரின் படைப்புக்களை நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், திருமதி.ராஜம் கிருஷ்ணன் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கிப் பரிவுத் தொகையாக ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி–800. ஏனைய செலவு – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவி தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை
(த.தொ.கு.2202 05 800 JE 0933)

6. பரிவுத் தொகையைப் பெறவரும் திருமதி.ராஜம் கிருஷ்ணன் வந்து செல்லும் போக்குவரத்துச் செலவு மற்றும் ஏனைய செலவினத்துக்காக ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி 6–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்:-

"2202. பொதுக் கல்வி –05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 05. அலுவலகச் செலவுகள் – 02. ஏனைய சில்லறைச் செலவுகள்."
(த.தொ.கு. 2202 05 800 JE 0522)

8. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள 2009–10–ம் ஆண்டுக்கான வரவு–செலவு மதிப்பீட்டில் நிதியொதுக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

9. மேலே பத்தி 6–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள 2009–10–ம் ஆண்டிற்கான திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 6–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான தொகையினை 2009–2010–ஆம் ஆண்டு திருத்த / இறுதி திருத்த மதிப்பீட்டில் சேர்ப்பதற்கான கருத்துருவை தவறாது உரிய நேரத்தில் நிதி (த.வ. அநி (ம) செ) துறைக்கு அனுப்பும்படி தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

10. மேலே பத்தி 4 மற்றும் 6–இல் ஒப்புவிக்கப்பட்ட தொகைக்களுக்கான பட்டியல்கள் உரிய அலுவலரால் சமர்ப்பிக்கப்படும்போது, அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் அவற்றை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–600001 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

11. மேலே பத்தி 4 மற்றும் 6–இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன்கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள

செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

12. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.101/துசெ(பூமா)/2009, நாள் 02.06.2009–இல் பெற்ற இசைவுடன் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.183 (நூற்று எண்பத்து மூன்று) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. முத்துசாமி,
அரசுச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
திருமதி. ராஜம் கிருஷ்ணன், எழுத்தாளர்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
<u>நகல்</u>
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (த.வ.அநி (ம) செ./ வ.செ.பொ I / வ.செ.பொ II)துறை, செ–9.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

சு.புதலிங்கம் 2/6/09
பிரிவு அலுவலர்.
2/6/09

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – எழுத்தாளர் திரு.மணவை முஸ்தபா படைப்புகளை நாட்டுடைமையாக்கல் – அவருக்கு பரிவுத் தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ 1–1) துறை

அரசாணை (நிலை) எண்.101

நாள்: 31.03.2010
திருவள்ளுவராண்டு 2041
பங்குனி 17

படிக்க:

1. திரு. மணவை முஸ்தபா அவர்களின் மனு நாள் 10.03.2010
2. தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.தமிழ்1/1419/2010, நாள் 15.3.2010

========

ஆணை:-

திரு. மணவை முஸ்தபா முதலாவதாகப் படிக்கப்பட்ட மனுவில் அவரது படைப்புகளை நாட்டுடைமையாக்கிப் பரிவுத் தொகை வேண்டியிருந்தார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், அறிவியல் தமிழ் எழுத்தாளர் திரு.மணவை முஸ்தபா அவர்கள் 15.6.1935–இல் திண்டுக்கல் மாவட்டம் பிலாத்து கிராமத்தில் பிறந்தவர் என்றும், தற்போது 75 வயதாகும் இவர் 40 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழில் தொடர்ந்து படைப்புகளை படைத்து வருகிறார் என்றும், மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம், கணினிக் கலைச்சொல் களஞ்சிய அகராதி ஆகிய நூல்களுக்கு பரிசுகள் பெற்றுள்ளார் என்றும், அதேபோன்று கலைமாமணி விருது, திரு.வி.க.விருது, வளர் தமிழ்ச் செல்வர் எனப்பல விருதுகளையும், பாராட்டுகளையும் பெற்றவர் என்றும், சிறந்த எழுத்தாளராகத் திகழும் இவர் அறிவியல் கலைச்சொல் அகராதி தொகுதி–1 மற்றும் தொகுதி–2, மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம், கணினிக் களஞ்சிய அகராதி உட்பட 30–க்கும் மேற்பட்ட படைப்புகளைப் படைத்துத் தமிழ் மொழிக்கு வளம் சேர்த்துள்ளார் என்றும், தமிழ் செம்மொழி என அறிவிக்கப்பட வேண்டுமென பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர் ஆவார் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், அவர் தமது அறிக்கையில், மாண்பமிகு முதலமைச்சர் அவர்கள், இவரை அறிவியல் தமிழ் மன்றத்தின் தலைவராகவும் நியமித்தார்கள் என்றும், இவர் 14.9.2006 முதல் 30.6.2009 வரை அறிவியல் தமிழ் மன்றத்தின் தலைவராக பணியாற்றினார் என்றும், அறிவியல் தமிழுக்கு அவரது படைப்புகளால் வளமூட்டிய எழுத்தாளர் திரு.மணவை முஸ்தபா அவர்கள் தற்போது முழுமையாக பேசவோ, எழுந்து செயல்படவோ இயலாத நிலையில் உடல்நலம் குன்றியுள்ளார் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு திரு மணவை முஸ்தபா அவர்கள் அனுப்பியுள்ள 10.3.2010ம் நாளிட்ட கடிதத்தில் அவரால் முழுமையாக பேசவோ எழுந்து செயல்படவோ இயலாத நிலையில் இருந்து வருவதாகவும் அவருடைய மருத்துவ செலவுக்கு உதவுவதற்காக அவர் படைத்த அறிவியல் தமிழ் மற்றும் கணிணிக் கலைக் களஞ்சியம்

உள்ளிட்ட 42 நூல்களை தனி நேர்வாக கருதி நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகை வழங்கி உதவி கேட்டுக்கொண்டுள்ளார் என்றும் இவருக்கு பரிவுத்தொகை வழங்கும்வகையில் ஆணை வெளியிடலாம் என தமிழ் வளர்ச்சி இயக்குநர் பரிந்துரைத்துள்ளார்.

4. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து எழுத்தாளர் திரு.மணவை முஸ்தபா அவர்களின் தமிழ்ப் பணியினையும், அவரால் முழுமையாக பேசவோ எழுந்து செயல்படவோ இயலாத நிலையில் இருந்து வருவதால் அவருடைய மருத்துவ செலவுக்கு உதவுவதற்காக தனி நேர்வாகக் கருதிப் பார்த்து, தமிழறிஞரின் படைப்புக்களை நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், திரு. மணவை முஸ்தபா படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கிப் பரிவுத் தொகையாக ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி–800. ஏனைய செலவு – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவி தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை
> **(த.தொ.கு.2202 05 800 JE 0933)**

6. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை 2009–10–ம் ஆண்டுக்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்திலேயே மேற்கொள்ளப்படும்.

7. மேலே பத்தி 4–இல் ஒப்புவிக்கப்பட்ட தொகைக்கான பட்டியல் உரிய அலுவலரால் சமர்ப்பிக்கப்படும்போது, அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் அவற்றை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–600001 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன்கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.84/து.செ (பூ.மா)/2010, நாள் 31.03.2010–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. முத்துசாமி,
அரசுச் செயலாளர்

<u>பெறுநர்</u>
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
திரு. மணவை முஸ்தபா, எழுத்தாளர்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.

நகல்
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (து.வ.அநி (ம) செ./ வ.செ.பொ I / வ.செ.பொ II) துறை, சென்னை–9.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சா. முத்துலிங்கம் 31/3/10
பிரிவு அலுவலர்

30

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – 2010–11–ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு – 22 தமிழ்ச் சான்றோர்களின் அனைத்து படைப்புகளும் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ 1–1) துறை

அரசாணை (நிலை) எண்.156

நாள்: 07.05.2010
திருவள்ளுவராண்டு 2041
சித்திரை 24

படிக்க:

1. தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.2917/தமிழ்–1/2010, நாள் 26.3.2010

========

ஆணை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2010–11–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

"இந்த ஆண்டு 1. பேராசிரியர் அ. மு. பரம சிவானந்தம், 2. பேராசிரியர் அ. கிருஷ்ணமூர்த்தி, 3. டாக்டர் எஸ். எம். கமால், 4. திரு. ப. இராமசாமி, 5. பேராசிரியர் ர.சீனிவாசன், 6. திரு.வ.சு.செங்கல்வராய பிள்ளை, 7. கவிஞர் வெள்ளியங்காட்டான், 8. திரு. நெ.து. சுந்தரவடிவேலு, 9. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், 10. மயிலை சிவமுத்து, 11. திரு. காழிசிவகண்ணுசாமி பிள்ளை, 12. திரு. கே. பி. நீலமணி, 13. கவிராஜ பண்டிதர் ஜெகவீரபாண்டியன், 14. திரு. அ. திருமலை முத்துசாமி, 15. திரு. நவராஜ் செல்லையா, 16. திருகூட சுந்தரம், 17. பேராசிரியர் சுந்தரசண்முகனார், 18. தஞ்சை ராமையாதாஸ், 19. கவிஞர் தாராபாரதி, 20. திரு. அருதனக் குட்டி அடிகளார், 21. திருமதி சரோஜா இராமமூர்த்தி, 22. திரு. அ. சீனிவாசன் ஆகிய 22 தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்கள் உருவாக்கிய நூல்களின் எண்ணிக்கை, அவை சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கம், அவற்றின் பெருமை ஆகியவற்றின் அடிப்படையில் அவர்தம் மரபுரிமையருக்குப் பரிவுத் தொகை வழங்கப்படும்"

2. மேலே கண்ட அறிவிப்பிற்கிணங்க, 22 தமிழ்ச் சான்றோர்களின் இலக்கிய படைப்புகளை நாட்டுடைமையாக்கி உரிய பரிவுத் தொகையை வழங்க அரசு நிலையில் அறுதி செய்யலாம் என தமிழ் வளர்ச்சி இயக்குநர் பரிந்துரைத்துள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, இவ்வரசாணையின் இணைப்பில் காணும் 22 தமிழ்ச் சான்றோர்களின் இலக்கியப் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி ஒப்புதல் அளித்த மரபுரிமையர்களுக்கு

பரிவுத்தொகையாக ஒவ்வொருவரின் மரபுரிமையர்களுக்கும் இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கும் பொருட்டு ரூ.1,47,00,000/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஏழு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.1,47,00,000/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தி ஏழு இலட்சம் மட்டும்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை
> (த.தொ.கு. 2202 05 800 JE 0933)

5. மேலும், பரிவுத் தொகையைப் பெறவரும் மரபுரிமையர்களின் குடும்பத்தினர் சென்னை வந்து செல்லும் போக்குவரத்துச் செலவு மற்றும் ஏனைய செலவினத்துக்காக ஒவ்வொரு தமிழறிஞரின் மரபுரிமையருக்கும் ரூ.5,000/– (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) வீதம் மொத்தம் 22 பேருக்கு ரூ.1,10,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்:-

> "2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 05. அலுவலகச் செலவுகள் – 02. ஏனைய சில்லறைச் செலவுகள்"
> (த.தொ.கு.2202 05 800 JE 0522)

7. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள 2010–11–ம் ஆண்டுக்கான வரவு–செலவு மதிப்பீட்டில் ரூ.1,00,00,000/– (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது பரிவுத் தொகை வழங்கப்படவுள்ள 22 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு மேலே தெரிவிக்கப்பட்டுள்ள ரூ.1,00,00,000/–க்கு அதிகமாக தேவைப்படும் கூடுதல் நிதி ஒதுக்கம் ரூ.47,00,000/– (ரூபாய் நாற்பத்தி ஏழு இலட்சம் மட்டும்) மற்றும் போக்குவரத்துச் செலவு மற்றும் ஏனைய செலவினத்திற்கான ரூ.1,10,000/–த்தினையும் 2010-2011-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3 மற்றம் 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான தொகையினை 2010-2011-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவை தவறாது உரிய நேரத்தில் நிதி (த.வ. அநி (ம) செ) துறைக்கு அனுப்பும்படி தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. மேலே பத்தி 3 மற்றும் 5–இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன்கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

9. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது

10. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.17/இ.செ (பூ.மா)/2010, நாள் 7.5.2010–இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.114 (நூற்று பதினான்கு)–உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. முத்துசாமி,
அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
22 தமிழறிஞர்களின் குடும்பத்தினர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.

நகல்
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (த.வ.அநி (ம) செ./ வ.செ.பொ I / வ.செ.பொ II)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 7/5/10

7/5/10

இணைப்பு

அரசாணை (நிலை) எண். 156, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ1–1) துறை, நாள் 07.05.2010

வ. எண்	தமிழ் சான்றோர்களின் பெயர் திருவாளர்கள்	ஒப்பளிக்கப்பட்ட பரிவுத் தொகை
(1)	(2)	(3)
1.	பேராசிரியர் அ. மு. பரம சிவானந்தம்,	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
2.	பேராசிரியர் அ. கிருஷ்ணமூர்த்தி	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
3.	டாக்டர் எஸ். எம். கமால்	ரூ.7.00 இலட்சம் (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்)
4.	திரு. ப. இராமசாமி	ரூ.6.00 இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்)
5.	பேராசிரியர் ர. சீனிவாசன்	ரூ.7.00 இலட்சம் (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்)
6.	திரு.வ.சு.செங்கல்வராய பிள்ளை	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
7.	கவிஞர் வெள்ளியங்காட்டான்	ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)
8.	திரு. நெ.து. சுந்தரவடிவேலு	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
9.	டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்	ரூ.7.00 இலட்சம் (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்)
10.	மயிலை சிவமுத்து	ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)
11.	திரு. காழிசிவகண்ணுசாமி பிள்ளை	ரூ.6.00 இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்)
12.	திரு. கே. பி. நீலமணி	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
13.	கவிராஜ பண்டிதர் ஜெகவீரபாண்டியன்	ரூ.6.00 இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்)
14.	திரு. அ. திருமலை முத்துசாமி	ரூ.7.00 இலட்சம் (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்)
15.	திரு. நவராஜ் செல்லையா	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)

16.	திருகூட சுந்தரம்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
17.	பேராசிரியர் சுந்தரசண்முகனார்	ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
18.	தஞ்சை ராமையாதாஸ்	ரூ.6.00 இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்)
19.	கவிஞர் தாராபாரதி	ரூ.7.00 இலட்சம் (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்)
20.	திரு. அருதனக் குட்டி அடிகளார்	ரூ.7.00 இலட்சம் (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்)
21.	திருமதி சரோஜா இராமமூர்த்தி	ரூ.7.00 இலட்சம் (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்)
22.	திரு. அ. சீனிவாசன்	ரூ.6.00 இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்)

க. முத்துசாமி,
அரசுச் செயலாளர்.

/ உண்மை நகல் /

7/5/10

பிரிவு அலுவலர்.

7/5/10

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – இரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ 1–1) துறை

அரசாணை (நிலை) எண்.254 நாள் 23.06.2010
திருவள்ளுவராண்டு 2041
ஆனி 9

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.3689/தமிழ்–1/2010, நாள் 13.4.2010

========

ஆணை:

தமிழ் வளர்ச்சி இயக்குநர், மேலே படிக்கப்பட்ட அவரது கடிதத்தில், இரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்கள் 1882–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்து, 16.2.1954–இல் மறைந்தார் என்றும், இவர் 1915–இல் திருநெல்வேலியில் வழக்கறிஞராகப் பணியாற்றத் தொடங்கியவர் என்றும், 'வட்டத் தொட்டி' என்னும் இலக்கியச் சங்கத்தை நிறுவிப் பழந்தமிழ்ச் செய்யுட்களையும், கலைகளையும் அருமையாக விளக்கி தமிழுக்குத் தொண்டாற்றி வந்தவர் என்றும், 1927 முதல் 1930 வரை ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் சென்னை மேலவை சட்ட உறுப்பினராக இருந்தவர் என்றும், இவர் எங்கு சென்றாலும் தமிழ் மொழியின் பெருமைகளையும் தமிழ்நாட்டில் கலைகளின் சிறப்புகளையும் எடுத்துக் கூறுவார் என்றும், ஆங்கிலப் பற்றுடைய பலர் இவரால் தமிழ்த் தொண்டர்களாயினர் என்றும், பரத நாட்டியத்திற்கும், தமிழிசைக்கும் தமிழ் ஓவியம் முதலான தமிழரின்கலைகளுக்கும் ஒரு புதிய விழிப்புணர்வை உண்டாக்கியவர் என்றும், அவர் வாழ்வில் பெரும்பகுதியைக் கம்பராமாயணத்தைத் தமிழ் மக்கள் சுவைக்குமாறு செய்வதிலேயே கழித்தவர் என்றும், 'கல்கி' இதழில் 'கம்பர் தருங்காட்சி' எனப் பெயரிட்டு நீண்ட காலம் கம்பராமாயண செய்யுட்களின் சுவைகளை விளக்கி வந்தவர் என்றும், இவர் கம்பர் தரும் இராமாயணம் (மூன்று பாகங்கள்), முத்தொள்ளாயிரம் உரை ஆகிய நூல்களைப் பதிப்பித்தும், கம்பர் யார்?, இதய ஒலி, அற்புதரசம், கம்பர் தரும் காட்சிகள், தமிழ்க் களஞ்சியம் முதலிய பல நூல்களைப் படைத்தும் தமிழில் இலக்கியத்திற்கு வளம் சேர்த்தவர் என்றும் தெரிவித்துள்ளார்.

2. தமிழ் வளர்ச்சி இயக்குநர், இவ்வகையில் தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் வளம் சேர்த்த தமிழறிஞர் இரசிகமணி டி.கே.சி. அவர்களின் நூல்கள் அனைத்தையும், தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கிப் பரிவுத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் நாட்டுடைமையாக்கி அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத்தொகை வழங்கும் வகையில் ஆணை வெளியிடலாமெனவும், வழங்கப்படவுள்ள பரிவுத் தொகையை அரசு நிலையில் முடிவு செய்யலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, இரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்களின் இலக்கியப் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி ஒப்புதல் அளித்த மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகையாக ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும், இப்பரிவுத் தொகையினைப் பெறவரும் இரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்களின் மரபுரிமையர்கள் சென்னை வந்து செல்ல தேவைப்படும் போக்குவரத்து / ஏனைய செலவினத்தை மேற்கொள்ள ரூ.5,000/– (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் -- II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்டத் திட்டங்களுக்கான உதவித் தொகை''
> (த.தொ.கு.2202 05 800 JE 0933)

> "2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 05. அலுவலகச் செலவுகள் – 02. ஏனைய சில்லறைச் செலவுகள்"
> (த.தொ.கு.2202 05 800 JE 0522)

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2010–2011–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தைப் பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், பத்தி 3–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2010–2011–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (த.வ. அநி (ம) செ) துறைக்கு அனுப்பும்படி தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன்கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

7. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.34091/நிதி (தவ.அநி (ம) செ)/ 2010, நாள் 21.6.2010–இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.331 (முந்நூற்று முப்பத்து ஒன்று) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. முத்துசாமி,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
இரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்களின் மரபுரிமையர்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
<u>நகல்</u>
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (த.வ.அநி (ம) செ./ வ.செ.பொ I / வ.செ.பொ II)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 23/2/11

<u>தமிழ்நாடு அரசு</u>

<u>சுருக்கம்</u>

தமிழ் வளர்ச்சி – தமிழ்நாடு அரசு 2009–10–ம் ஆண்டு நிதிநிலை அறிவிப்பு –தமிழறிஞர் ஜே.ஆர்.ரங்கராஜு அவர்களின் நூல்களை நாட்டுடமையாக்கி அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

<u>தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ 1–1) துறை</u>

அரசாணை (நிலை) எண்.290

நாள் 15.07.2010
திருவள்ளுவராண்டு 2041
ஆனி 31

<u>படிக்கப்பட்டது:</u>

1. அரசாணை (நிலை) எண்.119, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (த.வ.1–1)த் துறை, நாள் 2.6.2009

<u>படிக்க:</u>

2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.1007/தமிழ்1/ 2009, நாள் 03.05.2010

=======

<u>ஆணை</u>

தமிழ்நாடு அரசின் 2009–10–ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் 28 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்க அறிவிக்கப்பட்டது. அவற்றுள் தமிழறிஞர் திரு.ஜே.ஆர்.இரங்கராஜு அவர்களின் நூல்களும் நாட்டுடைமையாக்க அறிவிக்கப்பட்டது.

2. தமிழறிஞர் திரு.ஜே.ஆர்.ரங்கராஜு அவர்களின் மரபுரிமையர்கள் தொடர்பான அறிக்கை, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டது என்றும், மரபுரிமையர்கள் நாட்டுடைமையாக்குதலுக்கு இசைவளித்துள்ளதாலும், தமிழறிஞர் ஜே.ஆர்.ரங்கராஜு அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கியும் உரிய மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடப்படலாம் என்று தமிழ் வளர்ச்சி இயக்குநர் கருத்து தெரிவித்துள்ளார். மேலும், அவர் திரு.ஜே.ஆர்.ரங்கராஜு அவர்கள் பின்வரும் நூல்களை படைத்துள்ளார் என்றும் தெரிவித்தள்ளார்:–

1. இராஜாம்பாள்
2. மோகனசுந்தரம்
3. சந்திரகாந்தா
4. ஆனந்தகிருஷ்ணன்
5. இராஜேந்திரன்
6. ஜெயரங்கன்
7. வரதராஜம்
8. விஜயராகவன்

3. தமிழ்நாடு அரசு, 2008–09–ஆம் ஆண்டு நிதிநிலை அறிவிப்பில் அறிவித்தவாறு தமிழறிஞர் ஜே.ஆர்.ரங்கராஜு அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்க அரசு ஆணையிடுகிறது. அதனடிப்படையில் அவரது மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வழங்க நிதி ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பரிவுத்தொகையினை பின்வரும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்டத் திட்டங்களுக்கான உதவித் தொகை
(த.தொ.கு. 2202 05 800 JE 0933)

5. நாட்டுடைமையாக்கப்பட்டமைக்குரிய பரிவுத் தொகை பெறவரும் மரபுரிமையர்களின் குடும்பத்தாருக்கு சிறப்பு செய்யும் பொருட்டு காசோலை உறை, சென்னை வந்து செல்ல போக்குவரத்து செலவு, சிற்றுண்டி, மதிய உணவு ஆகியவற்றை வழங்கவும் மற்றும் பிற சில்லறை செலவினங்களை மேற்கொள்ள அரசு ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பின்வரும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும் :–

"2202. பொதுக்கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800 ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநர் பொறுப்பில் உள்ளவை – 05. அலுவலக செலவுகள் – 02. ஏனைய சில்லறைச் செலவுகள்"
(த.தொ.கு. 2202 05 800 JE 0522)

7. மேலே பத்தி 3 மற்றும் 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2010–2011–ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3 மற்றும் 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தைப் பெற்று வழங்கிட இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், பத்தி 3 மற்றும் 5–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2010–2011–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (த.வ. அநி (ம) செ) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. மேலே ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன்கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

9. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.2/துசெ (ட்டி.எஸ்.எம்)/2010, நாள் 15.7.2010–இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.505 (ஐநூற்று ஐந்து) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. முத்துசாமி,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
தமிழறிஞர் ஜே.ஆர். ரங்கராஜுவின் மரபுரிமையர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (த.வ.அநி (ம) செ./வ.செ.பொ II) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்பு செயலாளர்.
15/7/10

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – ஏ.கே.வேலன் அவர்களின் நூல்களை நாட்டுடமையாக்கி அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ 1–1) துறை

அரசாணை (நிலை) எண்.411

நாள் 14.10.2010
திருவள்ளுவராண்டு 2041
புரட்டாசி 28

படிக்க:-

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.8339/தமிழ்1/ 2009, நாள் 02.09.2010

========

ஆணை

தமிழ் வளர்ச்சி இயக்குநர், மேலே படிக்கப்பட்ட அவரது கடிதத்தில், திரு.ஏ.கே.வேலன் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம் ஆலங்குடி எனும் கிராமத்தில் 24.10.1921–இல் பிறந்தவர் என்றும், இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் குழந்தை வேலன் என்றும், பள்ளி இறுதி வகுப்பு வரை படித்த இவர், ஆசிரியர் பயிற்சி முடித்து, கரந்தை தமிழ்ச் சங்கத்தில் ஆசிரியராகப் பணியாற்றி உள்ளார் என்றும், பகுத்தறிவு கொள்கையில் ஈர்க்கப்பட்டு, பகுத்தறிவு கொள்கைகளைப் பரப்பும் விதமாக எரிமலை, ஞாயிறு போன்ற நாளிதழ்களை நடத்தியவர் என்றும், தமிழக அரசால் கலைமாமணி விருது வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்டவர் என்றும், இவர் 7.11.2006–இல் மறைந்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

2. தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் வளம் சேர்த்த தமிழறிஞர் ஏ.கே.வேலன் அவர்களின் நூல்கள் அனைத்தையும், தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கிப் பரிவுத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், நாட்டுடைமையாக்கி, அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத்தொகை வழங்கும் வகையில் ஆணை வெளியிடலாமெனவும், வழங்கப்படவுள்ள பரிவுத் தொகையை அரசு நிலையில் முடிவு செய்யலாம் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, தமிழறிஞர் ஏ.கே.வேலன் அவர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்க, ஒப்புதல் அளித்த மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகையாக ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும், இப்பரிவுத் தொகையினைப் பெறுவரும் தமிழறிஞர் ஏ.கே.வேலன் அவர்களின்

மரபுரிமையர்கள் சென்னை வந்து செல்ல தேவைப்படும் போக்குவரத்து / ஏனை செலவினத்தை மேற்கொள்ள ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை''
(த.தொ.கு.2202 05 800 JE 0933) – (ரூ.2,00,000/–)

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 05. அலுவலகச் செலவுகள் – 02. ஏனைய சில்லறைச் செலவுகள்"
(த.தொ.கு.2202 05 800 JE 0522) – (ரூ.5,000/–)

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2010–2011–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தைப் பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், பத்தி 3–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2010–2011–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (த.வ. அநி (ம) செ) துறைக்கு அனுப்பும்படி தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன்கீழ், முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

7. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.58061/நிதி (துவ.அநி (ம) செ.)/ 2010, நாள் 12.10.2010-ல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1116 (ஆயிரத்து நூற்று பதினாறு)–உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா. சிவகுமார்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
✓தமிழறிஞர் ஏ.கே.வேலன் அவர்களின் மரபுரிமையர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
நகல்
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (து.வ.அநி (ம) செ./ வ.செ.பொ II)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 15/10/10.
வ.சு
15-10-10

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – தமிழறிஞர் பேராசிரியர் கு.சீனிவாசன் அவர்களின் நூல்களை நாட்டுடமையாக்கி அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ 1–1) துறை

அரசாணை (நிலை) எண்.463

நாள்: 9.12.2010
திருவள்ளுவராண்டு 2041
கார்த்திகை 23

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.10513/தமிழ்1/ 2010, நாள் 13.10.2010

========

ஆணை

தமிழ் வளர்ச்சி இயக்குநர், மேலே படிக்கப்பட்ட அவரது கடிதத்தில், மறைந்த தமிழறிஞர் பேராசிரியர் கு.சீனிவாசன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குமாறு அவரது மனைவி திருமதி.சீ.மோகனாம்மாள் வேண்டியுள்ளார் என்றும், தமிழறிஞர் பேராசிரியர் கு.சீனிவாசன் அவர்களுக்கு அரசு நிதியுதவி வழங்கக் கருதும் நேர்வில் தமிழ் வளர்ச்சித் துறையில் செயற்படுத்தப்பட்டுவரும் திட்டமான தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் கருதிப் பார்க்கலாம் என்றும், தமிழறிஞர் பேராசிரியர் கு.சீனிவாசன் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டத்தில் உள்ள தென்னலக்குடி எனும் ஊரில் 1920–இல் பிறந்தவர் என்றும், இவர் 1946–ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியப் பணியைத் தொடங்கி 33 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றி பேராசிரியராக உயர்ந்தவர் என்றும், தாவரவியலில் புகழ்மிக்கப் பேராசிரியராக விளங்கியதுடன், இயற்கைத் தாவரங்கள் ஆராய்ச்சியில் உலகம் போற்றும் பேராசிரியராகத் திகழ்ந்தவர் என்றும், இவர் தாவரம் வாழ்வும், வரலாறும், சங்க இலக்கியத் தாவரங்கள் போன்ற நூல்களை எழுதியுள்ளார் என்றும், 2.11.1990–இல் இயற்கை எய்தினார் என்றும் தெரிவித்துள்ளார்.

2. தமிழ் வளர்ச்சி இயக்குநர், இவ்வகையில் தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் வளம் சேர்த்த தமிழறிஞர் பேராசிரியர் கு.சீனிவாசன் அவர்களின் நூல்கள் அனைத்தையும், தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கிப் பரிவுத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், நாட்டுடைமையாக்கி, அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத்தொகை வழங்கும் வகையில் ஆணை வெளியிடலாமெனவும், வழங்கப்படவுள்ள பரிவுத் தொகையை அரசு நிலையில் முடிவு செய்யலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, தமிழறிஞர் பேராசிரியர் கு.சீனிவாசன் அவர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்க ஒப்புதல் அளித்த மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகையாக ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும், இப்பரிவுத் தொகையினைப் பெறவரும் தமிழறிஞர் பேராசிரியர் கு.சீனிவாசன் அவர்களின் மரபுரிமையர்கள் சென்னை வந்து செல்ல தேவைப்படும் போக்குவரத்து / ஏனைய செலவினத்தை மேற்கொள்ள ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்ப செய்யப்பட்ட தொகையினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை''
(து.தொ.கு.2202 05 800 JE 0933) – ரூ.5,00,000/–

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 05. அலுவலகச் செலவுகள் – 02. ஏனைய சில்லறைச் செலவுகள்"
(து.தொ.கு.2202 05 800 JE 0522) - ரூ.5,000/–

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2010–2011–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தைப் பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், பத்தி 3–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2010–2011–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (து.வ. அநி (ம) செ) துறைக்கு அனுப்பும்படி தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன்கீழ், முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

7. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.16/இசெ (ப்பி.ஆர்.)/ப்பி/2010, நாள் 9.12.2010–இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரடு எண்.1507 (ஆயிரத்து ஐந்நூற்று ஏழு)உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா. சிவகுமார்,
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
தமிழறிஞர் பேராசிரியர் கு.சீனிவாசன் அவர்களின் மரபுரிமையர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.

மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை—18/35.

நகல்

மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை—9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—9.
நிதி (த.வ.அநி (ம) செ./ வ.செ.பொ I / வ.செ.பொ II)துறை, சென்னை—9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

9/12/10

பிரிவு அலுவலர்.

வ.சு
9.12.10

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – தமிழறிஞர் கவிஞர் கு.சா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நூல்களை நாட்டுடமையாக்கி அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (தவ.1–1) துறை

அரசாணை (நிலை) எண்.49

நாள் : 1.2.2011
திருவள்ளுவராண்டு 2042
தை 18

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.தமிழ் 1/12130/2010, நாள் 14.12.2010

=========

ஆணை

மேலே படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதத்தில், மறைந்த தமிழறிஞர் கவிஞர் கு.சா.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குமாறு அவரது மகன் திரு.கி.அம்பிகாபதி வேண்டியுள்ளார் என்றும், தமிழறிஞர் கவிஞர் கு.சா.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு அரசு நிதியுதவி வழங்கக் கருதும் நேர்வில், தமிழ் வளர்ச்சித் துறையில் செயற்படுத்தப்பட்டுவரும் திட்டமான தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், கருதிப் பார்க்கலாம் என்றும், தமிழறிஞர் கவிஞர் கு.சா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் 19.5.1914–இல் பிறந்து, 13.5.1990–இல் இயற்கை எய்தினார் என்றும், இவர் இளம் வயதிலேயே பள்ளிப் படிப்பை துறந்து, இசை மற்றும் நாடகத் துறையில் ஆர்வம் கொண்டு, அவரது ஒன்பதாம் வயதில் நாடக உலகில் திரு.எம்.கே.இராதா, அவரது தந்தை திரு.எம்.கந்தசாமி முதலியார், எஸ்.ஆர்.ஜானகி போன்ற பல்வேறு நாடகக் குழுவில் நடிகனாக சேர்ந்து நடித்தவர் என்றும், நாடகப் பணிக்காக இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளுக்கும் சென்று திரும்பியவர் என்றும், தொடர்ந்து நாடக ஆசிரியராகவும், இசைப் பாடலாசிரியராகவும், கவிஞராகவும் பரிணமித்தவர் என்றும், 'தமிழகம்' என்ற பெயரில் சொந்தமாக நூல் வெளியீட்டு நிலையம் நடத்தியவர் என்றும், இவர் எழுதிய 'அந்தமான் கைதி' நாடகம், பின்னாளில் திரைப்படமாகவும் வெளிவந்து பெரும் பாராட்டைப் பெற்றது என்றும், 'இரத்தக் கண்ணீர்' திரைப்படத்தில் இவர் எழுதிய 'குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதி கொள்வதென்பதேது' எனும் பாடல் இன்றைய தலைமுறையினருக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேலும், அவர் பல நூல்களை எழுதியுள்ளார் என்றும், இவை தவிர சென்னை மாநகர நூலக ஆலோசனைக் குழு உறுப்பினர், தமிழ் எழுத்தாளர் சங்க செயற்குழு உறுப்பினர், தமிழ்ப் பல்கலைக்கழக நாடகத் துறை ஆய்வுக் குழு உறுப்பினர் போன்ற பல்வேறு அமைப்புகளிலும் பொறுப்புகளை வகித்த பெருமைக்குரியவர் என்றும், இத்தகு பெருமைக்குரிய தமிழறிஞர் கவிஞர் கு.சா.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர்தம் மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை வழங்கப் பெறலாம் என்றும், வழங்கப் பெறும் பரிவுத் தொகையினை அரசு நிலையில் முடிவு செய்யப்படலாம் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, தமிழறிஞர் கவிஞர் கு.சா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்க ஒப்புதல் அளித்து மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகையாக ரூ.8,00,000/– (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும், இப்பரிவுத் தொகையினைப் பெறவரும் தமிழறிஞர் கவிஞர் கு.சா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மரபுரிமையர்கள் சென்னை வந்து செல்ல தேவைப்படும் போக்குவரத்து / ஏனைய செலவினத்தை மேற்கொள்ள ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை''
(து.தொ.கு.2202 05 800 JE 0933) – ரூ.8,00,000/–

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 05. அலுவலகச் செலவுகள் – 02. ஏனைய சில்லறைச் செலவுகள்"
(து.தொ.கு.2202 05 800 JE 0522) - ரூ.5,000/–

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2010–2011–ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தைப் பெற்று வழங்கிட இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8, அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், பத்தி 3–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2010–2011–ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (த.வ. அநி (ம) செ) துறைக்கு அனுப்பும்படி இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன் கீழ், முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

7. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.18/நிதி (தவஅநி(ம)செ)/2011, நாள்.1.2.2011 –இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1942 (ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து இரண்டு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.சிவகுமார்
அரசுச் செயலாளர்

<u>பெறுநர்</u>
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
தமிழறிஞர் கவிஞர் கு.சா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மரபுரிமையர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
<u>நகல்</u>
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (த.வ.அநி (ம) செ./ வ.செ.பொ I/ வ.செ.பொ II)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

[signature] 1/2/11
பிரிவு அலுவலர்
வ.சு
1.2.11

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – தமிழறிஞர் பேராசிரியர் கா.ம.வேங்கடராமையா அவர்களின் நூல்களை நாட்டுடமையாக்கி அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (தவ.1–1) துறை

அரசாணை (நிலை) எண்.48

நாள் : 1.2.2011
திருவள்ளுவராண்டு 2042
தை 18
படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.தமிழ் 1/12590/2010, நாள் 19.11.2010.

========

ஆணை

மேலே படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதத்தில், மறைந்த தமிழறிஞர் பேராசிரியர் கா.ம.வேங்கடராமையா அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குமாறு அவரின் மகன்களான பேராசிரியர் ம.வே.பசுபதி, புலவர் வே.மகாதேவன் மற்றும் திரு.ம.வே.சுவாமிநாதன் ஆகியோர் வேண்டியுள்ளார்கள் என்றும், தமிழறிஞர் பேராசிரியர் கா.ம.வேங்கடராமையா அவர்களுக்கு அரசு நிதியுதவி வழங்கக் கருதும் நேர்வில் தமிழ் வளர்ச்சித் துறையில் செயற்படுத்தப்பட்டுவரும் திட்டமான தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் கருதிப் பார்க்கலாம் என்றும், தமிழறிஞர் பேராசிரியர் கா.ம.வேங்கடராமையா அவர்கள் செங்கல்பட்டு மாவட்டம், சென்னைக்கு அருகிலுள்ள போரூருக்கு பக்கத்தில் காரம்பாக்கம் என்ற சிற்றூரில் 4.4.1911–இல் தோன்றி, 31.1.1994–இல் மறைந்தார் என்றும், இவர் உயர்நிலைப் பள்ளி தமிழாசிரியராகவும், திருப்பனந்தாள் சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியில் முதல்வராகவும், 'தமிழ், சமஸ்கிருதம் மற்றும் பிற மொழிகள் ஆராய்ச்சி' நிலையத்தில் ஆய்வாளராகவும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திருக்குறள் இருக்கையில் ஆய்வாளராகவும், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அரிய கையெழுத்து சுவடிப் புலத் தலைவர் மற்றும் பேராசிரியராகவும், திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியல் ஆய்வு நிறுவனத்தில் ஆய்வாளராகவும் பணியாற்றி தமிழ் மொழிக்கு அருந்தொண்டாற்றியவர் என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், மறைந்த தமிழறிஞர் பேராசிரியர் கா.ம.வேங்கடராமையா அவர்கள் கல்வெட்டாராய்ச்சிப் புலவர், செந்தமிழ் கலாநிதி, தமிழ் மாமணி, சைவத் தமிழ் ஞாயிறு, சிவநெறிச் செல்வர் உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர் என்றும், இவர் 1. இலக்கிய கேணி, 2. சோழர் கால அரசியல் தலைவர்கள், 3. கல்லெழுத்துக்களில், 4. கல்வெட்டில் தேவார மூவர், 5. Story of Saiva Saints உள்ளிட்ட 19 நூல்களை படைத்து தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்துள்ளார் என்றும், இத்தகு பெருமைக்குரிய இவரது நூல்களை நாட்டுடைமையாக்கி அவர்தம் மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை வழங்கப் பெறலாம் என்றும், வழங்கப் பெறும் பரிவுத் தொகையினை அரசு நிலையில் முடிவு செய்யப்படலாம் எனவும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, தமிழறிஞர் பேராசிரியர் கா.ம.வேங்கடராமையா அவர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்க ஒப்புதல் அளித்து மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகையாக ரூ.15,00,000/– (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும், இப்பரிவுத் தொகையினைப் பெறவரும் தமிழறிஞர் பேராசிரியர் கா.ம.வேங்கடராமையா அவர்களின் மரபுரிமையர்கள் சென்னை வந்து செல்ல தேவைப்படும் போக்குவரத்து / ஏனைய செலவினத்தை மேற்கொள்ள ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை''
(கு.தொ.கு.2202 05 800 JE 0933)

– ரூ.15,00,000/–

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை –
05. அலுவலகச் செலவுகள் – 02. ஏனைய சில்லறைச் செலவுகள்"
(கு.தொ.கு.2202 05 800 JE 0522)

- ரூ.5,000/–

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2010–2011–ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2010–11–ம் ஆண்டிற்கான இறுதி

துணை மதிப்பீடுகளில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தைப் பெற்று வழங்கிட இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், பத்தி 3–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2010–2011–ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (த.வ. அநி (ம) செ) துறைக்கு அனுப்பும்படி இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன் கீழ், முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

7. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.17/நிதி(துவஅநி(ம)செ)/2011, நாள்.1.2.2011 –இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1941 (ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து ஒன்று)உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.சிவகுமார்
அரசுச் செயலாளர்

<u>பெறுநர்</u>
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
தமிழறிஞர் பேராசிரியர் கா.ம.வேங்கடராமையா அவர்களின் மரபுரிமையர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
<u>நகல்</u>
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (த.வ.அநி (ம) செ./ வ.செ.பொ I/ வ.செ.பொ II)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

த. மகாலட்சுமி 01.02.2011
(த. மகாலட்சுமி)
அரசு சார்புச் செயலாளர்.

வ.சு
1.2.11

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி — நூல்கள் நாட்டுடைமை – 2010–11–ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பிற்கிணங்க திரு.அருதனக்குட்டி அடிகளார் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டமைக்கு அன்னாரின் மரபுரிமையருக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1–1)த் துறை

அரசாணை (நிலை) எண்.203

நாள்.6.8.2013
திருவள்ளுவராண்டு 2044
விஜய, ஆடி 21

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.156, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ 1.1) துறை, நாள்.7.5.2010.
2. வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தின் தீர்ப்பாணை நாள்.7.8.2012. (வழக்கு எண்.எஸ்.ஓ.பி.41/2011)

படிக்க:

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.8687/தமிழ் 1/2012, நாள்.8.1.2013 மற்றும் 7.6.2013.

ஆணை:

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2010–11–ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, 22 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்க நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதத்தில், மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணைக்கிணங்க, உரிய மரபுரிமையர்களின் சான்றாவணங்களை அளித்த 21 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு 16.7.2010 அன்று பரிவுத் தொகைக்கான காசோலைகள் வழங்கப்பட்டன என்றும், 22 தமிழறிஞர்களில் திரு.அருதனக்குட்டி அடிகளார் அவர்களின் மரபுரிமையர்கள் உரிய சான்றாவணங்களை அப்போது அளிக்காததால் பரிவுத்தொகை ரூ.7.00 இலட்சம் வழங்கப்படவில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் அறிக்கையில் திரு.அருதனக்குட்டி அடிகளார் திருமணமாகாமல் இறந்துவிட்டதால், திரு.கருப்பசாமி என்பவர் தான் திரு.அருதனக்குட்டி அடிகளாரின் வம்சாவழி வாரிசு ஆவார் என்றும், அவர் 27.2.2010–இல் இயற்கையெய்தியதால் அவரது வாரிசுகளான மனைவி திருமதி சந்திரா, மக்கள் சிவகுமார், இந்துமதி, அகிலா (எ) சாந்தி மற்றும் சுந்தர் ஆகியோருக்கு திரு.அருதனக்குட்டி அடிகளாரின்

படைப்புகளை நாட்டுடைமையாக்கி வழங்கப்படும் பரிவுத்தொகையினை வழங்கலாமென மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்துள்ளதாகவும், திரு.அருதனக்குட்டி அடிகளார் அவர்கள் திருமணமாகாததாலும், இயற்கையெய்தி 400 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், அவருக்கு நேரடி மரபுரிமையர்கள் இல்லாத நிலையிலும், பரிவுத்தொகை வழங்குவதில் சட்டச்சிக்கல்கள் ஏற்படும் என்பதால் நீதிமன்றம் மூலமாக மரபுரிமையர்கள் பற்றிய விவரங்களைப் பெற்று அளிக்குமாறு மரபுரிமையர்களிடம் அறிவுறுத்தியதாகவும், அதன்படி திரு.கருப்பசாமி அவர்களின் மனைவி திருமதி சந்திரா, மக்கள் சிவகுமார், இந்துமதி, அகிலா (எ) சாந்தி மற்றும் சுந்தர் ஆகியோர் வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து மேற்படி நபர்கள் அருதனக்குட்டி அடிகளாரின் சட்டபூர்வமான வாரிசு என மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தீர்ப்பாணையில் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, வள்ளியூர் சார்பு நீதிமன்ற தீர்ப்பாணையின்படி வாரிசுகளாக அறிவிக்கப்பட்டுள்ள திரு.அருதனக்குட்டி அடிகளார் அவர்களின் மரபுரிமையர்களுக்குப் பரிவுத்தொகை ரூ.7.00 இலட்சம் வழங்கலாமென தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. மேலும், மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையின் வாயிலாக நிதி ஒப்பளிப்புச் செய்யப்பட்ட ரூ.1,47,00,000/–இல், 21 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கியது போக திரு.அருதனக்குட்டி அடிகளார் அவர்களின் மரபுரிமையர்களுக்கு வழங்கப்படாத தொகை ரூ.7.00 இலட்சத்தை 17.8.2010 அன்று அரசுக் கணக்கில் திருப்பிச் செலுத்தப்பட்டதாகவும், இதேபோல் சில்லறைச் செலவினங்களுக்காகப் பெறப்பட்ட முன்பணத் தொகை ரூ.1,10,000/–இல் திரு.அருதனக்குட்டி அடிகளார் அவர்களின் மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்கப்படாததால் சில்லறைச் செலவினத் தொகை ரூ.5,000/–ஐ 18.10.2010 அன்று அரசுக் கணக்கில் திரும்பச் செலுத்தப்பட்டது என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. மேற்குறிப்பிட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, மறைந்த தமிழறிஞர் திரு.அருதனக்குட்டி அடிகளார் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டமைக்கு அவரின் மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை ரூ.7,00,000/–ஐ (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) கீழ்க்கண்டவாறு வழங்கலாம் எனக் கருதி அவ்வாறே அரசு ஆணையிடுகிறது:–

i) மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, பரிவுத் தொகை வழங்கப்படாத திரு.அருதனக்குட்டி அடிகளார் அவர்களின் வம்சாவழி வாரிசான காலம் சென்ற திரு.கருப்பசாமி என்பவரின் மனைவி திருமதி சந்திரா, மக்கள் சிவகுமார், இந்துமதி, அகிலா (எ) சாந்தி, சுந்தர் ஆகியோர், திரு.அருதனக்குட்டி அடிகளாரின் வம்சாவழி வாரிசு என்று மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தால் அறிவித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி வாரிசுதாரர்களுக்கு பரிவுத் தொகை ரூ.7,00,000/– (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யலாம்;

ii) பரிவுத்தொகை பெற வரும் மரபுரிமையருக்கு போக்குவரத்துக் கட்டணம், சிற்றுண்டி, மதிய உணவு மற்றும் பிற சில்லறைச் செலவினங்கள் மேற்கொள்ள ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யலாம்;

6. மேலே பத்தி 5–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

<u>பரிவுத்தொகை ரூ.7,00,000/–</u>

"2202.பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை''
(த.தொ.கு.2202 05 800 JE 0933)

<u>சில்லரைச் செலவினங்கள் ரூ.5,000/–</u>

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 05. அலுவலகச் செலவுகள் – 02. ஏனைய சில்லறைச் செலவுகள்"
(த.தொ.கு.2202 05 800 JE 0522)

7. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2013–14–ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 5–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட, இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், பத்தி 5–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2013–14–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (தவ (ம) செ) துறைக்கு அனுப்பிவைக்குமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதிவிதித் தொகுதி–I பிரிவுக் கூறு–99இன் கீழ் முன்பணமாகப் பெறவும், பெற்ற முன்பணத்தை நேர்செய்யப்படவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளித்தும் ஆணையிடப்படுகிறது. மேலும், தமிழ் வளர்ச்சி இயக்குநரால் அளிக்கப்படும் முன்பணப் பட்டியை தனி நேர்வாகக் கருதி அனுமதிக்குமாறு சென்னை, சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு) அறிவுறுத்தப்படுகிறார்.

9. திரு.அருதனக்குட்டி அடிகளாரின் வம்சாவழி வாரிசு என்று வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தால் அறிவித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

10. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.41333/தவ(ம)செ/13, நாள்.5.8.2013–இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.913 (தொள்ளாயிரத்து பதிமூன்று) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மூ. இராசாராம்,
அரசுச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
தமிழறிஞர் திரு.அருதனக்குட்டி அடிகளார் அவர்களின் மரபுரிமையர்கள் (தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை–8.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.

<u>நகல்</u>

மாண்புமிகு அமைச்சர்(நிதி) அவர்களின் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு அமைச்சர் (பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்) அவர்களின் அலுவலகம், சென்னை–9
நிதி (த.வ. (ம) செ./ வ.செ.பொ II)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

8/8/14

பிரிவு அலுவலர்.

7.8.13

1/13

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – 2018–19–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – "முனைவர் மு.தமிழ்க் குடிமகன், திரு.மேலாண்மை பொன்னுசாமி மற்றும் முனைவர் பொன். சவுரிராசன் ஆகிய தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கம் செய்யப்படும்'' எனும் அறிவிப்பினை செயல்படுத்துதல் – அதற்கான செலவினத் தொகை ரூ.25,20,000/ –க்கு நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1–1)த் துறை

அரசாணை (நிலை) எண்.237

009038
4744/2018

நாள் 25.10.2018
விளம்பி, ஐப்பசி –8
திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்கப்பட்டவை:–

1. 2018–2019–ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு) அவர்களின் அறிவிப்பு.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.4744/தமிழ்4/2018, நாள் 18.06.2018, 22.06.2018 மற்றும் 06.08.2018.

******

ஆணை:

2018–19–ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சட்டமன்ற பேரவைக் கூட்டத் தொடரில் 13.06.2018 அன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு) அவர்களால் பின்வருமாறு அறிவிப்பு அறிவிக்கப்பட்டது :-

> "முனைவர் மு.தமிழ்க் குடிமகன், திரு.மேலாண்மை பொன்னுசாமி மற்றும் முனைவர் பொன். சவுரிராசன் ஆகிய தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.''

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், தமிழ்ச் சான்றோர்கள் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அந்நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்றும் அவ்வகையில், இதுவரை 146 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூ.10.90 கோடி பரிவுத்தொகை அரசால் ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது எனவும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயற்படுத்தும் முகமாக நூல்கள் நாட்டுடைமை செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மூன்று தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுடன் தொடர்புகொண்டு நூல்களின் எண்ணிக்கை, நூல்களின் படிகள், மரபுரிமையர் சான்றாவணம் மற்றும் பிற விவரங்கள் ஆகியவற்றைப் பெற நடவடிக்கை மேற்கொண்டு, அதன் அடிப்படையில் பின்வரும் விவரங்களை தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்:-

(i) முனைவர் மு.தமிழ்க் குடிமகன்:

முனைவர் மு.தமிழ்க் குடிமகன் அவர்களின் மனைவி திருமதி. வெற்றிச்செல்வி அவர்கள், அவரது கணவர் மாண்புமிகு மேனாள் தமிழ் ஆட்சிமொழி அமைச்சர் மு.தமிழ்க் குடிமகன் அவர்கள் தமிழ் வளர்ச்சிக்காகவும், தமிழ் இன உணர்வுக்காகவும், தமிழ்கூறும் நல்உலகம் போற்றும் வகையிலும் 26 நூல்கள் எழுதியுள்ளதாக தெரிவித்து அவரது படைப்புகள் உலகமெங்கும் அனைவருக்கும் செல்ல வேண்டுமென்பதற்காக அவர் எழுதிய நூல்களை நாட்டுடைமையாக்குமாறு கோரியுள்ளார்.

(ii) திரு.மேலாண்மை பொன்னுசாமி

திரு.மேலாண்மை பொன்னுசாமி அவர்களின் மகன் திரு.பி.வெண்மணிச்செல்வன் அவர்கள், அவரது தந்தையார் இலக்கிய படைப்புகள் மூலம் தமிழ்ச்சேவை புரிந்துள்ளதாகவும், அவரின் படைப்புகளுக்காக இருமுறை தமிழக அரசின் விருதும் மற்றும் மத்திய அரசின் சாகித்திய அகாதமி விருதும் பெற்றுள்ளதாகவும் தெரிவித்து, திரு.மேலாண்மை பொன்னுசாமி அவர்கள் கடந்த வருடம் உடல்நலக் குறைவால் இறந்துவிட்ட நிலையில், அவர் எழுதிய நூல்கள் மக்களுக்கு பயன்படும் வகையில் நாட்டுடைமையாக்குமாறு அவர் குடும்பத்தின் சார்பாக வேண்டியுள்ளார்.

(iii) முனைவர் பொன்.சவுரிராசன்

முனைவர் பொன்.சவுரிராசன் அவர்களின் குடும்பத்தார், திரு.பொன்.சவுரிராசன் அவர்கள் எழுதி வெளியிட்ட நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்க தங்களது இசைவினை தெரிவித்துள்ளனர்.

4. தற்போது நாட்டுடைமையாக்க கருதப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்ட மூன்று தமிழறிஞர்களின் நூல்களுக்கு பரிவுத் தொகை ரூபாய் 25 இலட்சம் வழங்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதால், அவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கவேண்டிய தொகையினை அரசு நிலையில் நூல்களின் தரம், அவை மக்களுக்கு ஏற்படுத்திய தாக்கம் மற்றும் தமிழ் இலக்கிய உலகிற்கு அவை பயன்படும் விதம் ஆகியவற்றின் அடிப்படையில் கருதிப்பார்த்து மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு அமைச்சர் அவர்களால், பின்வருமாறு பரிவுத் தொகை நிர்ணயம் செய்து வழங்கப்பெறலாம் எனத் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்:-

வ. எண்.	தமிழறிஞர் பெயர்	பரிவுத் தொகை
1.	முனைவர் மு.தமிழ்க் குடிமகன்	ரூ.11.00 இலட்சம்
2.	திரு.மேலாண்மை பொன்னுசாமி	ரூ.11.00 இலட்சம்
3.	முனைவர் பொன். சவுரிராசன்	ரூ.3.00 இலட்சம்

5. நாட்டுடைமையாக்கப்படுவதற்கான பரிவுத் தொகை ரூபாய் 25 இலட்சத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நேரில் பெற வருகை தரும் மூன்று தமிழறிஞர்களின் மரபுரிமையர்கள்/குடும்பத்தாருக்கு சிறப்பு செய்யும் பொருட்டு, சென்னை வந்து செல்வதற்கான போக்குவரத்துச் செலவினம், தங்குமிடம், சிற்றுண்டி, மதிய உணவு, தேநீர், குடிநீர், காசோலை உறை உள்ளிட்ட பிற சில்லறைச் செலவினங்களை மேற்கொள்ள ஏதுவாக ரூ.20,000/– உரிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பெறலாம் எனவும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

6. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், மேற்காணும் அறிவிப்பினை செயற்படுத்த ஏதுவாக, தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, மறைந்த தமிழறிஞர்கள் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் மற்றும் திரு. மேலாண்மை பொன்னுசாமி ஆகியோரின் நூல்களை நாட்டுடைமை செய்து தலா ரூ.11.00 இலட்சமும் மற்றும் முனைவர் பொன். சவுரிராசன் அவர்களின் படைப்புக்களை நாட்டுடைமை செய்து ரூ.3.00 இலட்சமும் பரிவுத் தொகையாக மறைந்த தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு அளிக்கும் வகையில் மொத்த பரிவுத் தொகை ரூ.25,00,000/– மற்றும் சில்லறைச் செலவினங்கள் ரூ.20,000/– என் ஆகமொத்தம் ரூ.25,20,000/–க்கு (ரூபாய் இருபத்தைந்து இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) நிதியொப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி 6–இல் அனுமதிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

(i) <u>பரிவுத் தொகை (ரூ.25,00,000/–)</u>

"2202 பொதுக்கல்வி – 05 மொழி வளர்ச்சி – 800 ஏனையச் செலவு – மாநிலச் செலவினங்கள் – AK தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநர் பொறுப்பில் உள்ளவை – 09 உதவித்தொகை – 03. குறிப்பிட்டத் திட்டங்களுக்கான மானியங்கள்"
(த.தொ.கு. 2202 05 800 AK 0930)

(ii) <u>சில்லறைச் செலவினம் (ரூ.20,000/–)</u>

"2202 பொதுக்கல்வி –05 மொழி வளர்ச்சி – 800 ஏனையச் செலவு – மாநிலச் செலவினங்கள் – AK தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநர் பொறுப்பில் உள்ளவை –05 அலுவலகச் செலவுகள் – 02 ஏனைய சில்லறைச் செலவினங்கள்"
(த.தொ.கு. 2202 05 800 AK 0529)

8. மேலே பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2018–2019–ஆம் நிதியாண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினத்திற்கு 2018–2019–ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 6–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட, இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி6–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2018–2019ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்க வரைவு விளக்க குறிப்பினையும், 2018–2019ஆம் நிதியாண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினை தவறாது உரிய நேரத்தில் நிதித் (த.வ.(ம).செ) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி 6–இல் அனுமதிக்கப்பட்டவாறான தொகையினைத் தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பு தொகுதி – I, பிரிவுக்கூறு 99இன் கீழ் முன்பணமாக பெறவும், பெற்ற முன்பணத்தை தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு பகிர்ந்தளிக்கவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதி

அளிக்கப்படுகிறது. உரிய செலவுச்சீட்டுகளின் அடிப்படையில் பெறப்பட்ட முன்பணத்தை நேர்செய்யவும், தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. மேலே பத்தி 6–இல் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஒப்பளிப்பு செய்யப்படும் பரிவுத் தொகையை பெற்று, வருவாய்த் துறையினர் அளிக்கும் மரபுரிமையர் சான்றின் அடிப்படையில், மரபுரிமையர்களுக்கு பகிர்ந்து அளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

11. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.50811/நிதி(தவ(ம)செ)/2018, நாள் 25.10.2018–இல் பெறப்பட்ட இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1709 (ஆயிரத்து எழுநூற்று ஒன்பது) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. வெங்கடேசன்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
தொடர்புடைய தமிழறிஞர்களின் குடும்பத்தினர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர்,சென்னை–9/18

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் அவர்களின்
முதுநிலை தனிச்செயலர், சென்னை–9.
நிதி (த.வ.(ம)செ/வ.செ.பொ.2)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

25/10/18
பிரிவு அலுவலர்
25/10/18

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – 20.07.2019 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–இன்கீழ் அறிவிப்பு – உளுந்தூர் பேட்டை திரு. சண்முகம் உள்ளிட்ட 7 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கம் செய்து அவர்தம் மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(துவ 1.1)த் துறை

அரசாணை (நிலை) எண்.155

நாள் 21.11.2019
விகாரி, கார்த்திகை – 5
திருவள்ளுவராண்டு – 2050

படிக்கப்பட்டவை:

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு, நாள்: 20.07.2019.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கடித எண்.6367/தமிழ் 4/2019, நாள்: 26.08.2019.

******

ஆணை:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 20.07.2019 அன்று சட்டமன்றப் பேரவையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன்கீழ் பின்வருமாறு அறிவிப்பு அறிவிக்கப்பட்டது:-

"வரலாற்றில் இல்லாத அளவிற்கு தமிழறிஞர்களுக்கு புதிய விருதுகளையும், நிதியுதவிகளையும் வழங்கிய இந்த அரசு, இதுவரை 149 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கி அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கியுள்ளது. அவ்வரிசையில் இவ்வாண்டு,

1. உளுந்தூர் பேட்டை திரு. சண்முகம்
2. கவிஞர் நா. காமராசு
3. முனைவர் இரா. இளவரசு
4. தமிழறிஞர் அடிகளாசிரியர்
5. புலவர் இறைக்குருவனார்
6. பண்டித ம. கோபால கிருட்டிணன்
7. பாபநாசம் குறள்பித்தன்

ஆகியோரின் படைப்புகள் நாட்டுக்கு அர்ப்பணிக்கும் வகையில் நாட்டுடைமையாக்கப்படும். இதற்கென 35 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்".

2. மேற்கண்ட அறிவிப்பினைச் செயற்படுத்துவதற்கு ஏதுவாக, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்வளர்ச்சி இயக்குநர், தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள்

நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர்கள் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மரபுரிமையாளர்களுக்கு பரிவுத்தொகை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கம் ஆகும் என்றும், அவ்வகையில் இதுவரை 149 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூபாய் 11.17 கோடி பரிவுத் தொகை அரசால் வழங்கப்பட்டுள்ளது என்றும், அவ்வகையில் மேற்படி தமிழறிஞர்களின் தன் விவரக் குறிப்பு பின்வருமாறு அமையும் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்:-

(i) உளுந்தூர்பேட்டை திரு. சண்முகம்

தமிழறிஞர் திரு. சண்முகம் அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் ஆவார் என்றும், அவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை 33 ஆகும் என்றும், அவர் 3000க்கும் மேற்பட்ட தமிழ் பாடல்கள் இயற்றியுள்ளார் என்றும், அவற்றுள், பக்தி இலக்கியம், தேசப்பற்று, தமிழ் மொழி, சிறார் பாடல்கள், சான்றோர்கள், இயற்கை, காதல், நாட்டிய நாடகங்கள், சினிமா, தமிழ் மொழிப்பெயர்ப்புகள் ஆகியவை அடங்கும் என்றும், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, மொரிசியஸ் ஆகிய நாடுகளில் உள்ள கோயில்களில் அன்னாரின் பக்தி பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன என்றும், அவரின் படைப்புகளை 25 தலைப்புகளில் உள்ளடக்கி 29 புத்தகங்களாக தொகுத்துள்ளதாகவும், அவற்றை நாட்டுடைமையாக்க அன்னாரின் மகன் திரு.ச.சங்கர்ராம் அவர்கள் இசைவினைத் தெரிவித்துள்ளார் என்றும்;

(ii) கவிஞர் நா. காமராசு

கவிஞர் திரு. நா. காமராசு அவர்கள் சமூகம் சார்ந்த கவிதைகள் எழுதியவர் என்றும், நூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு பாடல்கள் எழுதியுள்ளார் என்றும், கறுப்பு மலர்கள் என்ற கவிதை நூலுக்கு 1972–இல் யுனெஸ்கோ விருது பெற்றவர் என்றும், சமூக இலக்கிய அமைப்பின் மூலம் ஐம்பதுக்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றவர் என்றும், கவிஞர் நா. காமராசு அவர்கள் 21 நூல்களை எழுதியுள்ளதாகவும் அவற்றை நாட்டுடைமையாக்க அவரது மனைவி திருமதி கா. லோகமணி தமது இசைவினைத் தெரிவித்துள்ளார் என்றும்;

(iii) முனைவர் இரா. இளவரசு

முனைவர் இரா. இளவரசு அவர்களின் மனைவி திருமதி இரா. வேலம்மாள் இளவரசு அவர்கள் அன்னாரின் கணவர் இலக்கிய, இலக்கணம், இதழியல் படைப்புகள் மூலம் தமிழ் வழிக் கல்வி இயக்கம் வளரப் பாடுபட்டதாகவும், பாரதிதாசன் பல்கலைக்கழக உயராய்வு மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவராக 1999 முதல் 2004 வரை பணியாற்றியதாகவும், தமிழக அரசின் பாவேந்தர் புகழ் பரப்புநர் விருது 1991–இல் பெற்றதாகவும், அவருக்கு 2011–இல் தமிழ்நாடு அரசு பாவேந்தர் பாரதிதாசன் விருது அளித்து சிறப்பிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். அன்னார் பாரதியார் பாடல்களில் பல ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்துள்ளதாகவும், பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களைப் பற்றி ஆய்வு நூல்கள், கவிதை, கட்டுரை நூல்களாகவும் தொகுத்தவர் என்றும், அவரின் பேருழைப்பால் உருவான 12 நூல்களின் ஆய்வுத்தரத்தினையும், சிறப்பினையும் தமிழ்நாட்டினர் மட்டுமின்றிப் பிறநாட்டுத் தமிழர்களும் அறிந்து படித்துப் பயன்பெற வேண்டும் என்பதற்காக அவர் எழுதிய நூல்களை நாட்டுடைமையாக்க முனைவர் இரா. இளவரசு அவர்களின் மனைவி திருமதி இரா.வேலம்மாள் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார் என்றும்;

(iv) அடிகளாசிரியர்

அடிகளாசிரியர் அவர்களின் மகன் திரு. அ. சிவபெருமான் அவர்கள் தனித்தமிழ் இயக்கம் கண்ட தவத்திரு மறைமலை அடிகளார் தொடர்பால் பெற்றோர் வைத்த குருசாமி என்ற தம் பெயரை அடிகளாசிரியர் என்று மாற்றிக் கொண்டவர் என்றும், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின்

சுவடிப்புலத்தில் 4 ஆண்டுகள் சிறப்புநிலை இணைப்பேராசிரியராகப் பணியாற்றியக் காலத்தில்தான் தொல்காப்பியம் முழுமைக்கும் அரிய உரைக் குறிப்பு எழுதித் தொல்காப்பியத்தைப் பதிப்பித்தார் என்றும் அடிகளாசிரியர் அவர்கள் 68 நூல்களை எழுதியுள்ளதாகவும், அவரது நூல்களை நாட்டுடைமையாக்க அவரது மகன் தமது இசைவினை தெரிவித்துள்ளார் என்றும்;

(v) புலவர் இறைக்குருவனார்

புலவர் இறைக்குருவனார் அவர்கள் பள்ளிப்பருவத்திலேயே தவத்திரு மறைமலையடிகளாரின் திருவாசக விரிவுரையால் ஈர்க்கப்பெற்றவர் என்றும், அவர் அடியொற்றி தூயதமிழிலும் சிவநெறியிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் என்றும் அதனால், பெற்றோரிட்ட 'சாமிநாதன்' என்னும் வடமொழிப்பெயரைத் தமிழ்ப்படுத்தி 'இறைக்குருவன்' என்று மாற்றிக்கொண்டதாகவும், புலவர் இறைக்குருவனார் அவர்களின் மனைவி திருமதி. இறை பொற்கொடி அவர்கள் காலஞ்சென்ற தனது வாழ்க்கைத் துணைவர் தன்னலங்கருதாது தமிழ்மொழி, இன நாட்டு நலன் நோக்கித் தம் வாழ்நாள் இறுதிவரை தொடர்ந்து இயங்கி வந்தார் என்றும் அவர் பயனுறு நூல்கள், பாக்கள், கட்டுரைகள், அகரமுதலி, உரை நூல்கள் என பலவும் எழுதியுள்ளதாகவும், அவர்தம் எழுத்தாக்கங்களை வரும் தலைமுறையினர் பயன் கொள்ளுமாறும் தமிழ்கூறும் நல்லுலகம் போற்றும் வகையில் அவரது 10 நூல்களை நாட்டுடைமையாக்கத் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார் என்றும்;

(vi) பண்டித ம. கோபாலகிருட்டிணன்

பண்டித ம. கோபாலகிருட்டிணன் அவர்கள் மகாகவி பாரதியின் நண்பர் ஆவார் என்றும், சுவாமி விவேகானந்தரின் 13 பாடல்களை மொழிபெயர்த்தவர் என்றும், வங்காளக்கவி ரவீந்திரநாத் தாகூர் மதுரை வந்தபோது வாழ்த்துக் கவிதை இயற்றி அவரை வரவேற்றவர் என்றும், பெண்களின் முன்னேற்றத்துக்குப் பாடுபட்ட பெருந்தகையாளர், நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் நிறைந்த நெஞ்சர் என்றும், தமிழிலும் ஆங்கிலத்திலும் சரிசமமாகப் புலமை வாய்ந்து விளங்கிய ஜி.யு.போப் மற்றும் மகாகவி பாரதியார் போன்ற பேரறிஞர்கள் இவரின் மொழிபெயர்ப்புக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்கள் என்றும், பண்டித ம. கோபாலகிருட்டிணன் அவர்கள் தனிப்பாடல்கள், மொழிப்பெயர்ப்பு கவிதைகள், கட்டுரைகள், புதல்வர் கடமை, விஸ்வநாதன் – கவிதை நாடகம், மௌன தேசிகர் – ஹாஸ்ய நாடகம் ஆகியவற்றை எழுதியுள்ளார் என்றும், அவற்றை தொகுத்த அவரது பெயர்த்தி திருமதி. உஷா மகாதேவன் அவர்கள் பண்டித ம.கோபாலகிருட்டிணன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கத் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார் என்றும்;

(vii) பாபநாசம் குறள்பித்தன்

பாபநாசம் குறள்பித்தன் அவர்கள் சிறுவர் நூல்கள், பல்சுவை நூல்கள், ஆன்மீக நூல்கள், கவிதை நூல்கள் என 91 நூல்களை எழுதியுள்ளார் என்றும் அன்னாரின் நூல்களை நாட்டுடைமையாக்க அவரது மனைவி திருமதி நீலாக்கண்ணன் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலும் நாட்டுடைமையாக்கப்படும் ஏழு தமிழறிஞர்களின் நூல்களுக்கு பரிவுத்தொகை ரூ.5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.35 இலட்சம் தொடராச் செலவினமாக வழங்கப் பெறலாம் என்றும், 2019–2020–ஆம் ஆண்டு அத்தொகையினை திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்திய நிதியொதுக்கத்தில் பெறத்தக்க வகையில் ஒப்பளிப்புச் செய்யப்பெறலாம் என்றும் நாட்டுடைமையாக்கப்பட்டமைக்குரிய பரிவுத் தொகையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நேரில் பெறவரும் தமிழறிஞர் ஏழு பேரின் மரபுரிமையர்கள்/ குடும்பத்தாருக்கு சிறப்பு செய்யும்பொருட்டு காசோலை உறை, சென்னை வந்து செல்வதற்கான போக்குவரத்துச்செலவு, தங்குமிடம், சிற்றுண்டி, மதிய உணவு, தேநீர், குடிநீர் ஆகியவற்றை வழங்கவும் மற்றும் பிற

சில்லறைச் செலவினங்களை மேற்கொள்ளவும் ரூ.50,000/–ம் உரிய கணக்குத்தலைப்பின் கீழ் 2019–2020–ஆம் நிதியாண்டின் திருத்திய / இறுதித் திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பெறும் வகையில் ஒப்பளிப்பு செய்யப்பெறலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

4. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேற்காணும் அறிவிப்பினைச் செயற்படுத்தும் பொருட்டு, தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கருத்துருவினை ஏற்று கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:–

(i) உளுந்தூர் பேட்டை திரு. சண்முகம், கவிஞர் திரு. நா. காமராசு, முனைவர் இரா. இளவரசு, தமிழறிஞர் அடிகளாசிரியர், புலவர் இறைக்குருவனார், பண்டித ம. கோபால கிருட்டிணன், பாபநாசம் குறள்பித்தன் ஆகிய 7 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கம் செய்து 7 தமிழறிஞர்களுக்கு தலா ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வீதம் மொத்தம் ரூ.35,00,000/–க்கு (ரூபாய் முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(ii) மேற்படி தமிழறிஞர் ஏழு பேரின் மரபுரிமையர்கள்/ குடும்பத்தாருக்கு சிறப்பு செய்யும்பொருட்டு காசோலை உறை, சென்னை வந்து செல்வதற்கான போக்குவரத்துச்செலவு, தங்குமிடம், சிற்றுண்டி, மதிய உணவு, தேநீர், குடிநீர் ஆகியவற்றை வழங்கவும் மற்றும் பிற சில்லறைச் செலவினங்களை மேற்கொள்ளவும் ரூ.50,000/–க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(iii) வருவாய் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்படும் செலவினத்தை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

<u>பரிவுத் தொகை:–</u>

2202 – பொதுக்கல்வி – 05 மொழி வளர்ச்சி – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – AK – தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 309 உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்".

IFHRMS (த.தொ.கு. 2202 05 800 AK 30903)
OLD (த.தொ.கு. 2202 05 800 AK 0930)

<u>சில்லறைச் செலவினம்:-</u>

2202 – பொதுக்கல்வி – 05 மொழி வளர்ச்சி – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – AK – தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 305 அலுவலக செலவுகள்– 02. ஏனைய சில்லறை செலவினங்கள்".

IFHRMS (த.தொ.கு.2202 05 800 AK 30502)
OLD (த.தொ.கு.2202 05 800 AK 0529)

6. மேலே பத்தி 4–இல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2019–2020–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு

2019–2020–ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4–இல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 4–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்தை 2019–2020–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் / துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவை தவறாது உரிய நேரத்தில் நிதி (த,வ.ம.செ)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சி துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பெறும் தொகையை தமிழ்நாடு நிதிவிதித் தொகுதி–I, பிரிவுக் கூறு–99இன் கீழ் முன்பணமாகப் பெறவும், பெற்ற முன்பணத்தை நேர்செய்யப்படவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளித்தும் ஆணையிடப்படுகிறது. மேலும், தமிழ் வளர்ச்சி இயக்குநரால் அளிக்கப்படும் முன்பணப் பட்டியை தனி நேர்வாகக் கருதி அனுமதிக்குமாறு சென்னை சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு) அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.57125/நிதி(தவ(ம)செ)/2019, நாள் 21.11.2019–இல் பெறப்பட்ட இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.2242 (இரண்டாயிரத்து இருநூற்று நற்பத்து இரண்டு) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
உளுந்தூர் பேட்டை திரு. சண்முகம், கவிஞர் நா. காமராசு, முனைவர் இரா. இளவரசு, தமிழறிஞர் அடிகளாசிரியர், புலவர் இறைக்குருவனார், பண்டித ம. கோபால கிருட்டிணன், பாபநாசம் குறள்பித்தன் ஆகியோர்களின் குடும்பத்தினர் (உரிய வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை–8.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர், சென்னை–9.
நிதித்(தவ(ம)செ/வ.செ.பொ.I/II) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

22/11/2019
பிரிவு அலுவலர்

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - பேராசிரியர் க.அன்பழகன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கம் செய்து நூலுரிமைத் தொகையாக ரூ.25,00,000/- நிதி ஒப்பளிப்பு வழங்குதல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.1)த் துறை

அரசாணை (நிலை) எண்.180

நாள் 16.12.2021
பிலவ, மார்கழி -1
திருவள்ளுவராண்டு 2052

படிக்கப்பட்டவை:

1. திரு. அ.அன்புச்செல்வன் அவர்களின் கடிதம், நாள் 07.12.2021.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்11269/தமிழ் 4/ 2021, நாள் 09.12.2021.

******

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் திரு. அ.அன்புச்செல்வன் என்பவர் தமிழ்நாடு அரசின் மேனாள் நிதித்துறை அமைச்சரும் தனது தந்தையுமான பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் எழுதிய 41 நூல்களை நாட்டுடைமையாக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2) மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரது கடிதத்தில், தமிழ் வளர்ச்சித் துறையால் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர்கள் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மரபுரிமையாளர்களுக்கு பரிவுத்தொகை வழங்கப்பட்டு வருகிறதென்றும், அவ்வகையில் இதுவரை 162 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூபாய் 12.32 கோடி நூலுரிமைத் தொகை அரசால் ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதென்றும், அவ்வகையில் மறைந்த தமிழறிஞர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கம் செய்யக்கோரி அவரின் மகன் திரு. அ.அன்புச்செல்வன் அவர்கள் கடிதம் அளித்துள்ளதாகவும், அவ்வகையில் தமிழறிஞர், பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், 41க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளதாகவும்,

இவரது கருத்துக் கருவூலங்கள் உலக மக்களை எளிதில் சென்றடையும் வகையில் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கம் செய்யப்பெறலாம் என்றும், பேராசிரியர் க.அன்பழகன் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கம் செய்யப் பெறுவதற்கு அரசால் வழங்கப்பெறும் நூலுரிமைத் தொகையை அரசு நிலையில் கருதிப்பார்த்து முடிவுசெய்யப் பெறலாமெனவும், இதற்கென 2021-2022 வரவு செலவு மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்பெறவில்லை என்பதால், பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்க அரசால் வழங்கக் கருதும் தொகையினை 2021-2022 திருத்திய / இறுதித் திருத்திய மதிப்பீட்டில் பெறத்தக்கவகையில் ஒப்பளிப்புச் செய்யுமாறும் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3) அரசின் கவனமான பரிசீலனைக்கு பின்னர், தமிழறிஞர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களின் அனைத்து நூல்களையும் நாட்டுடைமையாக்கம் செய்து நூலுரிமைத் தொகையாக ரூ.25,00,000/-(ரூபாய் இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4) மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 பொதுக் கல்வி - 05 மொழி வளர்ச்சி - 800 ஏனைய செலவு - மாநிலச் செலவினங்கள் - AK தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை - தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 309 உதவித் தொகை - 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"
IFHRMS (த.தொ.கு. 2202 05 800AK 30903)

5) மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பெற்ற தொகையினை தமிழ்நாடு நிதிவிதித்தொகுப்பு-I பிரிவுக்கூறு 99-இன்கீழ் முன்பணமாகப் பெறவும், பெற்ற முன்பணத்தை நேர்செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

6) மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.25,00,000/- 2021-2022-ஆம் நிதியாண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினத்திற்கு 2021-2022-ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர் தமிழ் வளர்ச்சி துறை, அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய

கருத்துருவை 2021-2022-ஆம் நிதியாண்டுக்கான துணை மதிப்பீடுகள், திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (தவ(ம) செ (ம) வ.செ.பொ1)த் துறைக்கு அனுப்பிவைக்குமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சி துறை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7) இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.57802/ நிதி(தவ(ம)செ)/2021, நாள் 16.12.2021-இல் பெறப்பட்ட இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1196 (ஆயிரத்து நூற்று தொண்ணூற்று ஆறு) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,

அரசு செயலாளர்.

பெறுநர்

இயக்குநர் (மு.கூ.பொ), தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை - 8.

சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை - 8.

மாநில கணக்காய்வுத் தலைவர்,சென்னை 9/18.

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 9,

மாண்புமிகு அமைச்சர் (நிதி (ம) மனித வள மேலாண்மை), அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9..

மாண்புமிகு அமைச்சர் (தொழில் துறை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் அவர்களின்
முதன்மை தனிச்செயலர், சென்னை - 9.

இயக்குநர் / துணைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
செய்தி மக்கள் தொடர்பு, சென்னை - 9.

நிதி (த.வ.(ம)செ/வ.செ.பொ 1/வ.வI/II)த் துறை, சென்னை - 9.

இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

16/12/21

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - 2021-2022-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு - சிலம்பொலி சு. செல்லப்பன், முனைவர் தொ. பரமசிவன், புலவர் இளங்குமரனார், திரு. முருகேச பாகவதர், திரு.சங்கரவள்ளி நாயகம், மற்றும் புலவர் செ.இராசு ஆகிய 6 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கம் செய்து பரிவுத் தொகை வழங்க ரூ.80,00,000/-மும் வாகனச் செலவு மற்றும் இதர சில்லரைச் செலவினம் ரூ.60,000/- நிதி ஒப்பளிப்பு செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.1)த் துறை

அரசாணை (நிலை) எண்.167

நாள் 29.11.2021
பிலவ, கார்த்திகை-13
திருவள்ளுவராண்டு 2052

படிக்கப்பட்டது:

தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.7283/தமிழ்4/2021, நாள் 14.09.2021 மற்றும் 02.11.2021.

******

ஆணை:

2021-2022-ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கை 46-இன் போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்பு அறிவிக்கப்பட்டது :-

"தமிழ் அறிஞர்களான சிலம்பொலி சு. செல்லப்பன், முனைவர் தொ. பரமசிவன், புலவர் இளங்குமரனார், திரு. முருகேச பாகவதர், திரு. சங்கரவள்ளி நாயகம் மற்றும் புலவர் செ.இராசு ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, பரிவுத் தொகை வழங்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்."

2) தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் தமிழறிஞர்களின் கருத்துக் கருவூலங்கள் பொதுமக்கள் அனைவரையும் எளிய முறையில் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு வருகின்றன என்றும்,

தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர்கள் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மரபுரிமையாளர்களுக்கு பரிவுத்தொகை வழங்கப்பட்டு வருவதாகவும், சிலம்பொலி சு. செல்லப்பன், முனைவர் தொ. பரமசிவன், புலவர் இளங்குமரனார், திரு. முருகேச பாகவதர், திரு. சங்கரவள்ளி நாயகம் மற்றும் புலவர் செ. இராசு ஆகிய 6 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கம் செய்து அவர்களது நூல்களுக்கு பரிவுத் தொகை (நூலுரிமைத் தொகை) நிருணயம் செய்ய தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களால் 5 நபர்கள் கொண்ட வல்லுநர் குழு அமைக்கப் பெற்று இவ்வல்லுநர் குழுவின் மூலம் மேற்படி 6 தமிழறிஞர்களின் நூல்கள் ஆய்வு செய்யப்பட்டு கீழ்கண்டவாறு பரிவுத் தொகை வழங்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

வ.எண்	பெயர்	தொகை (ரூ.)
1.	சிலம்பொலி சு. செல்லப்பன்	ரூ.15.00 இலட்சம்
2.	முனைவர் தொ. பரமசிவன்	ரூ.15.00 இலட்சம்
3.	புலவர் இளங்குமரனார்	ரூ.15.00 இலட்சம்
4.	திரு. முருகேச பாகவதர்	ரூ.10.00 இலட்சம்
5.	திரு. சங்கரவள்ளி நாயகம்	ரூ.10.00 இலட்சம்
6.	புலவர் செ. இராசு (புலவர் செ. இராசு மற்றும் எடப்பாடி அமுதன் ஆகிய இரு ஆசிரியர்கள் சேர்ந்து எழுதிய கி.பி. 1800இல் கொங்கு நாடு என்ற நூலைத் தவிர)	ரூ.15.00 இலட்சம்
	மொத்தத் தொகை	ரூ.80.00 இலட்சம்

3) மேலும், தமிழறிஞர்கள் 6 பேரின் குடும்ப மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குவதற்கு ஏதுவாக 2021 - 2022 திருத்திய / இறுதித் திருத்திய மதிப்பீட்டில் பெறத்தக்க வகையில் தொடராச் செலவினமாக ரூபாய் 80,00,000/- (ரூபாய் எண்பது இலட்சம் மட்டும்) ஒப்பளிப்புச் செய்யப் பெறலாம் என்றும், தமிழறிஞர் ஆறு பேரின் மரபுரிமையர்கள் / குடும்பத்தாருக்கு சென்னை வந்து செல்வதற்கான போக்குவரத்துச்செலவு, தங்குமிடம், சிற்றுண்டி, மதிய உணவு, தேநீர், குடிநீர் ஆகியவற்றை வழங்கவும் மற்றும் ஒப்பாவணம், காசோலை உறை தயாரித்தல் தலைமைச் செயலகத்திற்கு அழைத்துவர வாகன வசதி உள்ளிட்ட பிற சில்லரைச் செலவினங்களை மேற்கொள்ள ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வீதம் 6 பேருக்கு ரூ.90,000/- (ரூபாய் தொண்ணூறாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப் பெறலாம் என்றும், பரிவுத்தொகை மற்றும் சில்லரைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதிவிதித்

தொகுப்பு தொகுதி – I, பிரிவுக்கூறு 99இன் கீழ் முன்பணமாக பெறவும், பெற்ற முன்பணத்தை நேர்செய்யவும், தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு பகிர்ந்தளிக்கவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணையிடப்படலாம் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4) அரசின் கவனமான பரிசீலனைக்கு பின் 6 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கம் செய்து பரிவுத்தொகை (நூலுரிமைத் தொகை) வழங்கலாம் என முடிவு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-

(i) சிலம்பொலி சு. செல்லப்பன், முனைவர் தொ. பரமசிவன், புலவர் இளங்குமரனார், திரு. முருகேச பாகவதர், திரு.சங்கரவள்ளி நாயகம் மற்றும் புலவர் செ.இராசு ஆகிய 6 தமிழறிஞர்களின் நூல்கள் (புலவர் செ. இராசு மற்றும் எடப்பாடி அமுதன் ஆகிய இரு ஆசிரியர்கள் சேர்ந்து எழுதிய கி.பி. 1800இல் கொங்கு நாடு என்ற நூலைத் தவிர) நாட்டுடைமையாக்கம் செய்யப்படுகிறது.

(ii) திரு. சிலம்பொலி சு. செல்லப்பன், முனைவர் தொ. பரமசிவன், புலவர் இளங்குமரனார், மற்றும் புலவர் செ.இராசு ஆகிய 4 தமிழறிஞர்களின் நூல்களுக்கு பரிவுத்தொகையாக தலா ரூ.15,00,000/- திரு.முருகேச பாகவதர் மற்றும் திரு. சங்கரவள்ளி நாயகம் ஆகிய 2 தமிழறிஞர்களின் நூல்களுக்கு பரிவுத்தொகையாக தலா ரூ.10,00,000/- ஆக மொத்தம் ரூ.80,00,000/- (ரூபாய் எண்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(iii) மேற்படி ஆறு தமிழறிஞர்களின் மரபுரிமையர்கள்/ குடும்பத்தாருக்கு சிறப்பு செய்யும் பொருட்டு, ஆறு பேரின் மரபுரிமையர்கள் / குடும்பத்தாருக்கு சென்னை வந்து செல்வதற்கான போக்குவரத்துச்செலவு, தங்குமிடம், சிற்றுண்டி, மதிய உணவு, தேநீர், குடிநீர் ஆகியவற்றை வழங்கவும் மற்றும் ஒப்பாவணம், காசோலை உறை தயாரித்தல் தலைமைச் செயலகத்திற்கு அழைத்துவர வாகன வசதி உள்ளிட்ட பிற சில்லரைச் செலவினங்களை மேற்கொள்ள ரூ. 10,000/- வீதம் 6 பேருக்கு ரூ.60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(iv) வருவாய் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

(v) ஒப்பளிப்பு செய்யப்படும் பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பு தொகுதி – I, பிரிவுக்கூறு 99-இன் கீழ் முன்பணமாக பெறவும், பெற்ற முன்பணத்தை நேர்செய்யவும், தமிழறிஞர்களின்

மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகையை பகிர்ந்தளிக்கவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

5) மேலே பத்தி 4(ii)-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 பொதுக்கல்வி - 05 மொழி வளர்ச்சி – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – AK தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 309 உதவித் தொகை – 03. குறிப்பிட்டத் திட்டங்களுக்கான உதவித்தொகை"

IFHRMS (த.தொ.கு. 2202 05 800AK 30903)

6) மேலே பத்தி 4(iii)-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 பொதுகல்வி - 05 மொழி வளர்ச்சி - 800 ஏனைய செலவு - மாநிலச் செலவினங்கள் - AK தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 305 அலுவலகச் செலவுகள் – 02. ஏனைய சில்லரைச் செலவுகள்"

(த.தொ.கு. 2202 05 800AK 30502)

7) மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.80,60,000/-ம் 2021-2022-ஆம் நிதியாண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீட்டு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2021-2022-ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்க செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர் தமிழ் வளர்ச்சி துறை, அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021-2022-ஆம் நிதியாண்டுக்கான துணை மதிப்பீடுகளில், திருத்த / மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (தவ(ம) செ / வ.செ.பொ1)த் துறைக்கு அனுப்பிவைக்குமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சி துறை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8) இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.53182/ நிதி(தவ(ம)செ)/2021, நாள் 29.11.2021-இல் பெறப்பட்ட இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.989 (தொள்ளாயிரத்து எண்பத்து ஒன்பது) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,

அரசு செயலாளர்.

பெறுநர்:

இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை- 8.

அனைத்து மாவட்ட தமிழ் வளர்ச்சி இணை இயக்குநர்கள் / துணை இயக்குநர்கள்.

அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை- 8 / மதுரை.

மாநில கணக்காய்வுத் தலைவர்,சென்னை - 9/18.

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 9,

மாண்புமிகு அமைச்சர் (நிதி (ம) மனித வள மேலாண்மை), சென்னை-9.

மாண்புமிகு அமைச்சர் (தொழில் துறை) அவர்களின்

சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை- 9.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் அவர்களின்

முதன்மை தனிச்செயலர், சென்னை- 9.

நிதி (த.வ.(ம)செ/வ.செ.பொ.I/வ.வI)த் துறை, சென்னை- 9.

இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

29/11/21

அரசு சார்புச் செயலாளர்

29.11.2021

1/3

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - முனைவர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கம் செய்து நூலுரிமைத் தொகையாக ரூ.25,00,000/- வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.1)த் துறை

அரசாணை (நிலை) எண்.186

நாள் 24.12.2021

பிலவ, மார்கழி - 9

திருவள்ளுவராண்டு 2052

படிக்க:

1. முனைவர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளையின் தலைவர் திரு.வி.ஆர்.நெடுஞ்செழியன் மதிவாணன் அவர்களின் கடிதம், நாள் 11.12.2021 மற்றும் 16.12.2021.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.11714/தமிழ் 4/2021, நாள் 20.12.2021.

******

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட முனைவர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளையின் தலைவரும் முனைவர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களது மகனுமான திரு. வி.ஆர்.நெடுஞ்செழியன் மதிவாணன் அவர்கள் முனைவர் நாவலர் நெடுஞ்செழியன் நினைவாக இவரது குடும்பத்தினரால் 2017 முதல் கல்வி அறக்கட்டளை துவங்கப்பட்டு நடத்தப்பட்டு வருவதாகவும், அவர் எழுதிய நற்றிணைக் காட்சிகள், சிந்தனை மலர்கள், பண்பாடு போற்றுவோம், திருக்குறள் தெளிவுரை, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு, திராவிட இயக்க வரலாறு, திருக்குறள் நாவலர் உரை, வாழ்வில் நான் கண்டதும் கேட்டதும் மற்றும் திருக்குறளில் உவமை நயம் ஆகிய நூல்களை நாட்டுடைமையாக்கி முனைவர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களின் புகழினை கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளில் பரப்புரை செய்வதற்கு மேற்படி அறக்கட்டளைக்கு உதவித்தொகை வழங்குவதை மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் தமிழ்நாடு அரசும் உத்தேசித்தவாறு வழங்கும்படி கோரியுள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதத்தில், தமிழ் வளர்ச்சித் துறையால் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர்கள்

எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மரபுரிமையாளர்களுக்கு பரிவுத்தொகை வழங்கப்பட்டு வருகிறதென்றும், அவ்வகையில் இதுவரை 164 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூபாய் 12.62 கோடி நூலுரிமைத் தொகை அரசால் ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதுதென்றும், அவ்வகையில் மறைந்த தமிழறிஞர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கம் செய்யக்கோரி அவரின் மகன் திரு. நெ.மதிவாணன் அவர்கள் கடிதம் அளித்துள்ளதாகவும், எனவே, தமிழறிஞர், நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 31 க்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்தவர், சிறப்புவாய்ந்த நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் கருத்துக் கருவூலங்கள் உலக மக்களை எளிதில் சென்றடையும் வகையில் அவரின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கம் செய்யலாமெனவும், நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கம் செய்யப்பெறுவதற்கு அரசால் வழங்கப்பெறும் நூலுரிமைத் தொகையை அரசு நிலையில் கருதிப்பார்த்து முடிவுசெய்யப் பெறலாமெனவும், இதற்கென 2021-2022 வரவு செலவு மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்பெறவில்லையெனவும், நாட்டுடைமையாக்கப்பட்டமைக்குரிய நூலுரிமைத் தொகையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நேரில் பெறவரும் தமிழறிஞரின் மரபுரிமையர்களுக்கு சிறப்பு செய்யும் பொருட்டும், காசோலை உறை, சிற்றுண்டி, மதிய உணவு, தேநீர், குடிநீர் ஆகியவற்றை வழங்கவும் மற்றும் பிற சில்லரைச் செலவினங்களை மேற்கொள்ளவும் ரூ 5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) 2021-2022 திருத்திய / இறுதித் திருத்திய மதிப்பீட்டில் பெறத்தக்க வகையில் ஒப்பளிப்பு செய்யப்படும் நூலுரிமைத் தொகை மற்றும் சில்லரைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பு தொகுதி - 1, பிரிவுக்கூறு 99 இன் கீழ் முன்பணமாகப் பெறவும், பெற்ற முன்பணத்தை நேர்செய்யவும், தமிழறிஞரின் மரபுரிமையர்களுக்கு பகிர்ந்தளிக்கவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணையிடப்பெறலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

3. அரசின் கவனமான பரிசீலனைக்கு பின்னர், முனைவர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் தனது எழுத்துகளின் வாயிலாக தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய பணிகளுக்கு உரிய அங்கீகாரம் அளிக்கும் வகையில், முனைவர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களின் புகழினை கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளில் பரப்புரை செய்வதற்கு ஏதுவாக, இவரது நூல்களை நாட்டுடைமையாக்கி நூலுரிமைத் தொகையாக ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 பொதுக்கல்வி - 05 மொழி வளர்ச்சி - 800 ஏனைய செலவு - மாநிலச் செலவினங்கள் - AK தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை - தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 309 உதவித் தொகை - 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"

IFHRMS (த.தொ.கு. 2202 05 800AK 30903)

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பெற்ற தொகையினை தமிழ்நாடு நிதிவிதித்தொகுப்பு-I பிரிவுக்கூறு 99-இன்கீழ் முன்பணமாகப் பெறவும், பெற்ற முன்பணத்தை நேர்செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.25,00,000/- 2021-2022-ஆம் நிதியாண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2021-2022-ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர், தமிழ் வளர்ச்சி துறை, அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021-2022-ஆம் நிதியாண்டுக்கான துணை மதிப்பீடுகள், திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (தவ(ம) செ / (வ.செ.பொ1)த் துறைக்கு அனுப்பிவைக்குமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சி துறை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.59766/ நிதி(தவ(ம)செ)/2021, நாள் 24.12.2021-இல் பெறப்பட்ட இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1261 (ஆயிரத்து இருநூற்று அறுபத்து ஒன்று) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

இயக்குநர் (மு.கூ.பொ), தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை- 8.

சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை- 8.

மாநில கணக்காய்வுத் தலைவர்,சென்னை - 9/18.

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 9,

மாண்புமிகு அமைச்சர் (நிதி (ம) மனித வள மேலாண்மை), சென்னை-9.

மாண்புமிகு அமைச்சர் (தொழில் துறை) அவர்களின்

சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை- 9.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் அவர்களின்

முதன்மை தனிச்செயலர், சென்னை- 9.

இயக்குநர் / துணைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,

செய்தி மக்கள் தொடர்பு துறை, சென்னை - 9.

நிதி (த.வ.(ம)செ/வ.செ.பொ I/II/வ.வI)த் துறை, சென்னை- 9.

இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

அரசு சார்புச் செயலாளர்

24/12/21

மே.கு.எண்.தமிழ்4/11714/2021, நாள்:24.12.2021

//அரசாணை வழங்கப்பெறுகிறது//

தமிழ் வளர்ச்சி இயக்குநர் (மு.கூ.பொ)

பெறுநர்:

திரு. நெ. மதிவாணன்
த/பெ. திரு. இரா. நெடுஞ்செழியன் (மறைவு),
எண்.1, டாக்டர் எம்.டி.கே. குத்தாலிங்கம் சாலை,
கூனிமேடு அஞ்சல், இரங்கநாதபுரம்,
கிழக்கு கடற்கரைச் சாலை,
மரக்காணம் - 604 303
விழுப்புரம் மாவட்டம்.